பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 21 சனிக்கிழமை (07-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:11

## சமஷ்டிக் கட்டமைப்புக்குள் அரசியல் தீர்வு

# அரசு - புலிகள் இணக்கம் குறித்து அமெரிக்கா, பிரிட்டன் வரவேற்பு

## இந்திய அரசு மௌனம்

வாஷிங்ரன்,டிசெம்பர்7

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி கட்டமைப்புக்குள் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பது என்று ஒஸ்லோ பேச்சுக்களின் போது அரசும், புலிகளும் இணங்கிக் கொண்டனர். அமெரிக்காவும், பிரிட்டனும் மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவித்துள்ளன. இந்திய அரசு மௌனம் சாதிக்கிறது. இந்தியத் தலைவர்கள் பலர் வரவேற்கிறார்கள். சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

ஒஸ்லோ பேச்சு மிகவும் வெற்றிகரமாக நடந்து பலன் அளித்திருக்கிறது. அதற்காக மகிழ்ச்சி தெரிவிப்பதும் இருதரப்பினரும் கண்ட இணக்கத்தை வரவேற்பதும் போதா. அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரின் பேச்சுக்கு அனுசரணை வழங்கிவரும் நோர்வேயையும் பாராட்டவேண்டும். நன்றியும் தெரிவிக்க வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சின் பேச்சாளரான பிலிப்ரெக்கர் சொன்னார். இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவரும் ஒஸ்லோ மாநாட்டில் அரசும், புலிகளும் அரசியல் தீர்வு சமபந்தமாக கண்ட இணக்கப்பாட்டை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இப்போது கருத்துக்கூற ஜனாதிபதி விரும்பவில்லை

இனப்பிரச்சினைக்கு சமஷ்டிக் கட்டமைப்பில் அரசியல் தீர்வு காண்பது என்று அரசும் புலிகளும் இணக்கம் கண்டுள்ளது பற்றி ஜனாதிபதி இப்போது கருத்துக்கூற விரும்பவில்லை.

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் அதை அறிவித்தார்.

அவர் கூறியதாவது :-

வெறுமனே பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதியால் கருத்து எதனையும் கூறமுடியாது.

அரசின் உத்தியோக பூர்வ விளக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தத் தீர்வை நிச்சயம் மக்கள் வரவேற்பார்கள்!

### ஆனந்தசங்கரி எம்.பி.தெரிவிப்பு



லண்டன்,டிசெ.7

இந்தச்சமஷ்டித் தீர்வை நிச்சயமாக மக்கள் வரவேற்பார்கள் என்று கூறியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

இது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு செய்தி. சிங்கள மக்கள் மத்தியில் நாடு பிரிகின்றது. அதனைப் பிரிப்பதற்காகத்தான் விடுதலைப் புலிகள் போராடுகிறார்கள் என்ற பயம் நீண்ட காலமாக இருந்துவந்தது. நாடு பிரிக்கப்படாது என்ற உணர்வு, நம்பிக்கை சிங்களமக்களுக்கு வந்துவிட்டால் பெருமளவில் இதனை ஆதரிப்பதில் அவர்களுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டித் தீர்வால் டக்ளஸ் மகிழ்ச்சி



லண்டன்,டிசெ.7

சமஷ்டி அமைப்பு மூலம் தீர்வுகாண அரசும் புலிகளும் இணங்கியிருப்பதை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றுள்ளதுடன் மகிழ்ச்சியும் வெளியிட்டுள்ளார். பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இதை அவர் கூறியுள்ளார்.

அப்பேட்டியில் அவர் தெரிவித்தவற்றின் முக்கிய சாராம்சம் வருமாறு:-

இன்று நேற்றல்ல தமிழர் தரப்பில் தந்தை செல்வநாயகம் முதற்கொண்டு இன்றுவரை இதே விடயந்தான் சொல்லப்பட்டு வந்துள்ளது.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், மக்களுக்காக ஆயுத ரீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் போராடிய சகல கட்சிகளுமே இதைத்தான் திரும்பத்திரும்ப சொல்லி வந்திருக்கின்றன. (16ஆம் பக்கம் பார்க்க)

### ஆயுதங்களுடன் தொடர்ச்சியாக

## நெடுந்தீவில் கடற்படை தங்கியிருப்பது உடன்படிக்கையை மீறும் செயலாகும்!

### கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.7

நெடுந்தீவில் கடந்து 21 நாள்களாக கடற்படையினர் ஆயுதங்களுடன் தொடர்ச்சியாக நிலைகொண்டிருப்பது புரிந்துணர்வு உடன்படிக்கையை உதாசீனப்படுத்தும் செயல் என்பதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிக்கும் செயலாகும். ஆகவே கடற்படையினரை உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற விரைவாக நடவடிக்கை எடுக்கவும்.

மேற்கண்டவாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இந்த முறைப்பாட்டை நேற்று அனுப்பியுள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து 10 மாதங்கள் நெருங்குகின்ற நிலையில் நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. னும் ஆயுதக்குழுவினருக்கு பாதுகாப்பு வழங்குகின்றோம் என்ற போர்வையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை விதிகளை மீறிக் கடற்படையினர் நிலைகொண்டிருப்பதனை ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். தொடர்ச்சியாக 21 நாள்கள் கடற் படையினர் அங்கு நிலைகொண்டிருப்பது கடற்படைத் தளத்தை அமைப்பதற்கு ஒத்ததாகும். இச்செயல் புரிந்துணர்வு உடன்படிக்கையை உதாசீனம் செய்யும் செயலாகும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### 21 நாள்களாக மக்கள் போராட்டம் நீடிப்பு

## கூட்டமைப்பு எம்.பிக்கள் மூவர் நேற்று நெடுந்தீவுக்குச் சென்றனர்

### பிரதமரைச் சந்தித்துப் பேசுவதாக மக்களிடம் உறுதி

யாழ்ப்பாணம்,டிசெ.7

நெடுந்தீவில் தரையிறக்கப்பட்ட ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து வெளியேற்றுவது தொடர்பாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 9ஆம் திகதி பிரதமரைச்சந்தித்து கலந்துரையாட இருக்கின்றனர்.

நேற்று நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அ.விநாயகமூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோர் இத்தகவலை அங்குள்ள மக்களிடம் தெரிவித்தனர்.

நேற்று மழை பெய்த போதும் மக்கள் நனைந்தவாறு போராட்டத்தில் பங்குகொண்டனர்.

21ஆவது நாளாக மறியல் போராட்

(16ஆம் பக்கம் பார்க்க)

### முடிவுகளை வெளியிடுவதில் ஆணைக்குழுக்கள் அசமந்தம்

## விசாரணைக்கு ஒத்துழைப்பதற்கு பாதுகாவலர் சங்கம் நிபந்தனை

யாழ்ப்பாணம்,டிசெ.7

குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட குழு நடத்தவுள்ள விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குப் பாதுகாவலர் சங்கம் நிபந்தனை விதித்துள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள காணாமற்போனோர் பற்றிய விசேட குழுவின் விசாரணைகளுக்கு நிபந்தனையுடன் கூடிய ஒத்துழைப்பையே பாதுகாவலர் சங்கம் வழங்கும் என்று பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

விசாரணைகள் குறித்த விவரங்கள் அடங்கிய நகல் உடனுக்குடன் பாதுகாவலர் சங்கத்திடம் கையளிக்கப்படவேண்டும். இதனை ஏற்றுக்கொள்ள ஆணைக்குழு சம்மதித்தால் மட்டுமே விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கமுடியும் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாக ஏற்கனவே பல அமைப்புகள் நடத்திய விசாரணைகளின் முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை என்ப

(16ஆம் பக்கம் பார்க்க)

### எயார்லங்கா மோசடி விசாரணை பூர்த்தியானது

எயார்லங்கா நிறுவனத்தை தனியார்மயப்படுத்தியபோது இடம்பெற்றதாகக்கூறப்படும் மோசடிகள் தொடர்பான விசாரணை நிறைவுபெற்றுள்ளது.

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி செயலாளர் நாயகம் காலஞ்சென்ற காமினி அத்துக்கோறளை இந்த முறைப்பாட்டைச் செய்திருந்தார்.

சட்ட ஆலோசனை பெறப்பட்டதும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமென லஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

## இலங்கைக்கான ஆதரவு மாநாடு நடத்த ஜப்பான் பிரதமர் விருப்பம்

இலங்கைக்கு ஆதரவு திரட்டும் வகையில் சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஜப்பான் விருப்பம் கொண்டுள்ளதாக அந்நாட்டுப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு தற்பொழுது விஜயம் மேற்கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜப்பானியப் பிரதமர் இதனைத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கையின் சமாதான முயற்சிக்கு சர்வதேச நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்திருக்கின்றன. சமாதான முயற்சிகள் வெற்றிபெற உதவுவதற்கும் அந்த நாடுகள் தயாராக உள்ளன.

எனவே அந்த நாடுகளை ஒன்றிணைத்து சர்வதேச மாநாடு ஒன்றினை நடத்துவதன் மூலம் அந்த நாடுகளிடமிருந்து இலங்கைக்கான ஆதரவையும், உதவியையும் பெற்றுக் கொடுப்பதற்கு ஜப்பான் திட்டமிட்டிருக்கின்றது.

இதற்கான முன்னோடியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜப்பான் தனது நாட்டுப் பிரதிநிதி ஒருவரை நியமித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அரசியல்வாதிகள் தோற்றுவித்த பிரச்சினை அவர்களாலேயே தீர்க்கப்பட வேண்டும்!

## சியோட்டோ பல்கலைக்கழகத்தில் பிரதமர் ரணில்

"அரசில்வாதிகளினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினை, அரசியல்வாதிகளினாலேயே தீர்க்கப்பட வேண்டும்" என்ற நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மத வழியாக ஏற்பட்ட முரண்பாடுகள் பின் அரசியல் வாதிகளால் அரசியல் பிரச்சினையாக்கப்பட்டு இறுதியில் ஆயுதம் ஏந்திப்போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே அதனை அரசியல் ரீதியாகத்தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டுள்ளோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

சியோட்டோ ரிட்சுமெய்கன் சர்வதேசப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று ஜப்பானிய பல்கலைக்கழக சமூகத்தினரால் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. கடந்த மூன்று தினங்களாக அரசியல் தலைவர்களுடன் டோக்கியோவில் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று ஜப்பானின் முன்னைய தலைநகரான சியோட்டோவுக்கு வந்து சேர்ந்தார்.

சியோட்டோ பல்கலைக்கழகத்தில் 70 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 700 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களில் 36பேர் இலங்கை மாணவர்கள்

வரவேற்பு வைபவத்தின் பின் பல்கலைக்கழக வேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

20 வருட யுத்தம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நிறுத்தப்பட்டுள்ளது. குண்டுவெடிப்புகளுக்கும், யுத்த அச்சுறுத்தல்களுக்கும் இப்போது இடமில்லை. மக்கள் அமைதியாக வாழ்கின்றனர்.

இதனால் ஜப்பானிய அரசு இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப பல ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கி வருகின்றது. ஆசிய பிராந்தியத்தில் யுத்தம் நிறுத்தப்படவேண்டும். ஆசிய பிராந்தியம் ஒரு சமாதானப் பிராந்தியமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஜப்பானிய பல்கலைக்கழகம் ஆர்வமாக இருக்கின்றது.



இலங்கையில் மூன்று சமூகங்களும் நல்லுறவுடன் வாழும் நிலையை ஏற்படுத்துவதற்கு சகல ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்று கலந்துரையாடலில் பலரும் உறுதியளித்தனர்.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட பல்கலைக்கழகப் பேராசிரியர்களுள் ஒருவரான மொண்டோகாஸிம் பேசும் போது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை வரவேற்கின்றோம். அதேவேளை, அப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

அங்கு மாணவர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பிரதமர் பதில் அளித்தார்.

இதனை தொடர்ந்து பிரதமர் சியோட்டோவில் அமைந்துள்ள சரித்திரப்பிரசித்திபெற்ற வழிபாட்டுத்தலங்களுக்கும் விஜயம் செய்ததுடன் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டார். (ஓ)

## ஹக்கீமுக்கு ஆதரவு தெரிவித்து அம்பாறையில் நேற்று பேரணிகள்

அம்பாறை,டிசெ.7

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு ஆதரவு தெரிவித்தும் - அமைச்சர் அதாவுல்லாவின் செயலைக் கண்டித்தும் - அம்பாறை மாவட்டத்தில் மருதமுனை, பொத்துவில் பகுதிகளில் நேற்று பேரணிகள் நடத்தப்பட்டன.

மருதமுனை, பொத்துவில் பள்ளிவாசல்களுக்கு முன்பாக தொழுகை முடிவடைந்த பின்னர் நண்பகலில் இந்தப் பேரணிகள் ஆரம்பித்தன.

பொத்துவில் பெரிய பள்ளிவாசலில் நேற்றுக்காலை தொழுகைக்குப் பின்னர் புறப்பட்ட பேரணி, பிரதான வீதியூடாக இரண்டு கிலோ மீற்றர்கள் தூரத்துக்கு சென்றது. பிற இடங்களிலும் இவ்வாறே பேரணிகள் நடந்தன.

இப்பேரணிகளில் அமைச்சர் அதாவுல்லாவுக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் அவரின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

அங்கு எழுப்பப்பட்ட கோஷங்கள் சில வருமாறு :-

★ றோவின் வலையில் சிக்கிய அதாவுல்லாவின் ஆட்டம் எங்கே?

★ ஹக்கீமின் சாணக்கியத்தைப் புரியாத அதாவுல்லா.

★ தலைமைத்துவ ஆசைக்கு தனி அலகு என்ற மகுடமா?

(ஓ-3-14)

## யாழ். பொது நூலகத்தை மேயரே திறக்க வேண்டும்!

### மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

புனரமைக்கப்பட்டிருக்கும் யாழ். பொது நூலகத்தை யாழ். மாநகர சபை மேயர் செல்லன் கந்தையனே திறந்து வைக்கவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுனதினம் யாழ். இந்து விடுதியில் மேயர் செல்லன் கந்தையன் தலைமையில் நடைபெற்றது.

நெடுந்தீவு மக்கள் போராட்டம் என்ற போர்வையில், தூண்டிவிடப்பட்ட கும்பல் ஒன்று ஜனநாயகத்தை மதிக்காத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இது மிகவும் கண்டனத்துக்குரியது.

- என்று கண்டனப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார் ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்மாநகரசபை உறுப்பினர் கிங்ஸ்லி கணேசன்.

இப் பிரேரணையை ஈ.பி.ஆர்.எல்.எவ்.அணியின் உறுப்பினர் மனுவல் மங்களநேசன் ஆமோதித்தார். ஆயினும் இப் பிரேரணை சபையில வாதப் பிரதி வாதங்களுக்கு உட்பட்டது. கூட்டமைப்பின் சபை உறுப்பினர்கள் இப பிரேரணையை ஆராய்வதற்கு கால அவகாசம் கோரினர் இதனால் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

☆யாழ்.பொது நூலகம் உட்பட மாநகர சபையின் சொத்துக்கள் அனைத்தையும் சபை மீளப்பெறுப் பேறக வேண்டும்.

☆யாழ்.சுப்பிரமணியம் பூங்காவின் ஆரம்பகட்ட திருத்த வேலைகளை எதிர்வரும் ஜனவரி மாத பிற்பகுதிக்கு முன்னர் ஆரம்பித்தல்.

☆யாழ்மாநகர சபையின் பொறுப்பில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தை இந்து கலாசார அமைச்சு சுவீகரிப்பதை தடுத்து நிறுத்துதல்.

(ஐ-9)

## வடக்கு - கிழக்கில் விகாரைகளை அரசுதான் புனரமைக்க வேண்டும்

### தினேஸ் குணவர்த்தன எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,டிசெ.7

வடக்கு - கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளைப் புனரமைக்கும் தகுதி புலிகளுக்குக் கிடையாது. எனவே புனரமைப்பு நடவடிக்கைகளின் போது அந்தப் புனிதப் பணியை அரசாங்கமே பொறுப்பேற்று நடத்தவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்த்தன.

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொணடு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கையளிக்காதவரை - ஈழக்கோரிக்கையைக் கைவிடாதவரை - அரசு புனர்வாழ்வு, புனரமைப்பு சம்பந்தமாக அவர்களோடு பேசக்கூடாது. வடக்கு - கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளைப் புனரமைக்கும் தகுதி புலிகளுக்குக் கிடையாது. எனவே, அரசாங்கம்தான் அதனைப் பொறுப்பேற்று நடத்தவேண்டும் - என்றார்.

(ஐ-4)

## தம்புள்ள கிரிக்கெட் போட்டிக்கு யாழ்.அணியும் செல்லும்

### அணித் தெரிவு திங்கள் முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

14 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் தம்புள்ளவில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் இடம்பெறும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் பங்குபற்றவிருக்கின்றது.

இந்த அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ்.பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோரின் அனுமதியுடன் 1.1.88 இற்குப் பின்னர் பிறந்தவர்கள் இந்தப் பயிற்சியில் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## பிந்துனுவெவ படுகொலை வழக்கு 37சந்தேக நபர்களுக்குப் பிணை

கொழும்பு,டிசெ.7

பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 39 சந்தேக நபர்களில் 37பேர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தலா 5 ஆயிரம் ரூபா கொண்ட இரண்டு உத்தரவாதப் பிணைகளில் செல்ல இவர்களுக்கு மூன்று நீதிபதிகள் கொண்டகுழு அனுமதி வழங்கியது. இவர்களைப் பிணையில் விடுவிக்கலாம் என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்ததையடுத்தே இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஓ-4)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,டிசெ.7

காரைநகர் வியாவில் ஐயனார் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை ஐயப்பசுவாமி வழிபாடு நிகழவுள்ளது.

நிகழ்வின்போது விஷேட அபிஷேகம், பஜனை, படிப்பூஜை என்பன நடைபெறும்.

இரா.செல்வவடிவேலின் 'ஐயப்பசுவாமிகளின் சிறப்பு' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். (ந-15)

★ ★ ★

தென்மராட்சி,டிசெ.7

சாவகச்சேரி கச்சாய் வீதி, ஞான வீரபத்திரர் ஆலயத்தில் எதிர்வரும் 10.ஆம் திகதி பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று தினமும் பூஜைகள் நடைபெறவுள்ளன.

யுத்த அனர்த்தங்களால் ஆலயக் கட்டடங்கள் சேதமடைந்தபோதிலும் விக்கிரகங்கள் சேதமின்றி காணப்பட்டதையடுத்து இரண்டரை வருடங்களின் பின்னர் பூஜைகள் நடககவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஜனவரி மாதத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயக் கட்டடங்கள் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.7

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கஜமுகாசூரன் போர் இடம்பெறவுள்ளது. நாளைமறுதினம் பிள்ளையார் பெருங்கதை முடிவுறும். (எ-90-12)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.7

மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயில் பெருங்கதை உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி உற்சவத்திற்குச் செல்லும் பக்தர்களை அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு முன் தெல்லிப்பழை தடைமுகாமிற்கு வருகை தருமாறு அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

(எ-5)

## ஈ.பி.டி.பி.அலுவலகங்கள் மீதான தாக்குதல் புலிகளின் தூண்டுதலிலேயே நடக்கிறது!

### அக்கட்சியின் அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

விடுதலைப் புலிகளின் தூண்டுதலின்பேரிலேயே ஈ.பி.டி.பி. அலுவலகங்கள் மீது தாக்குதல்களை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு நேற்று ஈ.பி.டி.பி. சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கும் அச்சுவேலி, சுன்னாகம், மல்லாகம், மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) அலுவலகங்களைத் தாக்கி சேதப்படுத்தும் நோக்கில் நேற்று (5ஆம் திகதி) காலையில் புலிகளால் பலாத்காரமாக சிலர் அழைத்துச் செல்லப்பட்டு உள்ளனர். பலாத்காரமாக அச்சுறுத்தி வர்த்தக நிலையங்களை மூடச் செய்த புலிகள் பேருந்துக்களில் பயணம் செய்தவர்களை வலுக்கட்டாயமாக இறக்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட நிர்ப்பந்தித்து உள்ளனர். அச்சுவேலியில் ஒட்டோ வாகனம் ஒன்றில் ஒலிபெருக்கி மூலம் அவதூறுப் பிரசாரத்தை முழங்கியபடி வந்த சிலர் பொலிஸாரின் எதிர்ப்பைக் கண்டதும் வாகனத்தையும் கைவிட்டு ஓடியுள்ளனர். இந்த வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. மானிப்பாய், சுன்னாகம், மல்லாகம் அலுவலகங்களை நோக்கி 'றோசா' ரக பஸ்கள் மூன்றில் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அவதூறு வார்த்தைகளால் ஏசியதுடன் தாக்குதல் நடத்தவும் முற்பட்டுள்ளனர். மல்லாகம் பகுதியில் வீதியில் ரயர்களை போட்டு எரித்த இக்கும்பல் கற்களை வீசி அலுவலகத்தை தாக்க முற்பட்டபோது பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகம் செய்துள்ளனர். மானிப்பாயிலும் அலுவலகத்தை நோக்கி கற்களை வீசித் தாக்குதல் நடத்தி அலுவலக ஜன்னல் கண்ணாடிகளை சேதப்படுத்தியுள்ளனர். இதனை அடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் குண்டாந்தடிப் பிரயோகம் என்பவற்றைச் செய்துள்ளனர்.

மேலும் ஊர்காவற்றுறை மற்றும் வேலணை அலுவலகங்களை நோக்கி இவ்வாறு சிலர் ஏவி விடப்பட்டிருந்தனர். எனினும் இவ்வாறு சென்றவர்கள் மீது ஊர்மக்கள் தாக்குதல் நடத்தமுற்படவே கலகக்காரர்கள் பின்வாங்கித் தப்பி ஓடியுள்ளனர். புலிகளின் இத்தகைய ஜனநாயக விரோத போக்கை கண்டிக்கவும் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளை நிலை நாட்டவும் பெருந்திரளான மக்கள் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை ஊர்காவற்றுறை, வேலணை அலுவலகங்களை நோக்கி ஏவி விடப்பட்டவர்களுக்கு எதிராக ஊர் மக்கள் தாக்குதல் நடத்தியமை நன்கு புலப்படுத்துகின்றது என்றுள்ளது.

## பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,டிசெ.7

ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படவுள்ள மத்தியஸ்தர் பரீட்சையில் தோற்ற விண்ணப்பித்தவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று முற்பகல் 10மணி முதல் தேவரையாளி இந்துக் கல்லூரியின் தொழில்நுட்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

(ஓ-5)

# இஸ்ரேலியரின் தாக்குதலில் காஸாவில் 10 பலஸ்தீனர் பலி!

## டாங்கிகளால் இரு வீடுகள் நிர்மூலம்

ஜெருசலேம்,டிசெ.7

பலஸ்தீன அதிகாரசபையின் கட்டுப்பாட்டிலுள்ள காஸா பகுதியில் அமைந்திருக்கும் அகதி முகாமை இஸ்ரேலியப் படைகள் சுற்றிவளைத்த போது நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் 10 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். மேலும் 20இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

அல் - புஜிஜுஜ் என்ற அந்த அகதி முகாமில் இருந்த இருமாடிக் கட்டடம் ஒன்றை இஸ்ரேலிய டாங்கிகள் தாக்கித் தகர்த்து அழித்ததாலும் கண்மூடித்தனமாகச் சுட்டதாலுமே உயிரிழப்புக்களும் காயங்களும் ஏற்பட்டன. உயிரிழந்தவர்களில் பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் இருவரும் அடங்குவர்.

உயிரிழந்தவர்களில் 9பேர் அந்த இடத்திலேயேயும் பெண் ஒருவர் வைத்தியசாலையிலும் இறந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்ரேலின் இந்த இராணுவ நடவடிக்கையின் இலக்காக தீவிரவாதிகளின் இரு வீடுகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. தனது படைகள் ஹெலிகளின் உதவியுடன் அகதி முகாமில் இருந்த தீவிரவாதிகளின் இலக்குகள்மீதும் தீவிரவாதத்துக்கு பின்துணை வழங்குபவர்கள்மீதும் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.


இஸ்ரேலியர்களின் தாக்குதலில் நீர்மூலமாகியுள்ள தமது வீடுகளைப் பார்வையிடும் பலஸ்தீனர்கள்



இஸ்ரேலின் இந்தத் தாக்குதலை பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் உதவியாளரான நபில் அபு ருடினா தெரிவித்தார். "நிராயுத பாணிகளான எமது மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள புதிய - மிலேச்சத்தனமான - குற்றச் செயல் இது" - என்று அவர் தெரி வித்தார்.

காஸாவில் பலஸ்தீனர்கள் ஊடாக அல்கெய்டா அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராகச் செயற்பட்டு வருவதாக அந்நாட்டுப் பிரதமர் ஏரியல் ஷெரோன் கருத்துத் தெரிவித்த சில மணி நேரங்களின் பின்னர் இராணுவம் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை -

இஸ்ரேலிய டாங்கிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் சிலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# போர் மூளுமா?

நியூயோர்க்,டிசெ.7

ஈராக் தன்னிடம் உள்ள ஆயுதங்கள் குறித்த முழு விவரங்களையும் ஐ.நாவிடம் சமர்ப்பிப்பதற்கான இறுதிக் காலக்கெடு இன்றுடன் நிறைவடைகின்றது.



இன்று ஈராக் சமர்ப்பிக்கும் விவரங்களில் பேரழிவு தரும் ஆயுதங்கள் பற்றிய விவரம் பெரும்பாலும் இடம் பெறாது என்றே கருதப்படுகின்றது. ஈராக் வெளியிடும் ஆயுதங்கள் தொடர்பான விவரங்களை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளாவிட்டால் அமெரிக்கா உடனடியாகப் போரைத் தொடங்கும் என்று கூறப்படுகின்றது.

வெள்ளை மாளிகையில் இருந்து உத்தரவு கிடைத்ததும் வளைகுடாப் பகுதியில் தயார் நிலையில் இருக்கும் அமெரிக்கப் படைகள் சிறுதாமதம்கூட இல்லாமல் தமது தாக்குதலை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தாக்குதலுக்கான முழுத் தயார் நிலையில் வளைகுடாப் பகுதியில் 3 விமானந் தாங்கிக் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கப்பலிலும் 75 போர் விமானங்கள் உண்டு. போர் ஆரம்பித்தால் அதில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் ஈடுபடுத் தப்படுவர்.

அவர்களில் 55,ஆயிரம் பேர் ஏற்கனவே வளைகுடாப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளனர். தாக்குதல் ஆரம்பித்த சில வாரங்களில் மேலும் 60 ஆயிரம் பேர் வளைகுடாவுக்கு அனுப்பப்படுவர். (ம)

# இந்தோனேஷியத் தீவில் இரு குண்டுவெடிப்புகள்

## மூன்று பேர் உயிரிழந்தனர்

ஜகார்த்தா,டிசெ.7

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதி மாகாணமான தென் சுலாவிஸியின் தலைநகரான மகாஸாரில் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டனர்.

சம்பவம் இடம்பெற்ற இடம் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து ஆயிரம் மைல்கள் கிழக்காக அமைந்துள்ளது.

உள்ளூர் நேரப்படி மாலை 6.45 மணியளவில் விரைவுணவு (Fast food) நிலையமான 'மக்டொனால்ட்'டில் முதல் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. உணவு நிலையத்தில் சனக்கூட்டம் நிறைந்திருந்த நேரத்தில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றன. எனினும், தெய்வாதீனமாகப் பெருமளவு உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மற்றைய குண்டு வெடிப்பு 'மக்டொனால்ட்'டில் இருந்து சிறிது தூரம் தள்ளி உள்ள வெறுமையாக இருந்த கார் காட்சி அறை ஒன்றில் இடம்பெற்றது. இது இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. இதில் எவருக்கும் காயங்களோ இழப்புக்களோ ஏற்படவில்லை.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு எவரும் உரிமைகோரவில்லை. (ம)

# மியான்மரின் சர்வாதிகாரி மரணம்!

ரங்கூன்,டிசெ.7

மியான்மரின் (பர்மா) முன்னாள் சர்வாதிகாரி காரி நீவின் தனது 91 ஆவது வயதில் மரணம் அடைந்தார்.

20 ஆண்டு காலம் மியான்மரில் சர்வதிகார ஆட்சி புரிந்த அவர் கடந்த மார்ச் மாதம் முதல் தற்போதைய இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

தற்போதைய இராணுவ ஆட்சியை கவிழ்க சதி செய்ததாக அவரது மூன்று பேரன்கள் மற்றும் மருமகன்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இதனையடுத்தே நீவின் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். காவலில் இருக்கும்போதே அவர் இறந்துவிட்டார். அதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

செழிப்பாக இருந்த மியான்மரின் பொருளாதாரத்தையும் அரசியலையும் சீரழித்தவர் நீவின் என்ற குற்றச்சாட்டுக் கூறப்படுகிறது. (ம)

# இஸ்ரேலைத் தாக்க அல்கெய்டா திட்டம்

## 'வாஷிங்ரன் போஸ்ட்' தகவல்

வாஷிங்ரன்,டிசெ.7

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதற்கு இலக்கு வைத்துள்ளதாக அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை நேற்று வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகளை மேற்கோள்காட்டி அந்தப் பததிரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. 'முஜாஹுர்'தீன். நெற் (www.mojahedoon.net) என்ற இணையத் தளத்தை ஆதாரமாகக் கொண்டே அதிகாரிகள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் வியாழனன்று கருத்து வெளியிடும்போது, காஸாவில் அல்கெய்டா அமைப்பு செயற்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்தார். அவரது கருத்து வெளியாகிய ஒரு நாளின் பின்னர் 'வாஷிங்ரன் போஸ்ட்' இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஆனால், பலஸ்தீனமும் லெபனானும் இஸ்ரேலின் குற்றச்சாட்டை மறுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பெற்றோலிய நாடான வெனிசுலா வேலைநிறுத்தத்தால் முடங்குகிறது

லண்டன்,டிசெ.7

உலகின் பெற்றோலிய உற்பத்தியில் ஐந்தாவது இடம் வகிக்கும் வெனிசுலா அரசுக்கு எதிரான வேலைநிறுத்தப் போராட்டத்தால் முடங்கிப் போக நேரிட்டுள்ளது.

பெற்றோலிய உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பில் பிரதான இடம் வகிக்கும் இந்த நாட்டில் பெற்றோலிய உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட பணியாளர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இணைந்துள்ளனர். இதனால், நாட்டின் பொருளாதாரம் சீருலையும் அபாயம் தோன்றியுள்ளது.

முன்னாள் புரட்சி வீரரும் அதிபருமான ஹுகோசவாஸ் தனது ஆட்சி குறித்து சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து எதிர்க்கட்சியினர் பொது வேலைநிறுத்தத்திற்கு கடந்த வாரம் அழைப்பு விடுத்தனர். இந்த வேலைநிறுத்தத்தின் ஐந்தாம் நாளான நேற்று பெற்றோலிய ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதில் பெரும் தேக்கநிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோலியத்துறை அதிகாரிகள் அறிவித்தனர்.

பெற்றோலிய ஏற்றுமதியில் ஐந்தாவது இடம் விகிக்கும் வெனிசுலாவின் பெற்றோலியக் கொள்கலன் கப்பல்கள் கடலில் நங்கூரமிட்ட நிலையில் அதன் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர்.

-பெற்றோலிய ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படாவிட்டால் அவற்றுக்கான நஷ்டஈடுகளை வழங்குவதில் வெனிசுலா பெரும் பொருளாதார பின்னடைவுகளைச் சந்திக்கும் என்றும் - அதனால் சீர்ப்படுத்தவே முடியாத ஒரு தாக்கத்தை நாடு சந்திக்கும் என்றும்- பெற்றோலியத்துறை அமைச்சர் பெர்னார்டோ அல்வாஜ் எச்சரித்துள்ளார். ஆனால், கோரிக்கை நிறைவேறும்வரை தமது போராட்டம் தொடரும் என்று தொழில் சங்கங்களும் வர்த்தக கூட்டமைப்புகளும் தெரிவித்துள்ளன.

இது ஒருபுறம் இருக்க இராணுவத் தினரைப் பணியில் ஈடுபடுத்தி பெற்றோலிய ஏற்றுமதியைத் தடை இன்றித் தொடர அரசு முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் வன்முறைகள் வெடிக்ககூடும் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

பெற்றோலிய வளம் மிக்க வெனிசுலாவின் சனத்தொகை 2 கோடி 35 லட்சம் ஆகும். இவர்களில் 85 வீதமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஆஸ்திரேலியாவின் தலைநகரம் தீச்சுவாலையால் சூழப்பட்டது!

சிட்னி,டிசெ.7

ஆஸ்திரேலிய தலைநகரான சிட்னியைச் சூழவுள்ள பகுதிகளில் காட்டுத்தீ பெருமளவில் பரவியுள்ளதால் நகரம் முழுவதும் தீப்பிளம்புகளால் சூழப்பட்டுள்ளது. தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினர் பெருமளவில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளபோதும் தீ கட்டுக்கடங்காமல் தொடர்ந்தும் பரவி வருவதாகக் கூறப்படுகின்றது. கடந்த 30 வருடங்களில் சிட்னியில் இவ்வாறு பெருமெடுப்பில் காட்டுத்தீ பரவுவது இதுவே முதற்றடவை.

நகரத்தைச் சூழ தீ கொழுந்து விட்டு எரிவதால் அங்கு கடும் வெப்பம் நிலவுகின்றது. நேற்றுமுன்தினம் இரவில் கொஞ்சம் மழை பெய்தது. இதனால் நகரில் வெப்பத்தின் அளவு குறைந்தது. எனினும் தீநாக்குகள் கட்டுப்படவில்லை.

நகரின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் தீ கட்டுக்கடங்காமல் மேலும்மேலும் பரவிக்கொண்டே செல்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இப்பகுதிகளில் எல்லாம் தீயைக் கட்டுப்படுத்துவதற்காக 3,ஆயிரம் தீயணைப்புப் படையினர் போராடி வருகின்றனர். தண்ணீரைப் பீச்சியடிக்கும் ஹெலிகளும் தண்ணீர் பவுஸர்களும் பெருமளவில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.


தீ அணைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்

தீயினால் ஏற்பட்ட வெப்பத்தைத் தாங்கமுடியாமல் ஆயிரக்கணக்கான மக்கள் நகரத்தைவிட்டு வெளியேறியுள்ளனர். இதுவரை காட்டுத் தீயினால் இருவர் உயிரிழந்துள்ளனர்.

சிட்னிக்கு 90கிலோமீற்றர் மேற்கே இருக்கும் நீல மலைகள் என்ற பகுதியில் பல நூற்றுக்கணக்கான வீடுகள் தீயில் எரிந்து சாம்பராகியுள்ளன. சிட்னியின் வடக்குப் பகுதியில் தீ தேசிய பூங்கா ஒன்றை எரித்து நாசம் செய்துள்ளது.

தீயை அணைப்பதற்காக தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் ஹெலி புறப்படுகிறது.



இந்தத் தீயினால் கடந்த இருபது முப்பது வருடங்களில் சிட்னி எதிர்நோக்காத சுற்றுச்சூழல் ஆபத்தை எதிர் நோக்குவதாக தீயணைப்புப் படை ஆணையாளர் பில் கொப்பபேர்க் தெரிவித்தார்.

சிட்னியில் இவ்வாறு காட்டுத் தீ ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக நீண்டகாலமாகவே வீதிகளில் பயணிப்போர் சிகரெட் பிடிப்பதோ தகுந்த பாதுகாப்பற்ற முறையில் எரிபொருள்களை எடுத்துச் செல்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. இந்த விடயத்தைக் கண்காணிப்பதில் பொலீஸார் தீவிர ஈடுபாடு காட்டி வருகின்றனர். ஆனால், தற்போதைய காட்டுத் தீ பரவிய இரவில் எரியூட்டக்கூடிய பொருள்களுடன் எவரும் செல்லவில்லை என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு கிறிஸ்மஸின் போதும் சிட்னியைச் சூழவுள்ள பகுதிகளில் இவ்வாறு காட்டுத் தீ பரவியது. இதில் 7லட்சத்து 77,ஆயிரம் ஹெக்ரேயர் பிரதேசம் தீயில் கருகி நாசமாகியது. சுமார் 200 வீடுகள் முற்றாக அழிந்து போயின. இம்முறை ஏற்பட்டுள்ள தீயினால் இதை விடவும் மிகப்பெருமளவில் சேதங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

# நாடாளுமன்றத்தில் வியாழனன்று ஈ.பி.டி.பிக்குப் பலத்த சாட்டை!

நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு ஆரம்பமான அமர்வுக்கு குழுக்களின் பிரதித் தலைவர் ஸ்ரீ அந்ராஹென்னதி தலைமை தாங்கினார். உறுப்பினர்களும் குறைவாகவே வருகை தந்திருந்தனர்.

பொலிஸ் நிலையங்களில் பொது மக்கள் மேற்கொண்ட புகார்கள் பற்றிய விசாரணைகள் தொடர்பாக நான்கு கேள்விகளைப் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வாவும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் எழுப்பியிருந்தனர்.

இவற்றுக்கு உள்துறை, கிறிஸ்தவ பண்பாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, முறைப்பாடுகள் தொடர்பாக முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனப் பதிலளித்தார்.

இவரது பதில் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எம்.பிக்கு திருப்தி தரவில்லை. இன்றுடன் நீங்கள் பதவிக்கு வந்து ஒரு வருடமாகிறது. பொறுப்புடன் நடந்தால்தான் பதவியில் நீடிக்கலாம். இல்லையேல்... எனச் சிரித்தவாறே கூறினார்.

நாம் எமது ஆட்சியின் ஒரு வருட நிறைவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம். நீங்கள் இன்றைய தினத்தை எண்ணி துயரம் அடைவதில் வியப்புக்கு இடமில்லையென தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஹாஸ்யமாகப் பதிலளித்தார். சபையில் கலகலப்பு உண்டாயிற்று.

நேற்றுமுன்தினம் சபையில் காலை 10.15முதல் பிற்பகல் ஒரு மணிவரை சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் எதுவித குறுக்கீடுகளுமின்றி அமைதியாக நடைபெற்றது. எதிர்க்கட்சி சார்பில் வி.புத்திரசிகாமணி விவாதத்தை ஆரம்பித்து, சூழல் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அரச தரப்பு எம்.பிக்கள் பலரும் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர் ருக்மன் சேனநாயக்கவைப் பாராட்டினர். அவரது பணிகள் சிறப்பாகத் தொடர்கின்றன என புகழாரம் சூட்டினர். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உரைகளும் அந்தக் கருத்தை வரவேற்பனவாகவே அமைந்திருந்தன.

அமைச்சர் ருக்மன் சேனநாயக்க பதிலளித்து உரையாற்றினார். இங்கு சர்ச்சைக்குரிய விடயமானது சுற்றாடலின் பாதுகாப்புக்கு சவால் விடும் பொலித்தீன் பைகளாகும். இவற்றை முற்றாக ஒழிக்க மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். சூழல் பாதுகாப்பு பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்படும் எனவும் கூறினார்.

பிற்பகல் ஒரு மணிக்கு விவாதம் நிறைவுற்றது. சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டினை சபை ஏற்றுக்கொண்டது.

மதிய உணவு நேரத்துக்குப் பின்னர் பிற்பகல் ஒன்றரை மணிமுதல் மூன்றரை மணிவரை நாடாளுமன்ற விவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நடைபெற்றது.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வருடன் சபையின் இருதரப்பிலும் பதினொரு உறுப்பினர்கள் அமர்ந்துள்ள நிலையில், விவாதத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி. மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஆரம்பித்து உரையாற்றினார். அமைச்சர் அஸ்வரின் பணிகளை அவர் வரவேற்றார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி. ரிசட் பத்திர பேசுகையில், நாடாளுமன்றம் ஆரம்பமாவதற்கு முன்னரே வருகைதந்து, நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடிந்த பின்னர் விடைபெற்றுச் செல்லும் ஒரேயொரு அமைச்சர் அஸ்வர் எனக் கூறினார். அரச, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரின் உரைகளும் அஸ்வரைப் பாராட்டுவனவாகவே அமைந்தன.

ஜே.வி.பி. உறுப்பினர் நிஹால் கலப்பதி உரையாற்றுகையில், எம்.பிக்கள் மக்களின் நலன்கருதிச் செயற்படவேண்டும். இவர்களுக்குச் சபைக்கு வரும் நாளொன்றுக்கு 500 ரூபா அலவன்ஸ் வழங்கப்படுகிறது. நல்ல சம்பளம்; பல சலுகைகள் கிட்டுகின்றன. சபையில் தூங்கி வழிவதற்கு இது வழங்கப்படவில்லை எனச் சாடினார்.

ஐக்கிய தேசிய முன்னணி எம்.பி. எம்.எம்.மஹ்ரூப் இதற்கு எதிரான கருத்தை சபையில் முன்வைத்தார். பல சிரமங்களுக்கு மத்தியில் எம்.பிக்கள் நாடாளுமன்றம் வருகிறார்கள். வாக்காளர்கள் அவர்களைச் சந்திக்கவரும்போது தங்குவதற்கு இடமளிக்கவேண்டும். நிறையப் பணச் செலவு ஏற்படுகிறது. இறுதிக் காலத்தை அவர்கள் கடன்காரர்களாகவே கழிக்கின்றனர் என அனுதாபத்தொனியில் உரையாற்றினார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் அஸ்வர் பதில் உரையாற்றும்போது, சபையில் இரு தரப்பினரும் மேசையில் தட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர். நாம் அனைவரும் இணைந்து நாடாளுமன்ற சம்பிரதாயங்களைப் பேணுவோம் என அழைப்பு விடுத்தார் அஸ்வர். மூன்றரை மணிக்கு நாடாளுமன்ற விவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு சபையில் நிறைவேறியது.




இதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைகள், அரச போக்குவரத்து, விமானத்துறை அமைச்சுக்கான விவாதத்தினை ஆரம்பித்து முன்னைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் போக்குவரத்து அமைச்சராகப் பணிபுரிந்த தினேஷ் குணவர்த்தன உரையாற்றுகையில், போக்குவரத்து சபையில் ஊழல்கள் நிலவுகின்றன என்று அரசாங்கத்தைச் சாடினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களான கே.துரைரத்தினசிங்கம், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அமைச்சர் தி.மகேஸ்வரன் முதலானவர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் போக்குவரத்துத் துறையில் நிலவும் குறைகளைச் சுட்டிக்காட்டினர்.

போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன பதிலளித்துப் பேசுகையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப்படும். அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் அதாவுல்லா, அமைச்சின் நடவடிக்கைகள் பற்றி விவரித்துவிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் போராட்டத்தில் அசத்தியம் தோற்கும், சத்தியம் நிலைக்கும் என்றார். எமது பக்கம் வெற்றி உள்ளது என மேலும் கூறினார்.

மாலை ஆறு மணிக்கு நெடுந்தீவில் ஜனநாயக முறையில் அரசியலை நடத்துவதற்கு ஈ.பி.டி.பியினருக்கு அரசாங்கம் ஆதரவு வழங்க வேண்டும் என்ற பிரேரணையை முன்மொழிந்து ஜே.வி.பி. உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் உரையாற்றினார்.

விவாதத்தில் கலந்துகொண்ட அமைச்சர் தி.மகேஸ்வரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோர் ஈ.பி.டி.பியினரின் நடவடிக்கைகளுக்கு எதிராகப் பலத்த கண்டனம் தெரிவித்தனர். சூடான வாக்குவாதங்கள் நடந்தன.

டக்ளஸ் தேவானந்தாவும் அமைச்சர் மகேஸ்வரனும் கடுமையான வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். சபையில் பலமுறை குறுக்கீடுகள் இடம்பெற்றன. பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, ஜனநாயக நாட்டில் எவரும் சுதந்திரமாகச் செயற்பட முடியும் எனப் பதிலளித்தார். சபை இரவு 7 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 'பொலித்தீன் பை' பிரச்சினை சபையில் ஒலித்தது

சூழல் மாசடைவதற்கு பொலித்தீன் பைகளும் காரணமாக அமையலாம். சூழல் பாதுகாப்புக் குறித்து பொதுமக்கள் மட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தப்படவேண்டுமென இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கேட்டுள்ளனர். இது சபையில் பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. இந்தப் பிரச்சினையை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு சுற்றாடல், இயற்கை வளத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் ருக்மன் சேனாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பொலித்தீன் பைகள் உற்பத்தித் துறையில் 168 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அதனால், அதனை உடனடியாகத் தடைசெய்தால் பெரும பாதிப்பை ஏற்படுத்தும்.

முதலில் சிறுசிறு பொலித்தீன்பைகளைத் தடைசெய்து, பொலித்தீன் பாவனைக்கு என வரிமுறை ஒன்றை அறிமுகப்படுத்துவோம்.

கழிவுப் பொலித்தீனை மீள் உற்பத்தி செய்வது பற்றியே கவனம் செலுத்தப்படும். கழிவுப்பொருள்களைப் பயன்படுத்தக்கூடிய வகையில், மீள் உற்பத்தி செய்யவென நாம் விடுத்த வேண்டுகோளைப் பரிசீலித்து பல நிறுவனங்கள் விண்ணப்பித்தன. எட்டு நிறுவனங்கள் இவற்றுள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பதைக் கேட்டறிந்து, பொறுப்புகள் இந்நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும்.

சுற்றுலாத்துறையினரைக் கவர்ந்து வந்த நுவரெலியப் பகுதிகளின் சூழல் மாசடைந்துள்ளதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. சீடா நிறுவனத்தின் உதவியுடன் நுவரெலிய நகரம் அழகுபடுத்தப்படும் - என்றார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய ஏனைய எம்.பிக்கள் கூறியதாவது:-

### மாவை சேனாதிராஜா

வடக்கு - கிழக்கு மாகாண கடற்பகுதிகளை கடலரிப்பு வெகுவாகப் பாதித்துள்ளது. கல்முனை கடற்கரைப் பகுதியினை கடலரிப்புப் பாதித்துள்ளதால், தென்னைச் செய்கையும் பாதிப்படையும் அபாயம் தோன்றியுள்ளது. இதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை அமைச்சு நடைமுறைப்படுத்த வேண்டும்.

மாவை சேனாதிராஜா எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமராட்சிப் பிரதேசத்தை அண்மித்துள்ள மணற்காடு, அம்பன், குடத்தனை முதலான இடங்களில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது. இதனால் கடற்கரைப் பகுதியைச் சார்ந்துள்ள விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளின் உதவிபெற்று கடலரிப்பினைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ் குடாநாட்டுக் கடற்பரப்பில் முருகைக் கற்பாறைகள் நிறைந்து காணப்படுகின்றன. இவை சட்டவிரோதமான முறையில் தகர்த்தெடுக்கப்படுகின்றன. நீர் முகாமைத்துவ அமைச்சுடன், இயற்கை வளங்கள் அமைச்சு இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு முருகைக் கற்பாறைகளைப் பாதுகாக்கப்பட நடவடிக்கையெடுப்பது அவசியமாகும்.

நாட்டின் பல பகுதிகளிலும் இரசாயன தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் கழிவுகள் கடல் நீரில் கொட்டப்பட்டு கடற்பகுதி மாசடைகிறது. கடலில் வாழும் உயிரினங்களையும் இவை பாதிக்கின்றன. இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார்.

### வீ.புத்திரசிகாமணி

மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசு உத்தேச மேல் கொத்மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது. இதனை நாம் எதிர்ப்பதற்கான காரணம், இயற்கைச் சூழலை, எமது மக்கள் நம்பி வாழும் இயற்கை வளங்களை இத்திட்டம் இல்லாது ஒழித்துவிடும் என்பதனாலேயே எனக் கூறினார் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் வீ.புத்திரசிகாமணி.

அவர் மேலும் கூறியதாவது:-

நுவரெலிய மாவட்டத்தில் காய்கறி உற்பத்தி விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைப் பாதுகாப்பதற்காகப் பீடைநாசினிகள் உபயோகிக்கப்படுகிறது.

இதனால், நச்சுத்தன்மை கலந்த மரக்கறி வகைகளை உண்ணவேண்டியுள்ளது. சூழலும் அதனால் பாதிக்கப்படுகிறது. இதனை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதையிட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார்.

### நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் அடாவடித்தனம் சாடினார் மகேஸ்வரன்

நாம் அரசியல் ரீதியாக எவருக்கும் பகைவர் அல்லர். அரசியலுடன் ஆயுதங்களும் விளையாடுவதை நாம் ஆட்சேபிக்கிறோம். நெடுந்தீவில் ஏழு வருடமாக பொலீஸ் நிலையமும் இன்றி ஈ.பி.டி.பியினர் அடாவடித்தனமாக சர்வாதிகாரம் புரிந்தனர்; மக்களை மண்டியிடச் செய்தனர்.

இவ்வாறு நெடுந்தீவில் அரசியல் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல ஈ.பி.டி.பியினருக்கு இடமளிக்கப்படவேண்டும் என்ற பிரேரணை மீது நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றுகையில் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் கூறினார்.

பத்து வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றத்திற்கு வந்த இவர்கள் தமிழ்மக்களின் பிரதிநிதிகளா? பொய்யர்கள், மக்களை ஏமாற்றி பதவிக்கு வந்து தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள். மக்களை ஏமாற்றிப் பணம் உழைத்து அரசியலை நடத்தினார்கள்.

தொடர்ந்தும் இவர்கள் நெடுந்தீவில் அராஜகத்தை முன்னெடுத்துச் செல்ல விருப்பம் கொண்டவர்களாக இந்தப் பிரேரணையை இந்தச் சபைக்குக் கொண்டுவந்துள்ளனர்.

கடந்த 24ஆம் திகதியன்றே நெடுநாள்களுக்குப் பிறகு பத்திரிகையாளர்களை அழைத்துக்கொண்டு நான் நெடுந்தீவு செல்லக்கூடியதாக இருந்தது. பத்திரிகையாளர்கள் உண்மை நிலையினைத் தெரிந்துகொண்டுள்ளனர் - என்றார்.

அவர் மேலும் கூறுகையில்:-

கொள்ளைகளையும், கொலைகளையும் புரிந்து தமிழ்மக்களைக் காட்டிக் கொடுத்தவர்களால் துணிவுடன் பிரேரணையைக் கொண்டுவர முடியவில்லை.

ஜே.வி.பியினரை ஈ.பி.டி.பி. சார்பில் பிரேரணையைக் கொண்டுவரச் செய்தமை இவர்களது கையாலாகாத தன்மையை எடுத்துக் காட்டுகிறது எனத் தெரிவித்தார்.

### ஜயலத் ஜயவர்த்தன

அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை உண்டு. விடுதலைப் புலிகள் ஜனநாயக அரசியல் நடவடிக்கைளை மேற்கொள்ள எவருக்கும் உரிமை உள்ளதென்பதை ஒஸ்லோவில் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தனிநாடு கோரிய அவர்கள், ஒரே நாட்டுக்குள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். அதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன.

ஜே.வி.பியினர் இனவாதத்தை உருவாக்கி இந்த நாட்டில் மீண்டும் ஓர் இரத்த ஆறு ஓடுவதற்கு இடம் அளிக்க முயலக் கூடாது என்றும் அவர் சொன்னார்.

### ரவிராஜ்

ஜனநாயக உரிமைகளைப் பற்றி பேசமுனையும் ஈ.பி.டி.பியினர், பதவியில் இருந்தபோது கூலிப் படைகளை வைத்து எம்மைத் தாக்கினர்.

கடந்த 12 ஆண்டுகளாக இவர்கள் மேற்கொண்ட அராஜகச் செயல்களை அட்டவணையிட முடியாது. பாதுகாப்பு அமைச்சர் இவற்றை விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

- என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான என்.ரவிராஜ் கூறினார்.

நெடுந்தீவுப் பகுதியில் கடற்படையினர் உதவியினை மீண்டும் பெற்றுச் செயற்பட ஆசைப்படுகின்றனர். கொலைகாரக் கும்பலுக்கு ஜே.வி.பியினர் துணை போவதையிட்டு நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை - இப்படி அவர் கூறினார்.

### மதனராஜா

புலிகளும், புலிகளால் தூண்டப்பட்ட சிலரும் எமது உறுப்பினர்களைத் தாக்கிக் காயப்படுத்தியும், மானபங்கப்படுத்தியும் வருகின்றபோதும்கூட பெரும் எண்ணிக்கையான மக்கள் மௌனமாக தமது ஆதரவை எமக்குத் தந்து வருகின்றனர். இக்கட்டான வேளையிலும்கூட நாம் அங்கிருந்து வெளியேறக்கூடாது எனக் கேட்டு கடிதங்கள் எழுதுகின்றனர்; தொலைபேசிச் செய்திகள் தருகின்றனர். இதற்காக நாம் அவர்களைப் பாராட்டுகின்றோம் - என்றார் ஈ.பி.டி.பி. உறுப்பினர் மதனராஜா.

ஈ.பி.டி.பியினராகிய நாங்கள், கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக நெடுந்தீவில் இருந்து வருகிறோம். நெடுந்தீவுப் பிரதேச சபை எமது கட்சியின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. புலிகள் தமது அலுவலகத்தை அங்கு ஆரம்பித்த பின்னர்தான் புலிகளால் தூண்டிவிடப்பட்ட ஒருசிலர் அங்கு எம்மை எதிர்க்கின்றனர். ஒக்ரோபர் 5ஆம் திகதி எமது அலுவலகம் தாக்கப்பட்டது; சேதமாக்கப்பட்டது. எமது கட்சி உறுப்பினர்கள் தாக்குதலுக்கு இலக்காகினர்.

நெடுந்தீவுப் பிரதேசத்தின் வழமை நிலைமையையும், இயல்பு வாழ்க்கையையும் சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளைத் தூண்டிவிடுவதை புலிகள் நிறுத்தவேண்டும். அரசியல் கட்சிகள் தமது ஜனநாயக நடவடிக்கைகளை முன்னெடுப்பதை புலிகள் எவ்வகையிலும் குழப்பக்கூடாது. இதனைப் புலிகளுக்கு அறிவுரையாக வழங்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் முன்வரவேண்டும்.

சபையில் இருந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ ஆனந்தசங்கரி, மாவை.சேனாதிராஜா, இரா.சம்பந்தன், அ.விநாயகமூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோர் ஈ.பி.டி.பி. தொடர்பான விவாதம் ஆரம்பமானதும் சபையில் இருந்து வெளியேறிவிட்டனர்.

### வாழைச்சேனை - யாழ்ப்பாண ரயில் சேவை அடுத்த ஆண்டு இறுதிக்குள்

வாழைச்சேனை, மட்டக்களப்பு, வவுனியா, காங்கேசன்துறை ரயில் பாதைகள் புனரமைக்கப்படும். அடுத்த ஆண்டு இறுதிக்குள் இவை முடிவுறும். இப்பாதைகளில் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

- இவ்வாறு அரச போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், விமானத்துறைகளுக்கான அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின்போது அரச போக்குவரத்து அமைச்சர் பியசேன உபாலி கூறினார்.

தனியார்துறை பஸ் சேவைகளைப் பாதிக்கும் எத்தகைய நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளாது. இரண்டாயிரம் பஸ்களை இறக்குமதி செய்வது என்ற செய்தியில் எதுவித உண்மையும் இல்லை.

தனியார் பஸ்சேவையுடன் போட்டி மனப்பான்மையில் (சேவையில் ஈடுபடும் நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுவருகிறோம். அதற்காக மூவாயிரம் பஸ்களை திருத்தி சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(06பக்கம் பார்க்க)

உதயன்

## சமஷ்டி கட்டமைப்பில் பிரபாகரன் கூறிய சுயாட்சி

ஒஸ்லோவில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற மூன்றாது சுற்றுப்பேச்சு வரலாறு படைத்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு எந்த அடிப்படையில் தீர்வு காண்பது என்பதில் இரு தரப்பினரும் இணக்கம் கண்டுள்ளனர்.

அரசியல்தீர்வு பற்றிய விடயம் இவ்வளவு விரைவில் ஆராயப்படும் என்றோ அதில் இவ்வளவு இலகுவாக இணக்கம் காணப்படும் என்றோ எவரும் எண்ணியதில்லை.

எல்லாவற்றிக்கும் மேலாக இரு தரப்பினரும் கண்ட இணக்கம், இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச அரங்கிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது; பாராட்டப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டபடி வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்துக்கு சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி வழங்கும் ஓர் ஏற்பாட்டையே அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்றே இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

சுருக்கமாகச் சொல்வதானால் ஐக்கிய இலங்கையில் ஒற்றை ஆட்சிமுறைக்குப் பதில் சமஷ்டி அடிப்படையில் தீர்வு. நாட்டுப்பிரிவினை, தனிநாடு என்ற பிரச்சினைகள் இதில் இல்லை.

இரு தரப்பினரும் யதார்த்தத்தை உணர்ந்தும் உலகப் போக்கை அவதானித்தும் நாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டும் மிகுந்த விட்டுக்கொடுப்புகளுடன் பேச்சுக்களை நடத்தியதாலேயே இப்படியான நல்லதோர் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் தமிழீழம், இடைக்கால நிர்வாகம் ஆகியவற்றை வற்புறுத்தவில்லை.

அரசும் இதுவரை காலமும் அழுங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்த ஒற்றை ஆட்சிமுறையிலிருந்து படியிறங்கிச் சமஷ்டி ஆட்சிமுறைக்கு ஒப்புக்கொண்டிருக்கிறது.

தந்தை செல்வா ஆரம்பித்த தமிழரசுக் கட்சி, சமஷ்டிக் கட்சி என்றும் அழைக்கப்பட்டது.

தந்தை செல்வா தலைமையில் தமிழ் மக்கள் சமஷ்டி ஆட்சிமுறையில் தமது உரிமைகளைப் பெற பல ஆண்டுகள் அஹிம்சைப் போராட்டம் நடத்தினார்கள். அவற்றையெல்லாம் பதவியிலிருந்த அரசுகள் ஆயுதபலம் கொண்டு நசுக்கின.

உரிமைப்போராட்டத்தில் அஹிம்சை தோற்றது. அது கொலை செய்யப்பட்டது. வேறுவழியின்றி பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார். இரண்டு தசாப்தங்களாக அவர் கொடுத்த அடி, ஒற்றையாட்சி முறையிலிருந்து படியிறங்கி சமஷ்டி முறையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு அரசை முன்வரச் செய்திருக்கிறது.

பிரபாகரன் சொன்னபடி வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசங்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியைச் சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் வழங்குவது பற்றிய விவரங்கள் இனிமேல்தான் பேசித் தீர்மானிக்கப்பட இருக்கின்றன.

இந்தவிதமான அரசியல் தீர்வு ஏற்பாட்டின் பிரகாரம் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களும் தமிழர்களைப்போல சுயாட்சி உரிமைகளை அனுபவிப்பார்கள்.

ஆகவே, சமாதானப் பேச்சுக்கள் குழம்பிப்போகாமல் வெற்றிகரமாக நடந்து விரைவில் பலன் தருவதற்கு முஸ்லிம் மக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தீர்வுத்திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டதும் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் புதிய அரசமைப்பு தேவைப்படும் என்பதை அரச தரப்புத் தலைவர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் புலிகள் தரப்புத் தலைவர் அன்ரன் பாலசிங்கமும் தெரிவித்திருக்கிறார்கள்.

தீர்வுத் திட்டம் தயாரிக்கப்படுவதற்கு முன்னரே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவாரோ என்ற அச்சம் சில வட்டாரங்களில் நிலவுகிறது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் மீண்டும் பொதுத் தேர்தல் நடக்கும், பொதுத் தேர்தலில் தாம் வெற்றி பெற்று அதிக பலத்துடன் மீண்டும் ஆட்சிக்கு வருவது உறுதி என்று பிரதமர் தெரிவித்து வருகிறார்.. மக்களின் ஆணையைப் பெற்று இப்போதைய ஒற்றையாட்சி அரசமைப்பு முறைக்குப் பதிலாக சமஷ்டி முறையைக் கொண்டுவரவும் பொதுத் தேர்தல் உதவும்.

---

வீதிகளில் அனுமதியின்றி காட்சிப்படுத்தப்பட்ட

# விளம்பர 'கட்-அவுட்'டுக்கள் உடனடியாக அகற்றப்படும்

### வீதி அபிவிருத்தி பொறியியலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வீதிகளில் அனுமதியின்றிக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர 'கட் - அவுட்'க்கள் உடனடியாக அகற்றப்படவுள்ளன என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்., கிளிநொச்சி பிராந்திய பொறியியலாளர் ஜே.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

யாழ்.-கண்டி வீதி (ஏ-9) திறக்கப்பட்டதை அடுத்து வர்த்தகர்கள் பலரும் கண்டி வீதி உட்பட குடாநாட்டு வீதிகளில் விளம்பர 'கட்-அவுட்'களை காட்சிப்படுத்தியுள்ளனர். இந்த நடைமுறை தற்போதும் தொடர்ந்தவண்ணம் உள்ளது.

இந்த விளம்பரக் 'கட்-அவுட்'டுக்களால் வீதிகளில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன் அடிக்கடி தோண்டப்படும் குழிகளால் வெள்ளம் தேங்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக வீதி திருத்தப்பணிகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதி பெற்று அமைக்கப்பட்ட விளம்பர 'கட்-அவுட்'க்களைத்தவிர 'கட் - அவுட்'கள் விரைவில் அகற்றப்படவுள்ளன.

எனினும், அனுமதியின்றி பிரதான வீதிகளில் விளம்பர 'கட்-அவுட்'களை அமைத்தவர்கள் உரிய முறையில் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் அவற்றை ஏற்ற இடத்தில் அமைப்பதற்கு ஒழுங்குசெய்து தரப்படும் - என்றும் அவர் தெரிவித்தார்.

(எ-12)

# கசிப்பு, சட்டவிரோத மது விற்பனை 15 பேருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் 15 பேருக்கு யாழ்.நீதிமன்றத்தினால் 96 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த குமாரசாமி சிவயோகநாதன் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த வசந்தநாதன் ஜெயக்குமார் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

செல்வபுரம், உரும்பிராயைச் சேர்ந்த பண்டாரி அரியப்பு என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

பலாலி வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த ச.விமலதாசன் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த இராசமணி சுதாஸ் என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 5 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

திருநெல்வேலியைச் சேர்ந்த கந் தையா சண்முகராசா என்பவருக்கு 2ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

கோப்பாயைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை டானியல் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

திருநெல்வேலியைச் சேர்ந்த இரத்தினசேகரலிங்கம் குகனேஷ் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பண மும் -

கோண்டாவிலைச் சேர்ந்த பழனியாண்டி சிவஞானம் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

கோப்பாயைச் சேர்ந்த செ.துரைராசா என்பவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

கோப்பாயைச் சேர்ந்த வல்லிபுரம் ஸ்ரெனிஸ்லொஸ் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

நீர்வேலியைச் சேர்ந்த செல்லன் குணசிங்கம் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

அரியாலையைச் சேர்ந்த செல்வராஜா இராஜேந்திரன் என்பவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

கோண்டாவிலைச் சேர்ந்த தம் பையா விமலதாசன் என்பவருக்கு 2ஆயிரம் ரூபா தண்டப் பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இம் மானுவேல் வேசுதாசன் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

(எ-8-10)

# 'லைசென்ஸ்' வழங்குவதற்கான எழுத்து, செயன்முறைப் பரீட்சைகள்

### இன்றுமுதல் 12ஆம் திகதிவரை

வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான எழுத்து மற்றும் செயன்முறைப் பரீட்சைகள் இன்று மீண்டும் ஆரம்பமாகின்றன.

இதற்கென 4பேர் கொண்ட பரிசோதகர் குழு இன்று யாழ். வருகின்றது என்றும் -

எழுத்து, செயன்முறைப் பரீட்சைகள் இன்றுமுதல் எதிர்வரும் 12ஆம் திகதிவரை இப்பரீட்சை நடைபெறும் என்றும் -

யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் விடபத்மநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை புதிய விண்ணப்பங்களைப் பெறுதலும், பரீட்சைக்கான திகதி வழங்கலும் இடம்பெறும் என்றும் -

ஏற்கனவே நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாதவர்களுக்கும், எழுத்துப் பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்களுக்கும் அன்றையதினம் மீள் திகதி வழங்கப்படும் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-8)

# சீரான சேவையை வழங்க மேலும் 50 பஸ்கள் தேவை

### போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ.குடாநாட்டில் சீரான சேவையை வழங்குவதற்கு மேலும் 50 பஸ்கள் உடனடியாகத் தேவைப்படுவதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் எஸ்.மணிவாசகம் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது குடாநாட்டின் சகல இடங்களுக்குமான சேவைகள் இடம்பெற்றுவருகின்றபோதும் மக்களின் தேவைக்கு ஏற்ப அவை போதுமானதாக இல்லை. இதனைக் கருத்திற்கொண்டு 50 பஸ்களை அனுப்பிவைக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையிடம் பல தடவைகள் கேட்டபோதும் இதுவரையும் அவை அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

100 பஸ்கள் தற்பொழுது சேவையில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த 1995ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்ததைவிட இது குறைவான எண்ணிக்கை எனவும், 90ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்ததை விட மிகவும் குறைவு எனவும் தெரிவித்த அவர், அவற்றுள் 37பஸ்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

கேரதீவு வீதியூடான சேவை கோயிலாக்கண்டி வரையும் தினமும் 4 தடவைகள் இடம்பெற்றுவருகின்றபோதும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அதனை நடத்துவதற்கு பஸ்கள் இல்லாத நிலையும் ஒரு காரணமாக உள்ளதாக பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(ம-10)

**நாளை**

கார்த்திகை 22
ஞாயிற்றுக்கிழமை
(08.12.2002)
திதி : சதுர்த்தி
முற்பகல் 9.41வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
முற்பகல் 10.02வரை.
சுபநேரம் : 9.17 - 10.47
ராகுகாலம் : 4.47 - 6.17
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

நற்பெயரை இழந்தவன் வாழ்பவர் மத்தியில் இறந்தவனாவான்.

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன்

# 38 பாடசாலைகளுக்கு நூல்கள் அன்பளிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.7

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நூலக அபிவிருத்திப் பிரிவினால் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 38 பாடசாலைகளின் நூலகங்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் பெறப்பட்ட நூல்களில் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்படவுள்ளன.

நூல்கள் வழங்கப்படவுள்ள பாடசாலைகளின் விவரங்கள் வலய ரீதியாக வருமாறு:

**யாழ்ப்பாணம்**

யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.திருச்குடும்பக் கன்னியர்மடம், வேம்படி மகளிர் கல்லூரி, ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, இடைக்காடு ம.வி., உரும்பிராய் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

**வலிகாமம்**

இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, சங்கானை சைவப்பிரசாக ம.வி., மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மல்லாகம் ம.வி.

**தீவகம்**

நெடுந்தீவு ம.வி., காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி., ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி, நயினாதீவு ம.வி.

**வடமராட்சி**

உடுத்துறை ம.வி., வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, வட.இந்து மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஷ்த பெண்கள் உயர்தர பாடசாலை, நெல்லியடி ம.ம.வி., உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி.

**தென்மராட்சி**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி, மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

(ம-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பொமனேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் (ஒருவருடம்), டாஸ் கவுண்ட் பெண் நாய்க்குட்டி (ஒரு வருடம்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: Mr.K.பஞ்சாட்சரநாதன், கொக்குவில் கிழக்கு (குளக்கரை). (11485)

நல்ல நிலையிலுள்ள CHALY மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.V.கந்தசாமி, இல.70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.2225401. (11478)

**Sony 21", 19", National 21" - 14" - 18 T.V.**க்கள் **Sony 2020 Made in Japan, Sony Fh 3,7,10** றேடியோக்கள் **Panasonic, National 300** டெக்குகள், சோலர்பனல் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (11466)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். Electronic நிறுவை. தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11227)

## கார் விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பில் இருக்கும் 7சிறீ-இலக்கமுடைய மொறிஸ் மினா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.வில்சன், 17/2 A, புனித அன்னமாள் ஒழுங்கை, கண்டுக்குளி.(11403)

## வீடும் காணியும் விற்பனைக்கு

3 பரப்புக் காணியில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும் 21/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 193, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.01728712 (11487)

## தேவை

மில் வேலை தெரிந்த ஆள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: கஜலக்சுமி அரிசி ஆலை, சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.(11430)

கோழிகளை பராமரிப்பதற்கும், சுத்தம் செய்வதற்கும் ஆள் தேவை. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (11474)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான **Prima Broiler** குஞ்சுகள் குறைந்த விலையிலும் அதிவிசேட **Prima** பேட்டுக் குஞ்சுகளும் 12-12-2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10753)

## தவறிவிட்டது

இல.04, ஓடைலேன், வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சசிகலா சிவமணி என்பவருடைய அடையாள அட்டை இல.(787972390V) மற்றும் வங்கிப் புத்தகமும் 05.12.2002 வியாழக்கிழமை மருதனார்மடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (11467)

இடைக்காடு, அச்சுவேலியைச் சேர்ந்த கலைவாணி கிருஷ்ணபிள்ளை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.817821723V) அச்சுவேலி பஸ்நிலையப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சு.கிருஷ்ணபிள்ளை, கலட்டித் தோட்டம், இடைக்காடு, அச்சுவேலி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (11477)

---

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும் சைவப் பெருவள்ளலாருமான

**சேர் பொன்.இராமநாதன்** அவர்களின்

## குருபூஜைதின விழா

காலம்: நாளை (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி முதல்

இடம்: **ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்**

அன்று இதனை முன்னிட்டு அருள்மிகு பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் விசேட பூஜைகளும் நடைபெறும்.

இதனையொட்டிய ஏனைய நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் 17.12.2002 அன்று நடைபெறும்.

அனைவரும் வருக.

(11486) **இந்து மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.**

---

## பின்முற்றாகும் தீர்வை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

**நல்லையா ரவீந்திரா,**
நந்தாவில் மேற்கு ஒழுங்கை,
தாவடி, கொக்குவில்.
- வழக்காளி

எதிர்

வழ.இல-மணநீக்கம்/340

**ரவீந்திரா** பெண் **காராளபிள்ளை**
மகள் **நித்திய கல்யாணி**
ஐயனார் கோவில் பின் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
-எதிராளி.

2002ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ஆம் திகதி மாவட்ட நீதிபதி திரு. இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில், வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசா அவர்களும் சமுகமாக இருக்கவும் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை, மன்றில் பிசுக்கால் உத்தியோகத்தர் மூலம் எதிராளி இறுதியாக வசித்த விலாசத்தில் ஒட்டி பதிற்சேவிப்பு செய்யப்பட்டும், 'உதயன்' பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டும் இருந்தபோதும், அழைப்பாணை திரும்பல் தினமான 01-11-2002இல் எதிராளி மன்றில் சமுகமளிக்கத் தவறியமையால் ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கமைய ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வழக்காளியின் பிராது ஆவனம் வ, வழக்காளியின் சாட்சியம் என்பன பரிசீலிக்கப்பட்டு வழக்காளர் பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறுவதற்குத் தகுதியுடையவர் எனக்கண்டு, வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 29.10.1998இல் நடைபெற்ற திருமணமானது எதிராளி வழக்காளியை வன்மமாகக் கைவிட்டுச் சென்றுள்ளார் என்ற காரணத்திற்காக இதனால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கப்படுகிறது எனக் கட்டளையிடப்பட்டு இதனால் பின்முற்றாகும் தீர்வை வழங்கப்படுகிறது.

இத்தீர்வை பற்றிய அறிவித்தல் எதிராளிக்கு பதிற் சேவையாக மன்றில் பிசுக்கால் உத்தியோகத்தர்மூலம் அவரது இறுதியாக வசித்த விலாசத்தில் ஒட்டப்பட்டும் "உதயன்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டும் மூன்று மாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதபட்சத்தில் இப்பின்முற்றாகும் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2002ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 07ஆம் திகதி.

வரைவு:
**பவானி சற்குணராசா**
வழக்காளியின் சட்டத்தரணி.

ஒப்பம்: **இ.த.விக்னராஜா**
மாவட்ட நீதிபதி,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

நீதிமன்றின் கட்டளைப்படி **து.சிறீமோகன்**
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(11491)

---

## நாடாளுமன்றத்தில்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

### செல்வம் அடைக்கலநாதன்

இந்த விவாதத்தில் உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் எம்பி. கூறியதாவது:-

வன்னிப் பிரதேசப் பாதைகளில் எதுவித வாகனங்களையும் செலுத்த முடியாதநிலையுள்ளது. முருங்கன், சிலாபத்துறை, பரந்தன், முல்லைத்தீவு, மாங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள சிறு பாலங்கள் போக்குவரத்தினை மேற்கொள்ளக்கூடியதாக இல்லை.

மதவாச்சியிலிருந்து ஓமந்தைவரை 'காபற்' பாதை போடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. அந்தப் பணிகளை நெடுஞ்சாலைகள் அமைச்சு விரைவுபடுத்த வேண்டும்.

மன்னார் டிப்போவில் இயந்திர மற்ற பஸ்களே தரித்து நிற்கின்றன. டயர், டியூப் பற்றாக்குறை காரணமாக பல பஸ்கள் ஓடுவதில்லை. போக்குவரத்து வசதிகள் இன்றி மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் - என்று அவர் மேலும் கூறினார்.

### ஒரு வருட பூர்த்தியையிட்டு அரசிற்கு சபையில் வாழ்த்து

எமது அரசாங்கம் ஒரு வருடத்தைப் பூர்த்திசெய்துள்ளது. அதன் பலன்களை மக்கள் அடைந்து வருகின்றனர். சபையில் இரு தரப்பினரும் அரசைப் பாராட்டியமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

நாடாளுமன்ற விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்திற்குப் பதிலளித்து, அமைச்சர் அஸ்வர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அவசியத் தேவைகள் பற்றிப் பல கருத்துக்கள் இங்கு முன்வைக்கப்பட்டன. அதனையிட்டுக் கவனஞ் செலுத்தப்படும்.

சபையில் வாதிடுகையில் எமது கருத்துக்கள் வேறுபடலாம். ஆயினும், பொதுமக்களின் சேவையினை கருத்திற்கொண்டு செயற்படுகையில் எம்மிடம் வேறுபாடுகள் இல்லை.

நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் முறையாகப் பேணப்படவேண்டும் என்பது பிரதமரின் கொள்கையாகும். இதனை ஜப்பான் விஜயத்திலும் அவர் வலியுறுத்தினார்.

எமது நாடாளுமன்றத்திற்கு பார்வையாளராக வருகைதரும் உள்நாட்டு விருந்தாளிகளை நியாயமான விலையில் ஞாபகார்த்தப் பொருள்களை வாங்குவதற்கு வசதியாக வர்த்தக நிலையமொன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கணனிப் பயிற்சி, முகாமைத்துவப் பயிற்சியும் வழங்கப்படும் - என்றார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய ஏனைய எம்.பிக்கள் கூறியதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐம்பது பேர்வரை, வாகன வசதியின்றி பயணஞ்செய்கின்றனர். தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் தாமதமின்றி இவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும். பொதுமக்களின் சேவைகளை மேற்கொள்வதற்கு இது அவசியமாகிறது.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கூறினார்.

நாம் வெறுமனே நாடாளுமன்றம் சென்று குளிர்காய்கிறோம் எனப் பலரும் எண்ணுகின்றனர். அத்தகைய மன நிலையை மாற்றக்கூடிய விதமாக, எமக்கு வாக்களித்த மக்களின் தேவையறிந்து சேவையாற்றுவது எமது கடமையாகும்.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றிப் பாடசாலை மாணவ, மாணவியர் அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்புகள் உருவாக்கிக்கொடுக்கப்படுவது அவசியமாகும் என்று அவர் மேலும் கூறினார்.

### எம்.எம்.மஹ்ரூப்

நாடாளுமன்றம் கூடுவதற்கு செங்கோல் கொண்டுவந்து வைப்பதற்கு முன்னதாகவே வருகை தருபவர் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர். அவரது அயராத பணி பாராட்டுக்குரியது.

- இவ்வாறு கூறினார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மஹ்ரூப்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கிராமப் புறங்களிலிருந்து பல மைல் தூரம் பயணஞ்செய்து இங்கு வருகின்றனர். தியாகங்களுக்கு மத்தியில் வாக்காளரின் தேவைகளைக் கண்டறிந்து செயற்படுகின்றனர். இவர்களது குறைகளைக் கண்டறிந்து அமைச்சர் நிவர்த்தி செய்யவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (எ)

---

## பெறுமதி வாய்ந்த முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ். பிரதம தபாலகத்திற்கு பெறுமதி வாய்ந்த (ரூபா 500.00,1000.00) முத்திரைகள் தருவிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அவற்றைக் கொள்வனவு செய்யமுடியும் என பிரதம அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார். (ம)

## தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு சுற்றுமதில்

யாழ்.கோட்டைப் பகுதியில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் நினைவுத தூபி அமைந்துள்ள பகுதியைச் சுற்றி மதில்கள் அமைக்கும் பணி தற்பொழுது இடம்பெற்று வருகிறது. (ம-10-8)

---

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 1923 - 10 - 30



விண்ணில் 1999 - 12 - 11

**அமரர் நாகேசு தம்பிமுத்து** (நண்பர்)

*(ஸ்தாபகர் டவர் கோப்பி அன் கூல்பார்)*

திதி: கார்த்திகை சதுர்த்தி (07.12.2002)

**ஆண்டுகள் மூன்றும் ஆயிற்றோ அந்தோ உமைப் பிரிந்து**
**மாண்டுநீர் போனதால் மனை செயலிழந்து போனதே**
**தூண்டாமணி விளக்காய் துலங்கிய உமை நினைந்து**
**ஈண்டுங்குநாம் தவிக்கின்றோம் திருமுகம் காணாமல்.**

*இல.15, யாழ்பாடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (11493)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 17 - 09 - 1942



உதிர்வு 07 - 11 - 2002

**அமரர் பொன்னுத்துரை நடராசா**

காவிய மாகி விட்ட
காவிய நாயகனே! வவா
இயற்கை உனதழகை
ஜீரணித் திருக்கும் - ஆனால்
உனது திரு முகத்தை
எம் நெஞ்சினின்று
ஜீரணிக்க முடியாது!

*மானிப்பாய் வீதி,*
*தாவடி, கொக்குவில்.* (11482)

- குடும்பத்தினர்.

---

## கண்ணீர் அஞ்சலி

இராமநாதன் கல்லூரியில் பற்றுமிக்க மாணவியாக,
உப அதிபராக, அதிபராகக் கடமையாற்றியபின் கனடா
பழைய மாணவர் சங்கத் தலைவியாகவும் விளங்கிய

**திருமதி யோகலட்சுமி இராசரத்தினம்**

அவர்களின் மறைவு குறித்து துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/இராமநாதன் கல்லூரி**

சுன்னாகம். (11495)

---

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி நடராசா

வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி நடராசா 02.12.2002 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக்கணவரும் கணேசலிங்கம்(லங்கா சிமெண்ற்), குமாரவேல்(கனடா), வடிவேல்(கனடா), சலஜ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திராதேவி, அகிலேஸ்வரி, சத்தியபாமா, ரவீந்திரன் ஆகியோரின் மாமனாரும் கஜேந்தினி, டினோஜன், பவின், பவித்திரா, பிரவீனா, வினித்தா, நங்கவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.12.2002) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோயிலடி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
கணேசலிங்கம் *(மகன்)*

(ஏ/75285)

## மிதிவெடிகளைப் புதைப்பதில்லை என்ற உறுதிப்பாடு

# ஒட்டாவா உடன்படிக்கையில் கையெழுத்திடும் சாதக நிலை

## ஒஸ்லோவில் அரசு, புலிகள் தரப்பினர் பரிசீலனை

ஒஸ்லோ,டிசெ.7

மிதிவெடிகளைப் புதைப்பதில்லை என்பதை உறுதிகூறும் ஒட்டாவா உடன்படிக்கையில் கையெழுத்திடுவது குறித்து இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் சாதகமாகப் பரிசலித்து வருகின்றன.

சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் அரசுத் தரப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் புலிகள தரப்புக் குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கமும் இவ்வாறு தெரிவித்தனர்.

மிதிவெடிகளைப் புதைப்பதில்லை என்று கூறும் உடன்படிக்கையில் 1997 டிசெம்பர் 2ஆம் திகதி பல நாடுகள ஒப்பமிட்டன. கனடாவில் ஒட்டாவா நகரில் இடம்பெற்ற மாநாட்டின் முடிவில இந்த இணக்கம் காணப்பட்டதால் இது ஒட்டாவா உடன்படிக்கை என்று கூறபடுகின்றது. இந்த உடன்படிக்கையில் சுமார் 150 நாடுகள் ஏற்கனவே ஒப்பமிட்டுள்ளன.

அதில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒப்பமிடவேண்டும் என்ற கோரிக்கையை முன்னெடுத்து இலங்கை சர்வமத சபை இயக்கம் ஒன்றை ஆரம்பித்திருந்தது. இலங்கையின் சகல பகுதிகளையும் சகல இனங்களையும் சேர்ந்த 11 லட்சம் பேரின் கையொப்பத்துடன் கூடிய மகஜர் ஒன்றை இந்த இயக்கம் தயாரித்தது.

ஒஸ்லோவில் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றிய இலங்கை அரசு மற்றும் புலிகள் தரப்பு குழுவினரிடம் இந்தக் கோரிக்கை மற்றும் கையொப்பங்கள் அடங்கிய மகஜரை சர்வமத சபைப் பிரதிநிதிகள் நேரில் சந்தித்துக் கையளித்தனர்.

ஒஸ்லோ றடிசன் எஸ்.ஏ.எஸ். பிளாஸா ஹோட்டலில் கடந்த புதன் கிழமை மாலை மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களின் ஐந்தாவது அமர்வு முடிவுற்ற பின்னர் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட பினனர் புலிகள் தரப்புப் பிரமுகர் அன்ரன பாலசிங்கம் கூறியதாவது:-

நிலக்கண்ணிகள் மற்றும் மிதிவெடிகளின் பேராபத்தை உணர்வுபூர்வமாக உணர்ந்தவர்கள் நாங்கள். தமிழ்ப் பிரதேசங்களில் சுமார் இருபது லட்சம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

கண்ணிவெடியகற்றும் மனிதாபிமானப் பணிக்கான பிரிவு ஒன்றை விடுதலைப் புலிகள் அமைத்துள்ளனர். நோர்வே மற்றும் பிரிட்டனின் உதவியுடன் வன்னிப்பிரதேசத்தில் இந்த அமைப்பு சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

மிதிவெடி ஆபத்து தமிழர்களுக்கு - குறிப்பாக வடபகுதித் தமிழர்களுக்கு - மிக மோசமான பிரச்சினையாக உள்ளது. யுத்தத்தின் விளைவால் வளம்மிக்க நமது தோட்ட நிலங்கள் கண்ணிவெடி வயல்களாகிவிட்டன.

புலிகளின் கண்ணிவெடியகற்றும் மனிதாபிமானப் பணிக்கான பிரிவினால இதுவரை வன்னியில் மட்டும் ஒரு லட்சத்துக்கு அதிகமான மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன. இப்பணி தற்போது விரிவாக்கப்பட்டுத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒட்டாவா உடன்படிக்கையில் கையெழுத்திடும் விடயத்தைச் சாதகமாகப் பரிசீலிக்கும்படி எமது தலைவரை நாம் கோரியுள்ளோம். இலங்கை அரசும் அதில் ஒப்பமிடும் விடயத்தை சாதகமாகப் பரிசீலித்து வருவதாக அறிகிறோம்.

இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவு எடுக்க எமக்குச் சற்றுக் கால அவகாசம் தேவை.

என்றாலும் நாட்டின் வடக்கு, தெற்கு என்ற பல பகுதிகளிலும் இருந்து - பல்வேறு மதங்கள் மற்றும தரப்புகளின் சார்பில் - பெருமளவு எண்ணிக்கையான மக்களால் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் - இத்தகைய கோரிக்கை வருவது குறித்து நாம் சிரத்தை கொள்கின்றோம் - என்றார் அன்ரன் பாலசிங்கம்.



ஒஸ்லோவில் கடந்த 4ஆம் திகதி நடந்த பேச்சுக்களின்போது கண்ணிவெடிகளுக்கு எதிரான மகஜர் கையளிக்கப்பட்டது. அதன் பிரதியை பாலாவிடம் கையளிக்கும் அசாஹிமாயக்கதேரர்.

### ஜி.எல்.பீரிஸ்

இலங்கை அரசுத் தரப்புக்குக் குழுவின் தலைவரான பேராசிரியர ஜி.எல்.பீரிஸ் அங்கு கூறியதாவது:-

நமது நாடு எதிர்நோக்கும் மிக முக்கியமான ஒரு பிரச்சினைக்கு நடைமுறைத்தீர்வு காணும் முயற்சியில் மதத்தலைவர்கள் ஆழ்ந்த ஈடுபாடு காட்டுவதுதான் இந்த நிகழ்வின் மிக முக்கிய அம்சம் ஆகும்.

கடந்த இரண்டு தசாப்த காலப் போரினால் நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மக்கள் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுவது தொடர்பான விடயத்தில் அடிப்படைப் பிரச்சினையாக கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு அமைந்துள்ளது.

மக்கள் தமது இடங்களில் மீளக் குடியமர்வது வற்புறுத்தல் ஏதும் இன்றி சுயாதீனமாக அமையவேண்டும். பாதுகாப்பான - அச்சுறுத்தலற்ற - நிலையேற்படுத்தப்பட்டால்தான் மக்கள் தாமாகவே மீளக்குடியமர முன்வருவர். அதற்கு புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்படுவதும் இனிமேல் மிதிவெடிகள் புதிதாக புதைக்கப்படமாட்டா என்பதும் உறுதிப்படுத்தப்படுவதும் அவசியமாகும்.

அன்ரன் பாலசிங்கம் இங்கு குறிப்பிட்டதுபோல இதற்கான செயல நடவடிக்கைகளை அரசும் புலிகளும ஆரம்பித்துவிட்டனர். இறுதி இலக்கை ஒட்டாவா உடன்படிக்கை மூலமோ அல்லது வேறு பொருத்தமான வழிமுறை மூலமோ நாம் எட்டலாம்.

இந்த விடயத்தில் உரிய அழுத்தத்தை தரும் முயற்சியில் சமூகத்தின் - குறிப்பாக மதத்தலைவர்களின் - பங்களிப்பு ஏற்பட்டிருப்பதை நாம் வரவேற்கின்றோம். முழுச் சமூகத்தினதும் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல் இத்தகைய பெரும் முயற்சியை முன்னெடுக்க முடியாது.

உங்கள் கோரிக்கை தொடர்பான ஆரம்பப் பணிகளை அரசும் ஆரம்பித்துவிட்டது. இறுதி இலக்கை அடைவதில் அரசு முனைப்பாக இருக்கும் என்பதை உறுதி கூறுகின்றேன் - என்றார் ஜி.எல்.பீரிஸ். (ஐ-3)

# பொருளாதார வளர்ச்சி இன்றி நிரந்தர சமாதானம் ஏற்படாது

## ஜப்பான் வர்த்தக ஒத்துழைப்புக் குழுக்கூட்டத்தில் ரணில்

டோக்கியோ,டிசெ.7

பொருளாதார வளர்ச்சியின்றி நிரந்தர சமாதானம் ஏற்படமாட்டாது. இவ்வாறு டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் - இலங்கை வர்த்தக ஒத்துழைப்புக் குழுக்கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அந்தக்கூட்டத்தில் பிரதமர் மேலும பேசுகையில் கூறியதாவது:-

பொருளாதார வளர்ச்சியின்றி நிரந்தர சமாதானம் இல்லை. நிரந்தர சமாதானமின்றி பொருளாதார வளர்ச்சி இல்லை என்ற நிலைக்கு நாம் வந்திருக்கிறோம். இவை இரண்டிற்குமிடையேயுள்ள பிரிக்கமுடியாத உறவை நாம் அன்றாடம் உணர்ந்து கொண்டேயிருக்கிறோம்.

நீண்ட இருபது வருடங்களின் பினனர் நிரந்தர சமாதானத்திற்கான கதவுகள் இப்போது திறக்கப்பட்டுள்ளன. சர்வதேச சமூகத்தின் ஆதரவின்றி இது சாத்தியமானதல்ல என்பதை கடந்தவாரம் ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான ஆதரவு மாநாடு காட்டுகிறது. குறிப்பாக நோர்வேயும், ஜப்பானும் இந்த முயற்சியில் இலங்கையின் பக்கம் நிற்கின்றன.

30 வருடங்கள் வரையில் முன்பு நாம் மலேசியா, சிங்கப்பூர், தென்கிழக்காசிய நாடுகளுடன் சமமான பொருளாதார நிலையிலிருந்தோம். ஆனால், 60கள் 70களில்இலங்கை வித்தியாசமான பாதையைத் தேர்ந்தெடுத்தது. பெரும்பாலான தொழில் முயற்சிகள் அரசாங்கத்தினால் தேசியமயமாக்கப்பட்டன. இதனால் பொருளாதாரச் செயற்பாடுகளும், மூலதன உருவாக்கமும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து யுத்தம் 20 வருடங்களாக அழிவுகளை ஏற்படுத்தியது. இவற்றின் பயனாக நாம் தென்னாசிய நாடுகளின் பொருளாதார அந்தஸ்திலிருந்து மிகவும் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம். இதனால், 'இலங்கையை மீட்டெழுச்சி பெற வைத்தல்' எனும் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

இதன் இலக்குகள் நவீனமயப்படுத்தல், இலங்கையின் கேந்திர அமைவை அனுகூலமாகப் பயன்படுத்தி கடல்வழி, வான்வழி வர்த்தகத்தின் மையமாக ஆக்குதல், போட்டிமூலமான பெறுமதி அதிகரிப்புக்கு தளமமைத்தல், மனிதவள அபிவிருத்தி என்பனவாகும். இவற்றை நிறைவேற்றுவதற்கு பல்வேறு பொருளாதாரத் துறைகளில் அபிவிருத்திகளை நிறைவேற்ற வேண்டும்.

ஓர் அரசாங்கமென்ற வகையில் எம்முன் இரண்டு முக்கிய பணிகள் உள்ளன. உற்பத்தியின் பயன்களை வர்த்தக முயற்சிகளால் வென்றெடுப்பதற்குரிய சூழலை உருவாக்க வேணடும். அரச நிறுவனங்கள் விளைபயன்களை குறைந்த செலவில் நிறைவேற்றவல்லவனாக மாற்றப்பட வேணடும்.

துரதிர்ஷ்டவசமாக, எமது நாட்டின கடந்தகாலச் செயற்பாடுகள் இதற்கேற்றவனாக இல்லை. இது எமக்கு முன், பெரிய சவாலாக உள்ளது.

உதாரணத்திற்கு கல்வித்துறையை எடுத்துக்கொண்டால் உயர் கல்விக்கு ஏராளமான வளங்கள் பயன்படுத்தப்படும் எமது நாட்டின் நிலை 1980 களில் நான் கல்வி அமைச்சராக இருந்த காலங்களில் இருந்ததைவிட மோசமாவேயுள்ளது. பட்டதாரிகள் பெற்ற கல்வி அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதாக இல்லை. பட்டதாரிகளே வேலையின்மைப் பிரச்சினையால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அதாவது, 1970களிலும் 1980களிலும் தென்னிலங்கையில் ஜே.வி.பியின் பயங்கரவாத நிலைமைகளை தோற்றுவித்த நிலையே நிலவுகின்றது.

மாணவர் பெற்ற பயிற்சிகளுக்கும் நாட்டின் பொருளாதார தேவைகளுக்கும் தொடர்பில்லாத நிலையே இருக்கிறது. உயர்தரவகுப்பில் சித்தி பெறும் மாணவர்களில் 85 சதவீதமானவர்களுக்கு உயர்கல்வி கிடைப்பதில்லை. இந்தவிதமாக மனித வளங்கள் பயன்படுத்தப்படாமல விடப்படுகின்றன. இவை உற்பத்தியை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க தடைகளாகவுள்ளன. ஜனநாயக முறைப்படி செயற்படும் எமது அரசாங்கங்கள் தூரநோக்குத் திட்டங்களை நாடுவதில்லை. எந்தவோர் அரசாங்கமும்



அடுத்த தேர்தலைக் கருத்திற் கொண்டே திட்டங்களை வகுத்தன.

சர்வதேச உதவி வழங்கும் சமூகத்துடன் எமது கூட்டுறவு முக்கியமானது. சர்வதேச நாடுகளின் குறிப்பாக ஜப்பானின் ஆதரவிலும், தாராள தன்மையினாலும் இலங்கை பெரும் பயனைப் பெற்றுள்ளது. இன்று நாம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதையும், பொருளாதாரத்தை மறுசீரமைப்பதையும் முதன்மைப்படுத்தியிருப்பதால் சர்வதேச சமூகத்தில் முன்னெப்போதையும் விட அதிகமாக தங்கிநிற்க வேணடியுள்ளது. இந்த இலக்கை உங்கள் ஒத்துழைப்பின்றி எம்மால் நிறைவேற்றமுடியாது.

புனர்நிர்மாணம், புனர்வாழ்வுக்கான நிதியுதவிகளுக்கும், நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக்கும் சர்வதேசத்தில் தங்கியிருக்கவேண்டியுள்ளது. எமது இழக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புக்களை மீளப்பெற்று நாமே எமது சுமைகளை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு முன்னேறுவதே எமது உறுதியான நோக்கம்.

இதனை நிறைவேற்றுவதற்கு நாம் எமது மனிதவளமுட்பட இயற்கை வளங்களையெல்லாம் உற்பத்தி நோக்கில் ஈடுபடுத்தவேண்டும். இவற்றில் எமது நட்பு நாடுகள் வழங்கும் நிதியுதவிகளும் முக்கிய வளங்களாகும். இதனை நாம் செய்யத் தவறுவோமாயின் இலங்கையின் பொருளாதார வளவாய்ப்புக்கள் அருகி அழிந்து போவதுடன் நிரந்தர சமாதான முமஎட்டப்படமுடியாததாகிவிடும்.

இவ்வாறு கூறினார் பிரதமர் ரணில். (ஐ)

### கஸ்தூரியார் வீதியில் நடந்த

# விபத்து தொடர்பாக பலரிடம் வாக்குமூலம் பெறப் பணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.கஸ்தூரியார் வீதிப் பகுதியில் யுவதி ஒருவர் கடந்த புதன் கிழமை லொறியினால் மோதுண்டு உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விபத்து நடந்த இடத்துக்கு அருகிலுள்ள வியாபார நிலையங்களில் பணிபுரிவோரின் வாக்குமூலங்களை பதிவுசெய்து நாளைமறுதினம் திங்கட் கிழமை மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலீஸாருக்கு யாழ். நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

விபத்து நடந்த இடத்துக்கு நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டபின்னர் நீதிவான் இ.த.விக்னராஜா இந்த உத்தரவை விடுத்தார். அத்துடன் கஸ்தூரியார் வீதியின் இருமருங்கிலுமுள்ள வியாபார நிலையங்களின முன்பாக பொருள்களை வைத்து விற்பனை செய்வதைத் தடைசெய்யுமாறு போக்குவரத்து பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் மூவரின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட யுவதியின் சகோதரரான குருநாதபிள்ளை பரமேஸ்வரன், யுவதி வேலைசெய்த புடவைக் கடையின் உரிமையாளர் மரியநாயகம் அனரன் ஜெகநாதன், படுகாயமடைந்த யுவதியை வைத்தியசாலைக்கு ஓட்டோவில் அழைத்துச் சென்ற கடை ஒன்றின் ஊழியரான சூசைநாயகம் பிரோஜன் ஆகியோரது வாக்குமூலஙகளே பதிவுசெய்யப்பட்டன. (ஐ-10-8)

# பால்மா, பாண் விலைகள் தென்னிலங்கையில் குறைப்பு

தென்னிலங்கையில் விற்கப்படும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் முழு ஆடைப் பால்மா விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 99 ரூபா 50 சதமாக முன்னர் விற்பனை செய்யப்பட்ட 450 கிராம் பால்மா பைக்கற் ஒன்றின் விலை 89 ரூபா 50 சதம் ஆகும்.

அதேவேளை, அடுத்தவாரம் முதல் பிறிமா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 450 கிராம் பாணின் விலையை 9 ரூபா 95 சதமாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக் குறைப்புக்கள் பொதுமக்களின் நன்மை கருதி செய்யப்பட்டுள்ளன என வர்த்தக நுகர்வோர் அமைச்சரர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (ஏ)

பரவலாக மழைபெய்து வருவதை அடுத்து

# இம்முறை நெல்விளைச்சல் அதிகரிக்கும் வாய்ப்பு

## விவசாயப்பணிப்பாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது பரவலாகப் பெய்துவரும் மழையை அடுத்து இம்முறை நெல்விளைச்சல் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என யாழ்மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களைவிட இம்முறை (2002/2003) பெரும்போக காலத்தில் அதிக ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய திருத்திய நெல் இனங்களான ஏ.ரி 402, பி.டபிள்யு 351, பி.ஜி 500, ஏ.ஜி 353, எல்.டி 356, எச் 4 ஆகியவற்றுடன் உள்நாட்டு வர்க்கங்களான மொட்டைக்கறுப்பன், பெரியவெள்ளை, முருங்கன் ஆகியவையும் இந்த 7 ஆயிரத்து 500 ஹெக்டேயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டுள்ளன.

செய்கை பண்ணுவதற்கென கடந்த காலங்களில் படையினரால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலப்பரப்புக்களில் சில இந்த ஆண்டு பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை - புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், ஈவினை, சிறுப்பிட்டி, பத்தமேனி பகுதிகளில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை கடந்த மாத நடுப்பகுதியில் இருந்து நடைபெற்று வருவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)

## வலிகாமத்தில் முன்பள்ளி மாணவருக்கு சத்துணவு

வலிகாமம் தெற்கு,டிசெ.7

வலிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்தி சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் முன்பள்ளிகளில் கல்வி பயிலும் 2 ஆயிரத்து 200 பிள்ளைகளுக்கு மேற்படி சங்கத்தினால் தினசரி சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

தெல்லிப்பழை, சுன்னாகம், மானிப்பாய், கோண்டாவில், சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய ஆறு அங்கத்துவ சங்கங்கள் மூலம் 57 முன்பள்ளிகளை பனை, தென்னைவள அபிவிருத்தி சங்கம் நடத்தி வருகிறது.

இங்கு கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு 1998 ஆம் ஆண்டு முதல் தினமும் சத்துணவு வழங்கப்பட்டு வருவதாக சங்கத்தின் பொது முகாமையாளர் க.சுதாகரன் தெரிவித்தார்.

முன்பள்ளியில் பணிபுரியம் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகளை கல்வி, திணைக்கள உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (எ-152)

# புனர்வாழ்வு அமைச்சு மீது மகேஸ்வரனின் குற்றச்சாட்டு

தமிழ் மக்கள் தமது உடைமைகள், உரிமைகள் அனைத்தும் இழந்தனர். இது தொடர் கதையாகிவிட்டது. புனர்வாழ்வு அமைச்சர்களாக இருந்தவர்கள் எதுவித புனர்வாழ்வு நடவடிக்கையும் தமிழ் மக்களின் நன்மையினைக் கருதி மேற்கொள்ளவில்லை. லட்சக்கணக்கான பணம் அவர்களால் சூறையாடப்பட்டு வடக்கில் வாழும் எமது மக்கள் ஏமாற்றப்பட்டனர். அந்த நிலையே இன்றும் தொடர்கிறது.

புனர்வாழ்வு, மீள்குடியமர்தல் அகதிகள் விவகார அமைச்சின் மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின்போது இந்து பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்டு இடம்பெயர்ந்த எமது மக்கள் இன்றும் துயரத்தின் விளிம்பிலேயே வாழ்கின்றனர். 295மில்லியன் ரூபாவைப் பிரதமர் புனர்வாழ்வு அமைச்சுக்கு ஒதுக்கினார். அதில் ஒரு சில ஆயிரம ரூபாக்களாவது வடபகுதி மக்களின் நலன்களுக்காக செலவிடப்படவில்லை.

சிவப்பு சீனி, உளுத்த அரிசி இவையே எமது மக்களுக்குத் தொடர்ந்தும் வழங்கப்படும் நிவாரணங்களாகும்.

தரைப்பாதை திறக்கப்பட்டும் வடபகுதிக்கு பொருள்கள் புனர்வாழ்வு அமைச்சினால் கப்பல்கள் மூலம் ஏன் அனுப்பப்படுகின்றன? ஒரு மூடை அரிசியின் கப்பல் செலவு ரூபா 220 ஆகும்.

எமது பிரதேசத்தை நாமே நிர்வகிக்கவேண்டும் என்ற நிலையே எழுந்துள்ளது. இருபது வருடகாலமாக நடந்த யுத்தத்தின் அனர்த்தங்களைப் புனர்வாழ்வு அமைச்சு ஒரு பொருட்டாக மதித்துச் செயற்படவில்லை.

52 அமைச்சுக்கள் நாட்டை நிர்வகிக்கின்றன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவுவதற்கு ஓர் அமைச்சாவது முன் வருவதில்லை. எல்லாவற்றுக்கும் நமது மக்கள் புனர்வாழ்வு அமைச்சிடம் கையேந்தி ஏமாறும் நிலையில்தான் காலத்தைக் கழிக்கவேண்டியுள்ளது.

எம்மைத் தெரிவுசெய்த மக்கள் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வை எதிர்பார்க்கின்றனர். வடபகுதியில் களியாட்டங்கள் நடத்துமாறு அவர்கள் புனர்வாழ்வு அமைச்சரைக் கோரவில்லை. அகதி முகாம்கள் எதுவும் மூடப்படவில்லை. ஏழு தீவுகளில் ஒரு தீவிலாவது படகுச் சேவை நடத்தப்படவுமில்லை. இதுவே வடபகுதி மக்களின் வாழ்க்கை நிலையாகும். இப்படி அவர் கூறினார். (ஒ)

## சண்டிலிப்பாயில் 67 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு நிதி

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 67 குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா மீள்குடியமர்வு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது வங்கிகளுக்குச் சென்று கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம் என உதவித்திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-152)


சிவமயம்

# விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் கார்த்திகைத் திங்கள் 23ஆம் நாள் (09.12.2002) திங்கட்கிழமை திருவோண நக்ஷத்திரமும் ஷஷ்டி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய முற்பகல் 9.45 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள மகர லக்கின சுபமுகூர்த்தவேளையில்,

| | |
|---|---|
| மல்லாகம் ஆதீனம் | மாவிட்டபுரம் |
| பிரம்மஸ்ரீ முத்தையா குருக்களின் | பிரம்மஸ்ரீ ச.சொக்கநாதக் குருக்களின் |
| பௌத்திரனும் | பௌத்திரியும் |
| பிரம்மஸ்ரீ மு.இரத்தினசாமிக் குருக்கள் | பிரம்மஸ்ரீ சொ.இரத்தினசபாபதிக் குருக்கள் |
| அவர்களின் புத்திரனுமாகிய | அவர்களின் புத்திரியுமாகிய |
| சிரஞ்சீவி | சௌபாக்கியவதி |
| இ.பிரபாகரசர்மா | ஹேமலதா |
| சிவாகம இரத்தினம் (பிள்ளையார் பட்டி) | அவர்களுக்கும் |
| அவர்களுக்கும் | |



கன்னிகாதான மாங்கல்யதாரண, பாணிக்கிரகம் செய்யத் திருவருள் துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் மணமகள் இல்லத்தில் நடைபெறும் சுபமுகூர்த்தத்தில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: 08.12.2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும். (ஊரெழு)

மாங்கல்யதாரணம்: மணமகள் இல்லம். (கொக்குவில்)

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (11381)

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ மு.இரத்தினசாமிக் குருக்கள் | பிரம்மஸ்ரீ சொ.இரத்தினசபாபதிக் குருக்கள் |
| பார்வதி அம்மா தம்பதியினர் | சம்பூர்ணவல்லி தம்பதியினர் |
| 108, அல்விஸ்வத்த, கேகித்த, வத்தளை. | ஆடியபாதம்வீதி, கொக்குவில்மேற்கு. |
| T.P.: 075 350996 | T.P.: 0777 149440 |

(இரு வீட்டார் அழைப்பு)

வரவேற்பாளர்: பிரம்மஸ்ரீ இ.விக்னேஸ்வரக் குருக்கள் (பிரதம குரு, கொக்குவில் மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், சொர்ண சித்தி விநாயகர் தேவஸ்தானம்)



# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி பரிமளம் ஜெயம்

(கல்யாணி)

பிறப்பு 23-02-1953 இறப்பு 07-12-1998

பாலுடன் சேர்த்து பாசம் பகிர்ந்தாய் - அம்மா!
அன்புடன் குழைத்து அறிவு தந்தீர்கள் - அம்மா!
அன்பான எம் அம்மாவே!
கண்ணீரில் கரைகின்றோம் - கதிகலங்கித்
தவிக்கின்றோம் - அம்மா!
என்றும் எங்கள் வாழ்விற்கு ஒளிதந்த தெய்வமே!
உறவோடு வந்தானே தீ கொண்ட காலன்
பாரினிலே எம் பாசங்களை ஏங்கித் தவிக்கவிட்டு
எங்கு சென்று மறைந்து விட்டீர்கள் அம்மா?
நான்கு ஆண்டுகள் ஓடி வந்தது அம்மா!
நீயோ கனவுலகில் கலந்தாயோ அம்மா?
உங்கள் நினைவலைகள் எம்மை
தினமும் வாட்டுதே - அம்மா!
காலங்கள் ஓடினாலும் உங்கள்
நினைவுகள் எமக்கு மாறாதே அம்மா!
அம்மா என்ற தலைவி இல்லாமல்
கலங்குகின்றோம் - அம்மா!
அம்மா என்று இனி யாரை அழைப்போம் அம்மா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தகவல்:
த.சுகந்தி (மகள்)

நிரந்தர முகவரி:
வண்ணார்பண்ணை, பளை.

தற்காலிக முகவரி:
துன்னாலை தெற்கு, கரவெட்டி. (11339)

உங்கள் பிரிவால் துயறும்:
கணவர், தாய், பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.



## விஞ்ஞானபீட வறிய மாணவர்கள் நிதியுதவிக்காக

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பின் பெறுபேறுகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 7393 |
| இரண்டாம் பரிசு | 4723 |
| மூன்றாம் பரிசு | 6241 |

ஆறுதல் பரிசு பெறுபவர்கள்:
8574, 2509, 2215, 6127, 1717, 6767, 2204, 7516, 1911, 2586

பரிசிலிற்குரியவர்கள் வாரநாள்களில் விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C/11463)



# Ordination Service

**Sevak.Philipkumar** will be Ordained for a Special Ashram ministry, by the President of the Methodist Conference, together with the heads of the National Christian Council of Churches in Sri Lanka. On the 9th December 2002 at 5.00 p.m. at the Christa Seva Ashram, Chunnakam, Jaffna.

*You are Cordially Invited.*

*Christa Seva Ashram,*
*Maruthanamadam, Chunnakam.*

Board of the
Christa Seva Ashram.

(11407)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பில் 08 - 04 - 1954



அரக்கனின் அழிப்பில் 16 - 12 - 2001

## அமரர் வினாசித்தம்பி ஜெகசோதி

திதி: திருதியை 07.12.2002

ஆண்டொன்று சென்றாலும் அணையாத திருமுகமே!
காலங்கள் ஓடினாலும் உங்கள் நினைவலைகள் ஓடிடுமா?
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா அப்பா?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

(11429)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

# முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபரின் சந்தர்ப்பவாத அரசியல் கருத்துக்கள்

**முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபரும் தற்போதைய 'சிஹல உறுமய'க் கட்சியின் பிரமுகருமான கொட்டஹதெனிய சமாதானப் பேச்சுகள் கைவிடப்படவேண்டும் எனவும், நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பிரபாகரனை மறைத்து வைத்திருப்பதற்காக அன்ரன் பாலசிங்கத்தைக் கைதுசெய்ய வேண்டும் எனவும் கூறுகிறார். இதேபோலவே இதே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட ஜே.வி.பியின் தலைவருக்கும் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. ஆயுதப்போராட்டத்துக்கு தலைமை தாங்கிய தமது இனத்தைச் சேர்ந்த விஜேவீராவை தெய்வமாக மதிக்கும் ஜே.வி.பியினர் அதே விதத்தில் ஆயுதப்போராட்டம் நடத்தும் பிறிதோர் இனத்தைச் சேர்ந்த தலைவனுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என வாதிடுவது அரசியல் சந்தர்ப்பவாதம் என்கிறார் கட்டுரையாளர் சுனந்த தேசப்பிரிய. 'ராவய' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## மாற்றார் தோட்டத்திலிருந்து.....

பொலீஸ் மா அதிபர் பதவி தமக்கே வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதி



பர் கொட்டகதெனிய, தான் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும் உடனடியாக 'சிஹல உறுமய' கட்சியில் இணைந்துகொண்டார். ஸ்ரீலங்கா நாடு சிங்கள மக்களுக்கு சொந்தமானது எனவும், வேறு இனத்தவர் இங்கு வாழவேண்டுமாயின், அவர்கள் சிங்களமக்களின் இந்த உரிமையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என வலியுறுத்தும் கொள்கை கொண்ட அமைப்பே 'சிஹல உறுமய' ஆகும். 'சிஹல உறுமய'வில் இணைந்துகொண்ட கொட்டகதெனியவின் முதலாவது முக்கிய அரசியல் நடவடிக்கையாக அமைந்தது அன்ரன் பாலசிங்கத்தைக் கைதுசெய்ய வேண்டும் எனப் பொலீஸாரை வேண்டிக்கொண்டதாகும். ஸ்ரீலங்கா உயர் நீதிமன்றத்தால் 200 ஆண்டு காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்ட பிரபாகரனுடன் நெருக்கமாக உறவுகளைக் கொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அன்ரன் பாலசிங்கம் கைதுசெய்யப்படவேண்டும் என கொட்டகதெனிய வேண்டியுள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய பேச்சாளர் என்ற வகையில அன்ரன் பாலசிங்கம் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்டார். அவர் வன்னியில் இருந்து பேச்சுக்களுக்காக கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாகவே தாய்லாந்துக்குச் சென்றார். ஆகையால் ஸ்ரீலங்கா அரசு கொட்டகதெனியவின் யோசனையை நடைமுறைப்படுத்தமுடியாது என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை. கொட்டகதெனியவின் யோசனையை ஏற்று அன்ரன் பாலங்கத்தைக் கைதுசெய்தால் சமாதான முயற்சிகள் பின்தள்ளப்பட்டு மீண்டும் யுத்தநிலையைத் தோற்றுவிக்க 'சிஹல உறுமய'வும், கொட்டகதெனியவும் ஆவலாக இருப்பதாகத் தோன்றுகிறது. அவ்வாறான நிலைமை உருவானால் என்ன நடக்கும் என்பது வேறு பிரச்சினையாகும்.

முக்கியமான வினா அதுவல்ல. முன்னாள் பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு ஓய்வுபெற்ற பின்னர் அப்பதவி தனக்கே வழங்கப்படவேண்டும் என்ற கொட்டகதெனியவின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் இன்று பொலீஸ் மா அதிபராக கொட்டகதெனியவே இருந்திருப்பார். அவ்விதம் நேர்ந்திருப்பின் 'சிஹல உறுமய'வின் வேண்டுகோளின் பேரில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று அன்ரன் பாலசிங்கத்தை கைதுசெய்யும் நடவடிக்கையை அவரால் மேற்கொள்ள முடிந்திருக்குமா? 'சிஹல உறுமய' அவ்விதம் வேண்டிக்கொண்டிருப்பினோ, இல்லாவிடினோ தனது மனச்சாட்சியின்படி தானாக அவ்வித நடவடிக்கை மேற்கொள்ள கொட்டகதெனியவால் முடிந்திருக்குமா? பொலீஸ் சேவையில் இருந்தவேளையில் அவர் தன்னை ஒரு விசுவாசமுள்ள அதிகாரியாக அல்லது எதையும் வெளிப்படையாக பேசும் அதிகாரியாகக் காட்டிக்கொள்ள முயன்றார். அப்படியாயின் தான் பொலீஸ் சேவையில் கடமையாற்றிய வேளையில் கைதுசெய்யப்படவேண்டிய - நீதிமன்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்த - பிரபாகரனுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கத்தைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்காதது ஏன்? தற்போதைய அரசு சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்தவேளையில் கொட்டகதெனிய பிரதிப் பொலீஸ் மா அதிபராக பொலீஸ் சேவையில் கடமையாற்றினார். அவ்வேளை அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாகக் கடமையாற்ற அவர் பின்னடித்தாரா? தற்போது அன்ரன் பாலசிங்கத்தைக் கைதுசெய்யவேண்டும் என்ற கோஷத்துடன் கொட்டகதெனிய இணைந்துள்ளது அவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்று சிஹல உறுமய கட்சியில் சேர்ந்துள்ளதால் மட்டும்தானா?

பிரபாகரனுக்கு விதிக்கப்பட்ட 200 வருட சிறைத்தண்டனையை நீதிமன்ற உத்தரவுப்படி நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்களுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வது தேசத்துரோகமெனவும் ஆர்ப்பாட்டம் செய்வதில் 'சிஹல உறுமய'வை விட ஜே.வி.பியினரே முன்னிலை வகிக்கின்றனர். ஜே.வி.பியினர் கடந்தவாரம் தமது தலைவர் விஜேவீராவின் படத்துடன் கூடிய சுவரொட்டிகளை நாடு பூராகவும் சுவர்களில் ஒட்டி ஜே.வி.பி. விஜேவீராவின் வழியிலே செல்வதாகத் தெரிவித்திருந்தனர்.

சமாதான முயற்சிகளைக் கைவிட்டு, பிரபாரகரனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரசாரம் மேற்கொண்டுவரும் ஜே.வி.பியினர், விஜேவீரா தொடர்பாக குதர்க்கம் பேசுவது ஏன்?

1971 ஏப்ரல் கிளர்ச்சி தொடர்பான வழக்கில் முதலில் விஜேவீராவுக்கு விதிக்கப்பட்ட ஆயுட்கால சிறைத்தண்டனை பின்னர் 20வருட சிறைத்தண்டனையாக மாற்றப்பட்டது. குற்றவியல் நீதிமன்ற நீதிபதி ஏச்.என்.ஜி. பெர்னாண்டோ உள்ளிட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஐவரது ஏகமனதான தீர்மானப்படி றோகண விஜேவீரா ஆயுட்கால சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டிய குற்றவாளியாகக் காணப்பட்டார்.

பிரபாகரனுக்கு விதிக்கப்பட்ட 200 ஆண்டுகால சிறைத்தண்டனைக்கு விஜேவீராவுக்கு விதிக்கப்பட்ட ஆயுட்காலச் சிறைத்தண்டனைக்கும் இடையே பெரிய வித்தியாசம் எதுவும் காணப்படவில்லை. பிரபாகரனைப்போன்றே விஜேவீராவுக்கும் எதிராக பயங்கரவாத நடவடிக்கை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. தான் ஆயுதம் மூலம் எதிர்ப்பை வெளிப்படுத்தியதாக விஜேவீரா ஒப்புக்கொண்டார். தான் ஜே.வி.பிக்குத் தலைமை தாங்கியதாகவும் ஒப்புக்கொண்டார். ஏப்ரல் கிளர்ச்சிமூலம் நாட்டுக்கும் உயிர்களுக்கும் பெரும்சேதம் விளைவிக்கப்பட்டது. இக்குற்றங்களுக்காகவே விஜேவீராவுக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.



கொட்டகதெனிய

தாம் பதவிக்கு வந்ததும் கிளர்ச்சியாளர்களை விடுதலை செய்வதாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன வழங்கிய உறுதிமொழியின் காரணமாக (ஏப்ரல் கிளர்ச்சியாளர்களின் உறவினர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில்) 1977இல் விஜேவீரா தண்டனையினின்றும் விடுதலையாகி அரசியலில் ஈடுபடமுடிந்தது. தேர்தலுக்கு முன்பு பதவியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டணி மண்டும் பதவிக்கு வந்திருந்தால் இப்போது விஜேவீரா சிறைத்தண்டனையை அனுபவித்துக்கொண்டிருப்பார்.

பிரச்சினை அதுவல்ல. மேல்நீதிமன்ற நீதிபதிகள் ஐவரினால் ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு நாடு முழுவதும் சுவரொட்டிமூலம் பிரசாரம் மேற்கொள்ளும் உரிமை ஜே.வி.பியினருக்கு எவ்வாறு வழங்கப்பட்டது. 1971 கிளர்ச்சியை நடத்தியமைக்காக விஜேவீராவுக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டதாயின் 1987 - 90 ஆண்டு காலத்தில் இடம்பெற்ற கிளர்ச்சிகளுக்காக அவருக்கு எத்தனை ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கமுடியும்? விஜேவீராவின் ஆணையின்படி கொல்லப்பட்ட நிராயுதபாணிகளான அப்பாவிப் பொதுமக்களின் பிள்ளைகள் இன்றும் எமது கிராமங்களில் வாழ்கின்றனர். தமது தந்தையைக் கொல்ல ஆணையிட்ட நபரை வீரபுருஷராக சித்திரித்து சுவர்களில் ஒட்டப்பட்டுள்ள படத்தைக் காணும் அப்பிள்ளைகளின் மன உணர்வுகள் எவ்வாறு இருக்கும்?

இவ்வெதிர் விரோதநிலை பற்றி நாம் புரிந்துகொள்ளவேண்டுமானால் விஜேவீராவின் அரசியல் கோட்பாடுகள் பற்றி நாம் அறிந்திருத்தல் அவசியமாகும். அவருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையைவிட அவரால் ஊக்குவிக்கப்பட்ட வன்முறை அரசியல் பெரிதாகத் தெரிவதற்கு இதுவே காரணம். விஜேவீராவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் அவரது கையால் இடம்பெற்ற வன்செயல்கள் ஆகிய யாவும் இன்று ஜே.வி.பியினரால் நினைவூட்டப்படுவதும் இதனாலேயேயாகும்.

ஆயுதப் போராட்டத்துக்கு தலைமை தாங்கிய ஓர் இனத்தைச் சேர்ந்த தலைவனை தெய்வத்துக்குச் சமமாகப்போற்றும் ஜே.வி.பியினர், அதே விதத்தில் தலைமை தாங்கிய பிறிதோர் இனத்தைச் சேர்ந்த நபரை அவர்களின் தலைவனாகக் கணிக்காது உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்



படையில் ஸ்ரீலங்கா அரசியல் தீர்ப்பாகக் கருதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என எவ்விதம் வாதிடமுடியும்?

அன்று முதலாளித்துவ நீதிமன்றத்தின் தீர்ப்பை தான் ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை என விஜேவீரா கூறினார். இன்று சிங்கள நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தான் பொருட்படுத்தப்போவதில்லை என பிரபாகரன் கூறுகிறார்.

கொட்டகதெனிய முதல் விமல் வீரவன்ஸ வரை சமூகத்தில் காணப்படும் இவ்வெதிர் விரோத நடவடிக்கைகள் வளர்ச்சியடைவதை நாம் எவ்விதம் தடுத்து நிறுத்தலாம்? இவ்வாறான அரசியல் சந்தர்ப்பவாதத்துக்குப் பொருத்தமான பெயராக என்ன பெயரை இடலாம். ★

தமிழில்: வியெஸ்ரீ

# திருக்கேதீச்சர கும்பாபிஷேகத்தை ஜனவரியில் நடத்த நடவடிக்கை

## படைகள் முற்றாக வெளியேற திருப்பணிச்சபை வலியுறுத்து

மேன்மைகொள் சைவநீதி விளங்கி நிற்கும் திருக்கேதீச்சரத் திருக்கோயில் திருக்குடத் திருமுழுக்கு, அதாவது கும்பாபிஷேக விழாவினை அடுத்த 2003 ஜனவரி மாதத்தில் நிகழ்த்தத் திருப்பணிச் சபையினர் எண்ணியுள்ளனர்.

மேற்படி விழாவினை ஒட்டிய திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. முதற்கட்டமாக ஆலய சிவாச்சாரியர்களின் 12 மனைகளைக் கொண்ட வதிவிட நிர்மாண வேலைகள் 75 சதவீதம் நிறைவடைந்துள்ளன.

ஆலயத்தின் ஏனைய பணியாளர்களின் மனைகள் அமைக்கப்படவுள்ளன. மாலை தொடுப்பவர், மேளவாத்தியக்காரர்கள், அலுவலகப் பணியாளர்கள், பசுப்பண்ணை, மின் நிலையம், உள், வெளிக் கோயில் உதவிப் பணியாளர்கள், அறங்காவலர் மனைகள் ஆகியனவே அமைக்கப்படவுள்ளன.

திருத்தலத்திற்கு வருகைதரும் அடியார்கள், அன்பர்கள் தங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்.

இருபத்தாறு பெரு மடங்களும், ஆறு பெரும் மனைகளும் இருந்த இடம் தெரியாது பொட்டல் நிலமாகக் காட்சி தருகின்றது ஆலயச் சுற்றாடல்.

அத்தனையும் கொடிய போரினால் (இராணுவத்தால்) அழித்தொழிக்கப்பட்டுவிட்டன. இவற்றை மீள அமைப்பதற்குப் பெருநிதி தேவைப்படுகின்றது. தேவைப்படும் பெரு நிதியினைப் பெற அரசும், சைவ அடியார்களும் முன்வரவேண்டும்.

திருக்கேதீச்சரச் சூழல், கிராமம், அயற்கிராமங்களான மாந்தை, பெரிய நாவற்குளம், மூலைத்தோட்டம், நாகத்தாழ்வு, முள்ளிப்பளம் ஆகியன சுற்றிவளைக்கப்பட்டு பெரிய காவலரண்களும் பாசறைகளும் நிரந்தரமானவையாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆலயத் திருக்குடத் திருமுழுக்கு விழா நிகழ்ந்ததும் நாளாந்தம் ஆறுகாலப் பூசைகளும் அபிஷேகங்களும் திருவிழாக்களும் தொடர்ந்து நடைபெறவேண்டும்.

பூசை, பெருவிழாக்கள் நிகழ சூழலிலும் அயற்கிராமங்களிலும் இருந்து மக்களின் வருகையும் உதவிகளும் மிக மிக இன்றியமையாதனவாகும்.

தற்போதைய சூழ்நிலையில் ஆலயச் சூழலிலும் திருக்கேதீச்சரக் கிராமத்திலும் அயற் கிராமங்களிலிருந்தும் இடம்பெயர்ந்து சென்ற பல நூற்றுக்கணக்கான மக்கள் மீள்குடியேறி வாழமுடியாத அளவிற்கு அவர்கள் குடியிருந்த அனைத்து வாழ்விடங்களும் முற்றுமுழுதாய் அழிக்கப்பட்டு இராணுவம் தன்னகப்படுத்தி வைத்திருக்கின்றது.

இந்தநிலை தொடருமாயின் ஆலய அன்றாட பூசைகளோ விழாக்களோ அமைதியாக நிகழ்வதற்கு வழியுமில்லை; மக்களின் உதவிகளும் ஆலயத் தேவைக்குக் கிட்டப்போவதுமில்லை.

எனவே, இவ்விடங்களிலிருந்து இராணுவம் முற்றுமுழுதாய் விலகினால்தான் ஆலயத்தின் அனைத்துத் தேவைகளையும் சுபமாக நிறைவு செய்யமுடியும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஏற்றவாறு இராணுவம் நடந்துகொள்ளவில்லை. மாறாக இறுக்கமாகவும் நெருக்கமாகவும் முகாம்களை அமைத்து, காவலரண்கள் அமைத்து வருவது வேதனைக்குரியதாகும்.

திருக்குடத் திருமுழுக்கு விழாவினைச் சிறப்புறச் செய்து நிறைவுபடுத்த பின்வரும் பணிகள் யாவும் விரைந்து செயற்படுத்தப்படவேண்டும்.

☆ தூய பாலாவித் தீர்த்தக் குளம், பற்கள், காடுகள் மண்டியும் கால்வாய்கள் தூர்ந்துமுள்ளன. இவற்றை நீர்ப்பாசனப் பகுதியினர் செம்மைப்படுத்தவேண்டும்.

☆ அடியவர்களின் மிகமிக அவசிய தேவையான குடிதண்ணீர் வழங்கலுக்குரிய நீர்த்தாங்கிகளை அமைத்துக் குழாய்கள் பொருத்தப்படவேண்டும்.

☆ பல பொது மலசலகூடங்கள் அமைக்கப்படவேண்டும்.

☆ பயணிகள் போக்குவரத்திற்கு மன்னார் - தள்ளாடி - பூநகரிப் பெருஞ்சாலை திருத்தி அமைக்கப்பட்டு நாளாந்தம் பேருந்துச் சேவைகள் நிகழவேண்டும்.

☆ அரச பொது நிறுவனங்கள், அங்காடிகள் அமைக்கப்படுதல் வேண்டும்.

☆ பதினைந்து லட்சம் ரூபா செலவில் அழிக்கப்பட்ட 50 ஏக்கர் காடுகளைவிட எஞ்சிய காடுகள் அழிக்கப்பட்டு மீள் குடியமர்வுகள் விரைவாக ஏற்படுத்தப்படவேண்டும்.

☆ இவையனைத்தும் செய்ய இராணுவம் ஆலயச் சூழலிலும் அயற்கிராமங்களிலும் தாம் கையகப்படுத்தியுள்ள நிலங்களை விட்டு வெளியேறியே ஆகவேண்டும்.

மேற்காட்டிய பணிகள் அனைத்தும் செயற்படுத்தப்படவேண்டுமாயின் எமது இக்கோரிக்கை தாமதமின்றி நிறைவேற்றப்படவேண்டும்.

திருப்பணிச் சபை தற்போதுள்ள நிலைப்பாடுகளைத் தெளிவாக விளக்கியுள்ளது.

அரசும் சமாதானக் குழுக்களும் இதனைக் கருத்திற்கொண்டு மேற்படி வேண்டுகோள்களைத் தாமதமின்றிச் செயற்படுத்தித்தர வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்துதர முயலவேண்டும்.

பெருமையும், சிறப்பும், பாடல் பெற்றதுமான அருள்மிகு திருக்கேதீச்சரப் பெருங்கோயிலின் நிலை கண்டு மக்கள் உளம் வெந்து கொதிப்புடன் வாழ்கின்றனர். இந்த உண்மையையும் இராணுவம் அகன்றுவிட்டதாக ஊடகங்கள்மூலம் தெரியப்படுத்தப்படும் உண்மை நிலைப்பாட்டையும் சம்பந்தப்பட்டவர்கள் நேரில் வந்து கண்டறிய வேண்டும் - என்று திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை தெரிவித்துள்ளது. ✦







கவிஞர் இ.முருகையன் எழுதிய 'உண்மை' என்ற நாடக நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கவிஞர் இ.முருகையன் ஏற்புரை நிகழ்த்துவதையும், கல்லூரி அதிபர் சிவசிதம்பரம், க.ஆனந்தக்குமாரசுவாமி, க.தணிகாசலம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர், ஆ.இராஜேந்திரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் முதல படத்திலும் -

'உண்மை' நூலின் இடம்பெற்றுள்ள 'குற்றம் குற்றமே' என்ற நாடக ஆற்றுகையின்போது எடுக்கப்பட்ட காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம். (ம)

## நாவற்குழியில் மருத்துவ முகாம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நாவற்குழி பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் எதிர்வரும் 15ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி முகாமில் கண், சலரோகம், இரத்த அழுத்தம், தொழு நோய், பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைக்ள் மேற்கொள்ளப்படும் எனவும்-

நாவற்குழி பிரதேசத்தில் உள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்தப் பரிசோதனை முகாமில் கலந்து கொள்ளலாம் என்றும் - கழகச் செயலர் லயன் கா.சற்குணதேவன் அறிவித்துள்ளார்.(எ-117)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

# குற்றம் நிரூபிக்கப்படாததால் சந்தேக நபர்கள் விடுதலை

வலி.வடக்கு,டிசெ.7

களவாடிய பொருள்களை சந்தேக நபர்கள் வைத்திருந்தார்கள் என்பதைப் பொலீஸார் நீதிமன்றத்தின் முன் நிரூபிக்கத் தவறியதையடுத்து திருட்டு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

சுதுமலை வடக்கைச் சேர்ந்த கந்தையா சச்சிதானந்தன் என்பவருடைய 61ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள், 6 ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான சைக்கிள் என்பவற்றைத் திருடி வைத்திருந்ததாகக் கூறி சண்டிலிப்பாயைச் சேர்ந்த சாந்தலிங்கம் சத்தியசீலன், உடுவிலைச் சேர்ந்த துரைசிங்கம் சிவகுமார் ஆகியோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சாட்சிகளில் மூவர் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்காமை மற்றும் சாட்சியம் அளித்தவர் சந்தேக நபர்கள் திருடியதை நேரில் காணவில்லை எனத் தெரிவித்தமை போன்ற காரணங்களினால் சந்தேக நபர்கள் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆயினும், இவர்களினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாகக் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் நீதிமன்றத்தின் முன் இருப்பதினால் சந்தேக நபர்கள் மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

(ஒ-86)

# மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் மூவர் கடத்தல்!

கொழும்பு,டிசெ.7

மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மூவர் கடந்த 3ஆம் திகதி கடத்தப்பட்டனர். இவர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று ஈ.பி.டி.பி. கூறுகிறது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. விடுத்த அறிக்கை ஒன்றில்,

கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரான விஜி எனப்படும் செல்லத்துரை தங்கராசா(வயது 32), வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான நிவாஸ் எனப்படும் நாகராசா நேசராசா(வயது 48) மற்றும் நவம் எனப்படும் கந்தசாமி ஞானசோதி(வயது 46) ஆகியோரே கடத்தப்பட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

ஜனவரி முதல்

# வசாவிளான் ம.வி. சொந்த இடத்தில்!

வலி.தெற்கு,டிசெ.7

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை அடுத்த வருட ஆரம்பத்தில் இருந்து மீண்டும் பழைய இடத்தில் இயங்கவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து இதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலையை ஆரம்பிப்பதற்கான வகுப்பறை நிர்மாணங்கள் மற்றும் பாடசாலை வளாகத்தைத் துப்புரவு செய்தல் போன்ற பணிகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பாடசாலையைச் சுற்றியுள்ள இடங்களில் வளர்ந்துள்ள பற்றைகள், மரம், செடிகள் என்பவற்றை வெட்டியும், பதுங்கு குழிகள், கிடங்குகள் என்பன நிரப்பப்பட்டும் வருகின்றன.

மாணவர்களின் குடிதண்ணீர் பாவனைக்கென இரண்டு குழாய்க்கிணறுகள் அமைக்கும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. மலசலகூடங்களும் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் கடந்த பல வருடங்களாக இடம்பெயர்ந்து உடுவிலில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (எ-152)

# சட்டவிரோத மின்பாவனைக்காக கொழும்பு வர்த்தகர்கள் கைது!

கொழும்பு,டிசெ.7

நீண்டகாலமாகச் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றுப் பயன்படுத்தி வந்த பதினொரு கொழும்பு வர்த்தகர்கள் மின்சார சபையின் விசேட விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோத மின்பாவனையினால் மின்சார சபைக்கு ஏற்பட்ட நஷ்டம் 50 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது.

நீர்கொழும்பு பகுதியில் இருந்தே மின்சார மோசடியில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். இரத்தினக்கல் ஆபரண வர்த்தகர்கள், சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்களே இவ்வாறாக சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தகர்கள் நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். மின்சாரத்தை சட்டவிரோதமாகப் பெற்றமைக்காக 18 லட்சம் ரூபாவை நீதிமன்றுக்குச் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டதுடன் ஒவ்வொருவரும் தலா 500 ரூபா அபராதம் செலுத்தவேண்டும் எனவும் நீர்கொழும்பு மாஜிஸ்திரேற்றும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய எம்.எம்.பூரா உத்தரவிட்டார். (எ)

## திரைப்பட வெளியீட்டுப் பிரிவு திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

விடுதலைப் புலிகளின் திரைப்பட வெளியீட்டுப் பிரிவின் தொடர்பகம் ஒன்று பளைப் பிரதேசத்தில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பளை அரசியற்றுறைப் பொறுப்பாளர் வின்சன் அலுவலகத்தையும் பளை காவல்துறைப் பொறுப்பாளர் பெயர்ப் பலகையையும் திறந்து வைத்தனர். (ம-3)

## மாணவன் கொலை: ஒருவர் அடையாளம் காணப்பட்டார்

கொழும்பு,டிசெ.7

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழக மாணவன் ஒ.வி.சமந்த கொலை சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டவர்களில் 22ஆம் எதிரியான ஹேமல் பிரியதர்சன அடையாள அணிவகுப்பின்போது அடையாளம் காணப்பட்டார்.

சமந்தவின் கொலை சம்பந்தமாக 44 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இதுவரை 19பேர் அடையாளங்காணப்பட்டுள்ளனர். (ஐ)


கிராமசேவையாளர் பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்பு

புதிய பிரிவு ஆரம்பம்:
07.12.2002 (2மணி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.
(11388)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
27/2034 இலக்கப் பாரவூர்தி விற்பனைக்கு
கேள்வி கோரல்

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவையிலுள்ள, 27/2034 ஆம் இலக்கப் பாரவூர்தி கீழ்வரும் வகையில் விற்பனை செய்ய மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விகள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கவரில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
02. கேள்வி சமர்ப்பிப்பவர் மீளளிக்கப்படாத ரூ.1000/- வைப்புச் செய்து, சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் மட்டும் தனது கேள்வித் தொகையினைக் குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
03. உரிய கேள்விகள் யாவும், சங்க நெறியாளர் குழுவால், நியமிக்கப்பட்ட கேள்வி, சபை முன் திறக்கப்பட்டு, அச் சபை எடுக்கும் முடிவே இறுதியானது.
04. தெரிவுசெய்யப்படுபவர், தமக்கு அறிவித்தல் கிடைத்து மூன்று நாள்களுக்குள், ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்படியான முழுத் தொகையையும் செலுத்தி பாரவூர்தியினை எடுத்துச்செல்ல வேண்டும்.
05. அலுவலக நேரத்தில் எமது அனுமதியுடன் பாரவூர்தியினைப் பார்வையிடலாம். கேள்விக்கான விண்ணப்பப்படிவத்தினை அலுவலகத்தில் ரூ.10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
06. விண்ணப்ப முடிவு திகதி: 2002-12-20 ஆகும்.

தலைவர்,
பூநகரி ப.நோ.கூ.சங்கம்.
(C/25263)

மாபெரும் மலிவு விற்பனை
நத்தார் - புதுவருட வாழ்த்து மடல்கள்
இடம்: யாழ்.மரியன்னை பேராலயம்
(ஆயர் இல்லம் அருகில்)

வீடு வாடகைக்குத் தேவை
மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் (தளபாடங்களுடன் விரும்பத்தக்கது) கூடிய வீடு வெளிநாட்டவர் வசிப்பதற்கு வாடகைக்குத் தேவை.
தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு:-
222 3779
222 5136
222 1205
(11479)

உங்களை அழைக்கின்றது!
ஐந்து நட்சத்திரமனை
★ வருடத்தின் 365 நாள்களும்......
தினமும் முற்பகல் 11 மணிமுதல் 3.30 மணிவரை உங்களுக்கான சேவையை வழங்குகின்றது.
ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா
★ உங்களுக்குத் தேவையான உணவுவகைகளை தாமதமின்றி ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம். ஓடர்களுக்கேற்ப சேவை நேரம் மாற்றப்படும்.
உங்கள் அன்பான விஜயம்.
★ குங்குமப்பூ சிக்கன் புரியாணி உடன்
SPICY CURRY AND GARLIC PICKLE
125 ரூபா மட்டுமே.
ஜெசித்தாரா
★ உணவுப்பொதிகள் நண்பகல் 12 மணிமுதல் 3 மணிவரை சுடச்சுட வழங்கப்படும்.
ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா விருந்தகம்
193, கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
★ கால தாமதத்தை தவிர்க்க நேர காலத்துடன் ஓடர்களைத் தருக.

கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை
வெற்றிடங்கள்:- கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கணிசமான வெற்றிடங்கள் உள்ளன.
(1) கல்வித்தகைமை:- க.பொ.த. (சாதாரணதரம்) சித்தி
(2) உயரம்:- 5' 4" (குறையாமல்)
மார்பு:- 32"
வயது:- 20 இல் இருந்து 50 வரை.
(3) நல்ல தேகாரோக்கியமும், நல்ல கண்பார்வையும் இருத்தல்வேண்டும்.
மேற்கூறப்பட்ட தகைமைகள் உடையோர் 08.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குக் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு பிரசன்னமாயிருக்கவும்.
(1) கிராம அதிகாரியின் நற்சான்றிதழ் (06 மாதங்களுக்குட்பட்டது. இல்லாதோர் நேர்முகப்பரீட்சைக்குப் பின்னர் கொடுக்க அனுமதிக்கப்படுவர்)
(2) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(3) கல்வித் தராதரம்
(4) தேசிய அடையாள அட்டை
(5) விசேட அடையாள அட்டை
குறிப்பு: இளைப்பாறிய பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
இல. 43, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக)
பணிப்பாளர்.
(C-25247)

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாககுப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம்மூலம் தீர்வுகாணலாம்.

**ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!**

**மணிசாமி P.T.R.**

யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி,
இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.
(வியாழக்கிழமைகளில் விடுமுறை)
(11488)

## பதினைந்தாவது ஆண்டு நினைவு நாள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 - 09 - 1928 | 07 - 12 - 1987 |

**அமரர் வே.த.தணிகாசலம்** (அதிபர், குருமாமணி)

ஆசிரியத்துவத்தின் அணிகலனாகி
அதிபராக அறிவுரைகள் பல புகட்டி
சத்தியத்தின் வழிநின்று
சான்றோராக எமை வளர்த்தெடுத்து
சாதனைகள் பல படைத்து
சாலவும் பல கற்றுத் தேர்ந்து
குன்றாத சிகரம் என உயர்ந்து நின்று
குத்துவிளக்காக என்றும் சுடர்விட்டெரிவீர்கள்.

*உங்கள் பாசத்துடன் நினைவுகூரும்:*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*"இராஜஸ்தலம்"*
*அல்வாய்.*
(11481)

## சாவகச்சேரி லயன்ஸ் நலத் திட்டங்கள் நாளை ஆரம்பம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள நலத் திட்டங்கள் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி யாழ்வலய பிராந்திய தலைவா லயன் டாக்டர் க.கதிர்காமநாதன் அவர்களால் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கழகத் தலைவர் லயன் செ.சுப்பிரமணியம் தலைமையில் சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக கழகச் செயலாளர் லயன் கா. சற்குணதேவன் தெரிவித்தார்.(ம-117)

## கட்டடப் பணிகள் பூர்த்தியாகும் நிலையில்

அரியாலை,டிசெ.7

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கென பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் தலைமை அலுவலகம் மற்றும் களஞ்சியம் போன்றவற்றின் அமைப்பு வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலகம், களஞ்சியம் என்பன தரைமட்டமாக்கப்பட்டிருந்தன.

தற்போது புதிதாக நிர்மாணிக்கப்படும் மேற்படி சங்கத்தின் புதிய கட்டடங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் தைப்பொங்கல் தினத்தன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளன என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-17)

## கசிப்பு எடுத்துச் சென்றவர் சிக்கினார்

விற்பனைக்கென பரலில் கசிப்பு எடுத்துச் சென்ற நபர் ஒருவர் சமூகச் சீரழிவைத் தடுக்கும் இளைஞர் குழுவினரிடம் கையும் மெய்யுமாக பிடிபட்ட சம்பவம் நீர்வேலி தெற்கு பூதர் மடம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பரலில் கசிப்பை எடுத்துச் சென்ற இந்த நபரை சமூகச் சீரழிவை தடுக்கும் இளைஞர் குழு துரத்திச் சென்றது என்றும், அந்தச் சமயம் பரலை கைவிட்டு, குறித்த நபர் தப்பிச் சென்று விட்டதாகவும் கூறப்பட்டது.

கசிப்பு இளைஞர்குழுவினால் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது.(எ-17)

## நெஞ்சை விட்டகலா 3 ஆண்டுகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அணைப்பில் |
|---|---|
| 30 - 12 - 1938 | 07 - 12 - 1999 |

**திருமதி சர்வேஸ்வரி சிவலிங்கம்**

*எம்மை விட்டு நீங்கி ஆண்டுகள் மூன்றானாலும்*
*எம் ஈரவிழிகள் இன்னும் காயவில்லை அம்மா!*
*உள்ளத்து உணர்வுகளெல்லாம் உறைய*
*உன் வருகைக்காய் நிதமும் ஏங்கித் தவிக்கிறோம்.*

*உங்கள் நினைவுகளுடன்:*
அன்புத் துணைவர்,
மகன், மருமகள்,
சகோதரி, பெறாமக்கள்.

*3ஆம் கட்டை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*


பஜாஜ்


பெருநாள் தினங்களில்

விசேட கொடுப்பனவுகள்



2002 நவம்பர் 15 முதல் - டிசெம்பர் 15 வரை
கோள்வனவுக் கட்டளை சமர்ப்பிக்கப்படும்
ஒவ்வொரு
பஜாஜ் முச்சக்கர வண்டியுடன்

ஒரு சோடி பக்கத் திரைகளும்
சிபில் வெத்தசிங்ஹ என்பவரால் ஓவியம் தீட்டப்பட்டு
சோரின் விக்கிரமசிங்ஹ என்பவரால் எழுதப்பட்ட
சிறார்களுக்கான புத்தகத் தொகுதியொன்றும்




இலவசம்!

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
த.பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175
பிராந்திய கிளை அலுவலகங்கள்: 174B, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134
27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027 50222
322, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488
நீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662
31 பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-2048/9 பக்ஸ்: 025-25050
தலாசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 04522389
இல. 116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527

# இந்த வார இராசி பலன்

## 08.12.2002 ~ 14.12.2002

**மகாதேவா ஜோதிடம்**

| | | | |
|---|---|---|---|
| | | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| சந். | | | |
| புத. | சூரி.▲ கேது | செவ். வெள். | |

**மாற்றம்:**

உத்தராடம் 4ஆம் பாதம் - மகரம் இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் சமாதான இலக்கு வெற்றிபெறும். ஆயினும் தெற்கே அரசியல்வாதிகள் குழப்பத்தை - சமயவாதிகளின் ஆலோசனைப்படி - செயற்படுத்துவார்கள். இந்தியாவின் கவனம் இலங்கை மீது திரும்பும். ஆலோசனைகள், கட்டளைகள் அவதிகளைக் கொடுக்கும். மனித உரிமைக்குரல் கேட்கும்.

மத்திய கிழக்கால் மேற்கு நாடுகளுக்குப் பொருள் விரயம். ஆனால், விட்டுக் கொடுக்காத்தன்மையால் அழிவுகள் மேலிடும். யுத்த நடவடிக்கைகள், பயமுறுத்தல்கள், தீவிரவாதச் செயற்பாட்டால் அழிவுகள் தொடர இடம் உண்டு. பசுபிக், இந்துசமுத்திர, அரபிக்கடல்களில் கொந்தளிப்பு ஏற்படும். காற்றமுக்கம், மழை வெள்ளத்தால் அழிவுகள் ஏற்பட இடம் உண்டு எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

விந்தை மிகுந்த உலகில் சந்தை வியாபாரம் போன்று எமது வாழ்வு கழிகின்றது. எம்மால் என்ன ஆக்கப்படுகிறது? எதை மக்கள் விரும்புகிறார்கள்? எதை நாம் கொடுக்கின்றோம், எடுக்கின்றோம்? தொழில் ஸ்தானத்தில துணிவு - மாறாட்ட கருத்து ஏற்படும். மனையில் பதற்றம் நிலவும். களவு போகும், தூரதேசச்செய்திகள் வரும் தலைப்பாரம், காய்ச்சல், வயிற்று வருத்தம் என்பன வரும். பாதுகாப்புத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை, சட்டத்துறை போன்றவர்களுக்கு நன்மை வரும். மாணவர்களுக்கு நன்மையான மாற்றங்களைப் பெரியவர்கள் செய்து தருவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன் (காலை).*

### இடபம்

சமாதானம் ஒரு நல்ல முடிவைத் தரும் என நாம் நம்புவதுபோல சில துன்ப நிகழ்வுகளும் வருங்காலத்தில் நடக்காது என நம்பமுடியாது. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். பணத்தட்டுப்பாடுவரும். துரோக சிந்தனை வரும். போட்டிகள் உருவாகும். எதிர்ப்பாலாருடன் கவனமாக இருக்கவும். செய்யாத செயலுக்காக குற்றவாளியாக்கப்படுவீர்கள். மாதா வழியினால் தொல்லைகள் ஏற்படும். பிறசர், கைகால் உளைவு ஏற்படும். தொண்டை நோ வரும். மாணவர்களுக்கு நல்லதல்ல. இசைத்துறை, சட்டத்துறை, ஹோட்டல் துறை, பண்ணைத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்(காலை).*

### மிதுனம்

எமது நாட்டிலேயே திசை மாற்றம், பூமி மாற்றம் என பேதங்கள் உண்டு. அதை நாம் அவ்வப்போது அறிந்து செயற்பட வேண்டும். அதே போன்று தொழில் ஸ்தானத்திலும் பல பேத உணர்வுகளுடன் உள்ளவர்களால் உங்களுக்குத் தொல்லைகள் வந்துகொண்டேதான் இருக்கும். வெற்றி, தோல்வி, கௌரவம், அவமானங்களை தாங்கி நடவுங்கள். தூரத்துச் செய்தி வரும். திடீர் பிரயாணம், சகோதரர்களுடன் வாக்குக்கலகம், வீட்டுச் செலவுகள் அதிகரித்தல் என்பன ஏற்படும். வாய்வு, நரம்புச் சோர்வு, பித்தரோகம் என்பனவும் கொடுக்கும். மாணவர்கள் நல்ல சித்திகள் பெறுவர். பாதுகாப்புத்துறை, வியாபாரம், பத்திரிகைத்துறை, செய்தித் துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன் (காலை).*

### கடகம்

ஆக்கம் பிழையாயின் திருந்தி, திருந்தி வாழவேண்டும். அதற்காக பிழைகளை நியாயப்படுத்தக் கூடாது. மனிதர்கள் பிழை விடுவது இயற்கை தானே. தொழில் ஸ்தானத்தில் பல மாற்ற நிகழ்வுகள் நடக்கும். அயலவர்களுடன் நிதானமாக இருக்கவும். பிறசர், காய்ச்சல், கைகால் விறைப்பு, தலைப்பாரம் என்பன வரும். மாணவர்களுக்கு பல நன்மைகள் ஏற்படும். திடீர் பிரயாணங்களால் சிலருக்கு நன்மைகள் ஏற்பட இடமுண்டு. அச்சுக்கலை, மின்சாரத்துறை, புத்தகத் துறை, அரசியல்துறை, சட்டத்தறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### சிங்கம்

நல்லவர்கள் பல துன்பங்களைச் சுமக்கின்றார்கள் ஏன்? ஒரு நல்லவர் என்பதைக் காட்டுவதற்காகவா? அல்ல. தர்மத்தை இந்த உலகத்தில் நிலைப்படுத்துவதற்காகவாகும். தொழில் ஸ்தானத்தில் பலதும் நடக்கும். உங்கள் நிலையில் உறுதியாக இருங்கள். உண்மையும், தர்மமும்தான் இறுதியில் வெற்றிதரும். தூரத்துச் செய்திகள் மனநிறைவைக் கொடுக்கும். பொருள் செலவு, பிரயாண யோசனை, புதியவர்களின் உதவிகள் என்பன ஏற்படும். சளித்தொல்லை, தலைப்பாரம், கை, கால் உளைவுகளும் வரும். மின்சாரத்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம்.

*அதிர்ஷ்டநாள்: புதன், (காலை).*

### கன்னி

குறை கேட்காத மனிதர்கள் இல்லை. அதற்காக அடுத்தடுத்து பல துரோகங்களைச் செய்துகொண்டிருக்கும் பலரால் எத்தனை பேருக்குத் துன்பம்? தொழில் ஸ்தானத்தில் பல போட்டிகள் வரும். எதிர்ப்பாலாரின் அச்சுறுத்தல்கள், ஆக்கிரமிப்புக்கள் தொடரலாம். பொருள் கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். தூரத்துச் செய்திகள் மகிழ்ச்சி கொடுக்கும். பெற்றோர் வழிச சகோதரங்களுக்கு உடல்நிலைத்தாக்கம் ஏற்படும். சளி, வாய்வு, விறைப்பு, பிடிப்பு என்பன கொடுக்கும். சகோதர வழியினருக்கு மாற்றங்கள் கொடுக்கும். பிரயாணத்துறை, சந்தைத்துறை, குருத்துறை, செய்தித்துறை போன்றவர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்: புதன்(காலை).*

### துலாம்

தவறுகள் ஏன் ஏற்படுகின்றன? அதிக வேலையாலும், அசதியீனங்களாலும், களைப்பாலும் வருகின்றன. கட்சி மாறுவதும் தவறுகளும் எங்கும் சர்வசாதாரணமாக நடக்கின்றன. தொழில் ஸ்தானத்தில் இவைகள மலியும். போக்குவரத்தில் கவனம் தேவை. பொருள் தவறலாம். புதிய செய்திகள் வரும். புதிய பொறுப்புகளைப்புத் தரும். நாரி உளைவு, சளித் தொல்லை, அடிக்கடி பய உணர்வு என்பன கிரக நிலையால் ஏற்படும். அட்டமத்துச் சனி மன வெறுப்பை அடிக்கடி கொடுக்கும். பிரயாணத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை, அரசியல்துறையிருக்கு மாற்றங்கள் வரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன் (காலை)*

### விருச்சிகம்

நல்லவற்றை நாடுவதும், கெட்டவற்றை விலக்குவதும் உயிரினத்தின் உற்பத்தி காலத்திலிருந்து உணர்வுகளால் வெளிப்படுவதுபோல தொழிலிடத்தில் நல்லவற்றை அடிக்கடி நாடுவீர்கள். கெட்டவற்றை வெறுப்பீர்கள். எதிர்ப்பாலாருடன் போட்டி, ஏமாற்றங்கள், பொருள் இழப்பு, இடமாற்றங்கள் என்பன ஏற்படும். தொண்டை நோ, சளி, கைகால் உளைவு என்பனவும் பிரயாணத்துறை, இரும்புத் துறை, சாய்ப்புச் சாமான், புடைவை வியாபாரத்துறை, மருந்து, பாதுகாப்புத்துறையினர்களுக்கு நன்மை ஏற்படும். மாணவர்களுக்குப் பல நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன்(காலை).*

### தனுசு

கலகம் பிறந்துதான் நியாயம் பிறக்கிறது. மௌனத்தால் பல உண்மைகள் மறைக்கப்படும். ஆனால், உண்மைகளை எவரும் மறுக்கமுடியாது. தொழில் ஸ்தானத்தில் மாற்றங்களும் அடிக்கடி படபடப்பான சம்பவங்களும் நடக்கும். எதிர்ப்பாலாரால் கலகம் ஏற்படும். அயலவர்கள் உதவி செய்வார்கள். பிரயாணத்தில் பொருள இழப்பு வரலாம். கைகால் உளைவு, தொண்டை வருத்தம், சளித் தொல்லை தரலாம். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். நண்பர்களும் உதவி செய்வார்கள். போக்குவரத்துத்துறை, வைத்தியத் துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு திங்கள், புதன்(காலை).*

### மகரம்

உலகத்தில் எல்லாம் கலந்துதான் உள்ளது. எதையும் தனித்தும் - தவிர்த்தும் பார்க்கமுடியாது. இறுதியில் அன்பு மயமாகிறது. தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். பொறுமையாக இருக்கவும். சக ஊழியர்களால் தொல்லைவரும். பிரயாணத்தை தவிர்க்கவும். பொருள் செலவு, உடல நிலை பாதிப்பு என்பன வர இடம் உண்டு. அதிகாரிகளாலும், அரசியல் வாதிகளாலும் உதவிகள் கிடைக்க வாய்ப்புண்டு. மாணவருக்கு நன்மை, தீமை கலந்து நடக்கும். கால்பிடிப்பு வருத்தம், மூட்டு வலி வாதம், நரம்பு நோ, மனக் குழப்பம் வரும். மருந்துத் துறை, அரசியல்துறை, குருத்துறை, சந்தை வியாபாரம் போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### கும்பம்

அளவுக்கு மீறிய வேலைப்பளு ஒருவருக்கு வந்துவிட்டால் அதைச் சாதிக்கமுடியாமல் பலரிடம் குறை கேட்க நேரிடும். என்ன செய்வது? எதையும் தாங்கிக்கொள்ளவும் தொழில் ஸ்தானத்தில் பூரணமனத்திருப்தி இராது. புதிய பொறுப்புக்கள் மாறி மாறி வரும். புதிய பொருள் வரும். அதிகாரிகளின் உதவி கிடைக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். நெஞ்சு நோ, சளித்தொல்லை, கால் வருத்தம்,தலைப்பாரம் காய்ச்சல் என்பன வர இடம் உண்டு. மின்சாரப் பகுதி, பாதுகாப்புப்பகுதி குருத்துறை, வியாபாரத்துறை போன்றவர்களுக்கு மாற்றங்கள், நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### மீனம்

அடிக்கடி இடம் மாறுவதனால் இந்த உலக உழைப்புக்களைச் சற்றுத் தணிந்து உலகப் பிடிப்பு ஏற்படுவது இயல்பாகின்றது. தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிவீர்கள்.இரகசியங்களைக் காப்பாற்றவும். தாயாருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். இடமாற்றம், பிரயாணம், பொருள்தவறுதல், அடிக்கடி உடல் களைப்பு, கால் பிடிப்பு, நாரி நோ என்பன ஏற்படும். மாணவர்களுக்கு விஷேட சித்திகள், பெரியவர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். பாதுகாப்புத்துறை, குருத்துறை மருந்துத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 02 - 04 - 1945



உதிர்வு 05 - 11 - 2002

### அமரர் பொன்னையா தனபாலசிங்கம்

**திதி: 08.12.2002**

எமது பெரும் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரியவராக இருந்து குடும்பத்தின் தலைவராக எம்மையெல்லாம் பாதுகாத்து வந்த அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து மாதம் ஒன்றாகியும் தங்களின் பிரிவால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து நாம் சிறிதும் ஆறுதல் பெறவில்லை. எத்தனை வருடங்கள் சென்றாலும் தங்களை ஞாபகத்தில் வைத்திருப்போம்!

*தங்களின் ஆத்மா பரிபூரண சாந்தி அடைவதாக!*

அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டி இன்று (07.12.2002) சனிக்கிழமையும் சபிண்டீகரணம் நாளை (08.12.2002) ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். இக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

தங்கள் வரவை நாடும்:
மறைந்த தலைவரின் மனைவியும்
மக்களும்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (11498)


# யாழ். வீதி கிளிநொச்சியில்

# அறுசுவையகம்

## (பழைய வைத்தியசாலை முன்பாக)

* யாழ்ப்பாணம் - கொழும்பு நெடுஞ்சாலையில் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் அறுசுவையகம்
* உழைத்துக் களைத்துவரும் உள்ளங்கட்கு மகிழ்வுடன் அரவணைத்து அவரவர் விருப்புக்கு ஏற்ப உணவு வகைகளை உடனுக்குடன் தயாரித்து வழங்கக் காத்திருக்கின்றது யாழ். வீதி, கிளிநொச்சியில் அறுசுவையகம்

அத்துடன் தங்கள் இல்லங்களில் நடைபெறும் விசேட மற்றும் நிகழ்வுகளுக்குத் தேவையான உணவு வகைகளை முன்கூட்டியே பதிவுசெய்து நியாய விலையிலும், சுத்தமாகவும், தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்:

“அறுசுவையகம்”

(192)

ஜப்பானிய உதவி நிறுவனம் குற்றச்சாட்டு;

# அபிவிருத்தி நிதிகளை இலங்கை முறையாகப் பயன்படுத்துவதில்லை

## அரசு அக்கறையுடன் செயற்படுவதாக பிரதமர் பதில்

டோக்கியோ,டிசெ.7

இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சர்வதேச நாடுகளினால் வழங்கப்படும் நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. 2001 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஆயிரம் கோடி ஜப்பானிய யென்களில் ஆக 20 வீதம்மட்டுமே செலவிடப்பட்டுள்ளது என்று ஜப்பான் சர்வதேச கூட்டுறவு ஏஜென்ஸி நிறுவனத்தின் தலைவர் தக்காவோ கவாகமி குற்றஞ்சாட்டுகிறார்.

இக்குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த பிரதமர் ரணில்,உலக நாடுகளிடம் இருந்து கிடைத்த பல கோடி ரூபா பணம் இவ்வாறு செலவிடப்படாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் - இது தொடர்பாக இன்றைய அரசு பெரிதும் அக்கறையுடன் செயற்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் டோக்யோ இம்பீரியல் ஹோட்டலில் இடம்பெற்ற ஒரு சந்திப்பின்போதே ஜப்பானிய உதவி வழங்கும் நிறுவனத்தின் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டது. இந்த நிறுவனம் இலங்கைக்குப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது.

எவ்வாறாயினும், இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகள் வழங்கப்படும் என்று நிறுவனத்தின் தலைவர் உறுதியளித்தார்.

அந்த நிறுவனத்தின் அதிகாரிகளும், ஊழியர்களும் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடைய பாதுகாப்புத் தொடர்பாகவும் தக்காவோ கவாகமி கேள்வி எழுப்பினார்.

தற்போது இப்பிரதேசத்தில் பூரண அமைதி ஏற்பட்டுள்ளது. தமது பிரதேசத்தின் பாதுகாப்பில் புலிகள் ஆர்வத்துடன் செயற்படுகின்றனர். எனவே, பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லை என பிரதமர் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

வடக்கு - கிழக்கில் இந்த நிறுவனம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை எதிர்காலத்தில் நேரடியாகக் கண்காணிப்பதற்கு கொழும்பில் ஓர் இணைப்புச் செயலகம் அமைக்க இச்சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

இலங்கையில் அமைதியும் சமாதானமும் ஏற்பட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுவரும் முயற்சிகளைப் பாராட்டிய தக்காவோ கவாகமி, இலங்கை அரசு புலிகளுடன் நடத்திவரும் சமாதானப் பேச்சுக்கள் வெற்றி பெற வாழ்த்துவதாகவும் கூறினார்.

சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்ற இச்சந்திப்பு பயனுள்ளதாக அமைந்தது என்று பிரதமர் குறிப்பிட்டார். (எ)

## புளியங்கூடலில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

தீவக லயன்ஸ் கழக ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை புளியங்கூடல் சிறுவர் நலவாழ்வு நிலையத்தில் காலை 9 மணிமுதல் ஒரு மணிவரை இலவச மருத்துவமுகாம் நடத்தப்படவுள்ளது.

இந்த மருத்துவமுகாமில் எல்லா விதமான நோய்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்படுவதுடன் ஆலோசனைகளும் வழங்கப்படும். கண்பரிசோதனை செய்யப்பட்டு தேவையானவர்களுக்கு கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. (ம)

## வெள்ளத்தில் மூழ்கிய நெற்பயிர்கள்

கட்டுவன், வறுத்தலைவிளான் தொடக்கம் கல்லுண்டாய் வரையிலான வழுக்கியாற்றுப்பகுதி குளங்கள், வாய்க்கால்கள், மதகுகள் என்பன திருத்தப்படாமையால் அண்மையில் பெய்த மழையினால் வெள்ளம் தேங்கியுள்ளது.

வெள்ளம் மேற்கொண்டு செல்ல முடியாத நிலையில் தேங்கி நிற்பதால் இப்பகுதி நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

நீர் வாய்க்கால் தடைப் பலகைகளைத் திறந்து விடுவதன்மூலம் வெள்ளம் கடலுக்குள் செல்வதற்கு வசதி செய்து தருமாறு யாழ். நீர்ப்பாசன பொறியியலாளரை மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் கேட்டுள்ளது. (எ-152)

## சாவகச்சேரி நகரசபை விடுதியில் முப்பது அடி உயரமான காவலரண்

தென்மராட்சி,டிசெ.7

சாவகச்சேரி நகரசபை தொழிலாளர் விடுதியில் நிலைகொண்டுள்ள படையினர் கடந்தவாரம் 30 அடி உயர காவலரண் ஒன்றினை அமைத்துள்ளனர்.

தமது குடியிருப்புகளில் உள்ள படையினரை வெளியேற்றி தமது இருப்பிடங்களை மீட்டுத்தருமாறு நகரசபைத் தொழிலாளர்கள் தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் நகரசபைத் தலைவர் ஆகியோருக்கு மகஜர் வழங்கி இருந்தனர். தமது கோரிக்கைக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளத் தவறின் மறியற் போராட்டம் நடத்துவோமெனவும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

அதன் பின்னரே உயரமான காவலரண் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)



யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் அண்மையில் சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் விழா நடைபெற்றது. வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கான சிறந்த விவசாயியாகத் தெரிவுசெய்யப்பட்ட சண்டிலிப்பாய் மேற்கு - மத்தி விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் ஆ.கதிரவேலு அவர்களுக்கு வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் பரிசில் வழங்குவதைப் படத்தில காணலாம். *(படம்:சண்டிலிப்பாய் செய்தியாளர்.)*

## குடாநாட்டில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி ஆராய்வு

யாழ்பாணம்,டிசெ.7

குடாநாட்டில் மேற்கொள்ளவேண்டிய புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் யாழ்செயலக அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் ஆராய்ந்தனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆசிய - பசுபிக் பிராந்திய சமூக சேவைகள் பிரிவுப் பணிப்பாளர் எட்வேட் ஹக், சிரேஷ்ட கல்வி ஆலோசகர் வில்லியம் லொக்ஸி ஆகியோரே யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

யாழ்.செயலகத்துக்கு விஜயம் செய்த அவர்கள் அரச அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இங்கு மேற்கொள்ளவேண்டிய அவசரப் பணிகள் குறித்துக் கேட்டறிந்தனர்.

யாழ்.பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றுக்கும் சென்று அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

வங்கியின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை ஆகியவற்றையும் அவர்கள் பார்வையிட்டனர்.

குருநகர் பாஷையூர் பகுதிகளில் சுகாதார நிலைமையையும் அவர்கள் நேரிற்கண்டறிந்தனர்.

தமது வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் குறித்துத் திருப்தி தெரிவித்த அவர்கள், எதிர்காலத்தில் பலவிதமான உதவிகளை வழங்கவிருப்பதாகவும் கூறினர். (ம-3)

## விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சிப்பாய்க்கு வயது 18ஐ விடவும் குறைவு

### ஒப்புக்கொள்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு,டிசெ.7

கடந்த ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி விடுதலைப் புலிகளின் யாழ். அரசியல்துறை அலுவலகத்தில் சரணடைந்த இராணுவச் சிப்பாய் போலிச் சான்றிதழைச் சமர்ப்பித்தே இராணுவத்தில் இணைந்துள்ளார். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வயது குறைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் யாழ்.அலுவலகத்தில் அண்மையில் சரணடைந்தார் என்ற விடயம் பற்றி வெளிவந்த பத்திரிகைச் செய்தி பலரது கவனத்தையும் ஈர்த்தது.

குறிப்பிட்ட ஏ.ஆர்.ஜயவர்த்தன என்ற இந்தச் சிப்பாய் இராணுவத்தில் சேர்வதற்கான நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்த பிறப்புச் சான்றிதழின்படி அவர் 18 வயதிற்கு மேற்பட்டவராகவே கணிக்கப்பட்டார். அதன்படி, இது சம்பந்தமான அறிக்கை ஒன்றும் பிரசுரத்திற்காக பத்திரிகைப் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டது.

எனினும், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணையின்மூலம், குறிப்பிட்ட இந்தச் சிப்பாய் இராணுவத்தில் சேர்வதற்காகப் போலியான பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பித்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

உண்மையான பிறப்புச் சான்றிதழின்படி அவர் 1985 ஜனவரி 26ஆம் திகதி பிறந்தவர். ஆனால், போலிச் சான்றிதழில் அவர் 26 ஜனவரி 1983 இல் பிறந்தவர் எனக் காட்டப்பட்டுள்ளது.

2001 மார்ச் மாதம் 17ஆம் திகதி இராணுவத்தில் சேர்ந்த இவர், 2002 ஒக்ரோபர் 27ஆம் திகதி புலிகள் அமைப்பிடம் சரணடையும்வரை கடந்த தனத்துடனேயே இராணுவத்தில் இருந்துள்ளார்.

அவரது கபடத்தனம் காரணமாக அவர் இராணுவச் சட்டத்திற்கமைய இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். அதேசமயம், இவ்வாறான கபடத்தனத்திற்காக அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுகின்றது - என்றுள்ளது. (ம-3)

ஒஸ்லோவில் கேணல் கருணா கருத்து

## புரிந்துணர்வு உடன்படிக்கையில் படையினருக்கு நம்பிக்கையில்லை

### உயர்பாதுகாப்பு வலயங்கள் அதையே காட்டுகின்றன

ஒஸ்லோ,டிசெ.7

உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறிக்கொண்டு சிலபகுதிகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இராணுவத்தினர் கொண்டுள்ள நம்பிக்கையீனத்தையே காட்டுகின்றது.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா தெரிவித்துள்ளார்.

மூன்றாம் சுற்றுப்பேச்சுக்களின் முடிவில் ஒஸ்லோவில் வைத்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு, அளித்த விசேட பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில், இன்னமும் வடக்கு - கிழக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறாமல் இருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தம்மீதான இராணுவத்தினரின் நம்பிக்கையீனத்தையே காட்டுகின்றது.

அதாவது, இத்தகைய செயலானது புலிகள் தாக்கினால் தம்மைப் பாதுகாக்கமுடியாது போய்விடும் என்று இராணுவத்தினர் கருதுவதையே காட்டுகின்றது.

மட்டக்களப்பில் உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக ஒரு தளர்வு நிலை காணப்படுகின்றபோதிலும், குடாநாட்டைப் பொறுத்தவரையில் இன்னமும் இறுக்கமான நிலையே இருந்துவருகின்றது.



பிறமாவட்டங்களிலும், வெளிநாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள், மீண்டும் குடியமரமுடியாத வகையில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இந்த நிலை மாறவேண்டும்.

மேற்படி விவகாரம் குறித்து எதிர்வரும் 14ஆம் திகதி முகமாலைப் பகுதியில் இடம்பெறவிருக்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பின்போது முடிவு காணப்படும் என எதிர்பாக்கப்படுகின்றது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் எமது போராட்டத்துக்கு மிகவும் உறுதுணையாக இருந்துள்ளனர். தொடர்ந்தும் அவர்களது உதவி எமது போராட்டத்துக்கு அவசியம்.

ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த போராளிகள் பலர் உயிரிழந்துள்ளனர். அந்தக் குடும்பங்கள் உயர்வடைய புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் ஆதரவு வழங்கவேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். (எ-12)

## இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை

### அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.7

புலிகள் இயக்கம் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாட்டில் எந்த வித மாற்றமும் இல்லை. புலிகள் இயக்கத்துடன் ஒரே மேசையில் அமர்ந்து பேச்சுக்கள் நடத்த இந்திய அரசு தயாராக இல்லை.

- இவ்வாறு கூறினார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்திய விஜயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம)

# ஓடக்கரை வாய்க்காலை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.7

பருத்தித்துறை, ஓடக்கரை பெரிய வெள்ளவாய்க்காலைப் புனரமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புலோலி தெற்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகள் மற்றும் பருத் தித்துறையின் ஏனைய பகுதிகளில் இருந்துவரும் மழை வெள்ளம், ஒன்றுசேர்ந்து கடலைச் சென்றடையப் பயன்படும் இந்த வாய்க்கால் கடந்த 17 வருடகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது.

வாய்க்கால் புனரமைக்கப்படாததை அடுத்து தேங்கும் மழை வெள்ளம் அயலில் உள்ள குடிமனைகளுக்குள் புகுந்துவிடுவதாகவும் -

இதனால் மக்கள் அடிக்கடி இடம் பெயர்ந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவருவதாகவும் -

முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் - படையினர் அமைத்துள்ள பாதுகாப்பு வேலிகளும் இந்த வாய்க்காலூடாக செல்கின்றன என்றும் - இதுவும் வெள்ளம் தடைப்படக் காரணம் என்றும் - கூறப்பட்டது.

இதுகுறித்து பல்வேறு தரப்பினரிடம் முறையிட்டும் இதுவரை உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் - பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வாய்க்காலைப் புனரமைக்காமல் வருடந்தோறும் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது நிவாரணம் தருவது அர்த்தமற்றது என்றும் - மக்கள் தெரிவித்தனர். (எ-15)

## அதிபர் சங்க செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

வடமாகாண அதிபர்கள் சங்கச் செயற்குழுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிர்வாக சபையில் அங்கத்துவம் வகிக்கும் சகலரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர்கள் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (எ-12)

## இணைப்புக் குழு கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.செயலகத்தில் இன்று நடைபெறவிருந்த மாவட்ட இணைப்புக் குழுவின் கூட்டம் திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக செயலக பிரதித்திட்டமிடற் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார். (எ-10)


CHRISTMAS NEW YEAR SALE





நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
05.12.2002 முதல் 31.12.2002 வரை
சகல ஆடைத் தெரிவுகளுக்கும்
விசேட கழிவு வழங்கப்படும்
லைடன் புடைவை நிலையம்
(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2381 (சி-25200)



சிவாச்சாரிய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!
மங்களகரமான சித்திரபானு வருட கார்த்திகைத் திங்கள்
22ஆம் நாள் (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி தொடக்கம் 10 மணிக்குள் வரும் சுபவேளையில்
எமது புதல்வன்
செல்வகுமார் ஐயா அவர்களுக்கு
திருவருள் துணையுடன் வல்லை கப்பலுடைய விநாயகர் ஆலயத்தில்
சிவாச்சாரிய அபிஷேகம் நடைபெறவிருப்பதால் அனைவரும் வந்து
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தீட்சா குரு: பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியார்
பிரதம குரு, வல்லை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்
தங்கள் அன்பு வரவை நாடும்:
சிவஸ்ரீ, பஞ்சலிங்க குருக்கள்
குடும்பத்தினர்.
(11501)



அகல் பாதுகாப்பு சேவை
(பாதுகாப்பு அமைச்சில் அங்கீகரிக்கப்பட்டது)
பாதுகாப்பு உத்தியோகத்தர் வெற்றிடம்
1. உயரம் 5'5" (குறைந்தளவு)
2. மார்பு 34" (குறைந்தளவு)
3. கல்வி க.பொ.த சாதாரணம்
பொலிஸ், இராணுவ சேவையில் ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை
குறிப்பு: அண்மையில் பெற்ற கிராம அதிகாரியின் நற்சான்றுப் பத்திரத்துடன் 16-12-2002 இற்கு முன் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும்.
1220, பருத்தித்துறை வீதி
நல்லியங்காடு,
யாழ்ப்பாணம். (11480)
இயக்குநர்:
ரி.ஜெயரட்ணம் ஜே.பி
(முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர்)


## மரண அறிவித்தல்

### திருமதி நிமால் இரவீந்திரன் (ரோஸ்)

கோண்டாவில் அன்னுங்கையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிமால் இரவீந்திரன் (ரோஸ்) 30.11.2002 சனிக்கிழமை இங்கிலாந்தில் காலமானார்.

அன்னார் இரவீந்திரனின் அன்பு மனைவியும் நிசாந்தனின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யேசுதாசன், திருமதி ஏசு யேசுதாசன் அவர்களின் அன்பு மகளும் ஏஸ்டெல்லா, ஷிலஸ்டா, ஜோர்ச், ஏபிரகாம், மற்றில்டா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2002) சனிக்கிழமை இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (11499)

தகவல்:
சிறிபாலசிங்கம்
(மாமா)

## சட்டப்படி வேலை முடிவுற்றது

யாழ்ப்பாணம்,டிசெ.7

அகில இலங்கை சுகாதார எழுதுநர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டப்படி வேலை முடிவுற்றதையடுத்து, உத்தியோகத்தர் நேற்று முதல் வழமையான பணியில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைச்சருக்கும், சங்கத்திற்குமிடையில் ஏற்பட்ட சமரசப் பேச்சுக்களையடுத்து, சட்டப்படி வேலை இயக்கத்தை முடிவுக்குக் கொண்டுவருவதென முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய யாழ். போதனா வைத்தியசாலையில் சட்டப்படி வேலையைக் கடைப்பிடித்துவந்த அனைத்து சுகாதார சேவை எழுதுநர்களை இன்றுமுதல் கடமைக்குச் சமுகமளிக்குமாறு யாழ்.சுகாதார சேவை எழுதுநர் சங்கம் கேட்டுள்ளது. (எ-15)

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.போதனா வைத்தியசாலை துணைநிலை வைத்திய உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்தப்போராட்டம் நேற்றுமுன்தினம் கைவிடப்பட்டது.

வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டதை அடுத்து வைத்தியசாலைப்பணிகள் யாவும் வழமைபோல் நடைபெற்றன. (எ-15-ரி)

## வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் காட்சித் தொடரில், சரத்சந்திரர் எழுதிய நாவலை மையமாகக்கொண்டு உருவாக்கிய 'தேவதாஸ்' என்னும் தமிழ்த் திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.மாவட்ட இந்து இளைஞர் மன்றங்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் புனர்வாழ்வுப் பணிகள் பற்றியும், பேரவையின் பதின்மூன்றாவது தேசிய மாநாட்டை 2003 சித்திரைத் திங்களில் நல்லூரில் நடத்துவது என்பன பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளது என்றும் -

இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதிகளை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## வன்னியில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.7

வன்னி மாவட்ட நிர்வாக, நிறைவேற்றுப்பணிக்கு பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பளையிலுள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் விவரம்:

மு.கயல்விழி (கிளிநொச்சி), ச.போதினி (கிளிநொச்சி), செ.சதீஸ்குமார் (வவுனியா), க.குகதாசன் (சாவகச்சேரி), பே.தயாளன் (பருத்தித்துறை) சு.பிரபாலினி (உடையார்கட்டு), சி.பொன்விழி (முல்லைத்தீவு), சி.விவேகானந்தன் (கரவெட்டி), சபா.அதிரதன் (கொக்குவில்), க.சிவனேசன் (ஆனைப்பந்தி), மா.செல்வரட்ணம் (உடுப்பிட்டி), கு.ஆனந்தரூபி (ஓட்டுமடம்), பா.உமா (மாதகல்), ச.ராஜினி (சுன்னாகம்), சி.ரோகினி (யாழ்ப்பாணம்), ஜெ.ஜெசினி (சுண்ணாகம்), வி.நந்தகோபன் (மீசாலை), மு.கயல்விழி (யாழ்.), மொ.ஜெயசீலன் (யாழ்.), ஜெ.சுபாஜினி (கோண்டாவில்), சி.சகஜா (கொக்குவில்), செ.கலைவாணி(நல்லூர்), கு.தர்மினி.


விற்பனைக்கு உண்டு
ELF 350 வானின் (BODY) மரப்பொடியும், உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு. வேலை நேரத்தில் பார்வையிடலாம்.
அண்ணா பாம்,
எரேசன் றோட்,
இணுவில்.
(ஏ-25286)


## மக்கள் முகம்



அல்வாய் கிழக்கைச் சேர்ந்த திருமதி சாந்தரூபி ஞானச்சந்திரன் யாழ்.மாவட்டசமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டு அண்மையில் யாழ்.மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி எஸ்.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

எக்காளத்தொனி திருச்சபையின் மகளிர் ஆலோசகரும், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய ஆசிரியையுமான இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவியும் ஆவார். (எ-173)

★ ★ ★




குருநகரைச் சேர்ந்த அ.பிலிப் யாழ்.பிரதேச கலாசாரப் பேரவையினால் நடத்தப்பட்ட கலைஞர்கள் கௌரவிப்பின் போது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். திருமறைக் கலாமன்ற இயக்குநர் வண.பிதா நீ.மரியசேவியர் அடிகளாரால் பொன்னாடை போர்த்து பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1943ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி குருநகரில் பிறந்த இவர் தனது 14ஆவது வயதிலேயே நாடக நடிகனாக மேடையேறினார். அச்சமயத்தில் அருளப்பர் நாடகத்தில் போதனை கேட்கும் பொதுமகனாக நடித்தார். தொடர்ந்து 'கள்ளோ காவியமோ', 'நிராசை', 'சேரன் செங்குட்டுவன்' உட்பட பல நாடகங்களில் தோன்றி நடித்தார். பல நாடகங்களிலும், நாட்டுக் கூத்துக்களிலும் நடித்த இவர் நாட்டுக்கூத்து இயக்குநராகவும் செயற்பட்டவர்.

2001ஆம் ஆண்டில் குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட குருநகர் கலைஞர் கௌரவிப்பு வைபவத்தின்போதும் குருநகர் கலை அரங்கில் யாழ்.பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். (எ-51)

★ ★ ★



யாழ்.மாவட்டச் சாரண ஆணையாளர் ஹோரஸ் வி.மு.இராசசிங்கம் அண்மையில் யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ்.இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

உள்ளூராட்சிச் சேவையில் எழுதுநராக, நிறைவேற்று உத்தியோகத்தராக, நிர்வாக உத்தியோகத்தராக, செயலாளராக, விசேட ஆணையாளராகப் பாராட்டத்தக்க பணிகள் புரிந்த இவர், தற்போது ஓய்வுபெற்று சமூக சேவையில் ஈடுபட்டுவருகின்றார்.

குருநகர் கலைக்கழகத்தில் பொதுச் செயலாளராகவும், திரு இருதய சபை, திருப்பாலத்துவ சபை ஆகியவற்றின் தலைவராகவும், புனித வின்சென்டி போல் சபையின் உப தலைவராகவும் தற்போது விளங்குகின்றார்.

இவர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, கொழும்பு அக்குவயினஸ் சர்வகலாசாலைக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். (எ)

★ ★ ★



கடந்த 38 வருடங்களாக நாட்டில் பல்வேறு பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் சேவையாற்றிய வைத்திய கலாநிதி சிற்றம்பலம் இராஜலிங்கம் தனது சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

கண்டி, இரத்தினபுரி, அனுராதபுரம், மாகோ, புத்தளம், புதுக்குடியிருப்பு, வல்வெட்டித்துறை, மந்திகை, புங்குடுதீவு வைத்தியசாலைகளில் இவர் வைத்தியராகக் கடமையாற்றியிருந்தார்.

அச்சுவேலி தோப்புக் கிராம முன்னேற்றச் சங்க ஸ்தாபக உறுப்பினராக இருந்து சமூக சேவையில் ஈடுபட்டுவரும் இவர் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். (எ-8)

★ ★ ★



கரவெட்டி தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த கே.நாகமுத்து நீதி அமைச்சினால் யாழ்.மாவட்டச் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி எஸ்.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கரவெட்டி முன்கோடை முருகன் ஆலய பரிபாலன சபை உபதலைவராகப் பணியாற்றும் இவர், பரிபாலன சபையின் செயலாளராகவும் கரவெட்டி தெற்கு திருவள்ளுவர் சனசமூகநிலையத் தலைவராகவும், கட்டைவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். (எ-173)

## எழுத்தாளர், கலைஞர்கள் விவரம் திரட்டு

ஈழத்து எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் தொடர்பான விவரங்களைத் தொகுத்து ஆவணப்படுத்தும் முகமாகவும், இவ் விவரங்கள் அடங்கிய திரட்டு ஒன்றை நூலாக வெளியிடும் முகமாகவும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் விவரங்களைத் திரட்டி வருகிறது.

இதுவரை இது தொடர்பான தமது விவரங்களை அனுப்பிவைக்காத எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் இதற்கென வடிவமைக்கப்பட்ட படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு தமிழ்ச் சங்கம், இல.7,57 ஆவது ஒழுங்கை, உருத்திரா மாவத்தை, கொழும்பு - 06 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் மார்ச் மாதம் 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சங்க ஸ்தாபகதின விழாவுடன் நடைபெறவுள்ள ஈழத்து தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் மேற்படி விவரத் திரட்டு நூல் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## குளம் புனரமைப்பு வீணாகும் அபாயம்!

நல்லூர்,டிசெ.7

திருநெல்வேலி கிழக்குப் பகுதியில் உள்ள புதுவராயர் குளம் உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் ஆழமாக்கப்பட்டுள்ளது. இதனால் குளத்தில் இம்முறை அதிகளவு மழை நீர் தேங்கியுள்ளது. இதேவேளை குளத்தில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மண் அப்புறப்படுத்தப்படாமல் குளத்தின் கரையோரமாகவே குவிக்கப்பட்டுள்ளது. இக்குளத்திற்கு சுற்றிவர சிமெந்தினாலான அணைக் கட்டு இல்லாமையால் தற்போது அகழ்ந்தெடுக்கப்பட்ட மண் மூலமே அணை போடப்பட்டுள்ளது. இந்நிலையில் அடைமழை பெய்யும் பட்சத்தில் குளத்திற்கு வந்துசேரும் வெள்ளம் அதிகரித்து குளத்தின் நீர்மட்டம் உயரும். அப்போது மண் அணை உடையும் நிலை காணப்படுகிறது. அவ்வாறு உடைந்தால் குளத்திலிருந்து அகழ்தெடுக்கப்பட்ட மண் மீண்டும் குளத்துக்குள் சென்றுசேர வாய்ப்புண்டு.

குளத்தைச் சுற்றிவர சிமெந்தினால் குறிப்பிட்ட அடி உயரத்திற்கு அணை கட்டுவதன் மூலமே மேலதிக நீரை அங்கு சேமிப்பது சாத்தியமாகும் என அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர். (ஒ-ரி)



யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் 37ஆவது நினைவுநாள் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைத் தேசியக் கூட்டுறவுச் சபையின் தலைவர் லயனல் சமரசிங்க உரையாற்றுவதையும், நினைவுதினப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் அற்புதன்)

# மு.காங்கிரஸ் போட்டிக் குழுக்கள் கிழக்கில் களமிறங்கிவிட்டன

## ஹக்கீம் திருமலையில்; அதாவுல்லா நிந்தவூரில்

கொழும்பு,டிசெ.7

முஸ்லிம் காங்கிரஸின் போட்டிக் குழுக்கள் இரண்டும் கிழக்கிலே களத்தில் இறங்கிவிட்டன. மக்கள் முன்னிலையில் பலப்பரீட்சை நடக்கப் போகிறது. ஹக்கீம் குழு திருமலையில்; அதாவுல்லாகுழு நிந்தவூரில்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு பிரிவினரும் தமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களிடம் விளக்கிக் கூறுவதெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

இதன்படி இரண்டு பிரிவினரும் எதிர்வரும் நாள்களில் கருத்தரங்கு களையும் பொதுக்கூட்டங்களையும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடத்தவிருக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவர் மூதூரிலும் தோப்பூரிலும் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றவிருந்தார்.

தம்மை விட்டு விலகியிருக்கும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை மீண்டும் தம்முடன் இணைத்துக்கொள்ள வைக்கும் முயற்சியில் ஈடுபடவிருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் வாரங்களில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறார் என அறியப்படுகிறது.

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழுவினரும் தமது நிலைப்பாடு குறித்து மக்களிடம் விளக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

புதிய தலைவரான சுபைர்தீன் தலைமையில் இன்று நிந்தவூரில் கூட்டம் ஒன்றை நடத்த இக்குழுவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிகின்றது. (ஒ)

### முன்பள்ளிகள் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.மாவட்ட முன்பள்ளிகளை மேம்படுத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு முத்திரைச்சந்தையில் உள்ள முன்பள்ளி மூலவள நிலையத்தில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

# அரசைத் தோற்கடிக்க அநுரா புதிய திட்டம்

கொழும்பு,டிசெ.7

ஜே.வி.பி. உட்பட ஏனைய கட்சிகளுடன் இணைந்து இந்த அரசைத் தோற்கடிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சிக் கிளைகளின் சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவற்றைக் கூறினார். கூட்டத்துக்கு ஜனாதிபதி தலைமை வகித்தார்.

இச்சம்மேளனத்தின் தலைவியாக இருந்த ஜனாதிபதி சந்திரிகா அப்பதவியைத் துறந்திருக்கிறார். புதிய நிர்வாகிகள் தெரிவில் சம்மேளனத் தலைவராக அநுரா பண்டாரநாயக்க தெரிவுசெய்யப்பட்டார். (ஒ)


## உடன் தேவை

சீட்டை எழுதுநர் (பில் கிளாக்)

உடன் தேவை.

45 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.

தொடர்பு:-
சரஸ்வதி விலாஸ்
195, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (11508)

## துரித தபால்/பொதிகள் சேவை

இலங்கையின் எப்பாகத்திற்கும் 24 மணிநேர இடைவெளியில்

குறைந்த கட்டணம், பாதுகாப்பு, நம்பகத்தன்மை,

கையளிக்கப்பட்டதற்கான உத்தரவாதம்

மேலும் விபரங்களுக்கு: SRI MURUGAN AGENCY POST OFFICE

303, K.K.S Road, Jaffna. T.P: 021-2222670, Fax: 021-2223214, Email: del-smskr@eureka.lk

## பாராட்டி வாழ்த்துகிறோம்

இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படாதிருந்த
அளவெட்டிப் பகுதிக்கு
முழுநேர மின்சாரம் வழங்குவதற்கு
விடாமுயற்சி மேற்கொண்டு உதவிய
கௌரவ மாண்புமிகு
இந்து கலாசார அமைச்சர்
தியாகராஜா மகேஸ்வரன்
அவர்களைப்
பாராட்டி வாழ்த்துகிறோம்.

அளவெட்டி வாழ் மக்கள். (11504)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

06.12.2002 முதல்
விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த
"நேருக்கு நேர்"
காட்சி நேரம்: 11.00, 3.45, 6.00, (பி.நே)

## லக்ஷ்மி இணுவில்

அஜித் (9வேடங்களில்), வசுந்தராதாஸ், நக்மா நடித்த
சிட்டிசன் (ரீஸ்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே.) (11503)

## நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், தபு, சாஸி, கவுண்டமணி நடித்த
தாயின் மணிக்கொடி (ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேடகாட்சிகள் வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பி.நே.)
11 ஆம் திகதி முதல் செந்தூர தேவி (11496)

## ராஜா யாழ்ப்பாணம்.

அஜித் (இருவேடங்களில்), கிரண், மீனா நடித்த



வில்லன் (ரீஸ்ஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகமுத்து பொன்னம்மா

பெரியவிளானைச் சேர்ந்த திருமதி நாகமுத்து பொன்னம்மா அவர்கள் 05.12.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தங்கம்மா, செல்லம்மா, கனகம்மா ஆகியோரின் சகோதரியும் தவமணி (கனடா), விஜயரத்தினம் (இரத்தினம்), புஸ்பராணி (வவா), இராசமணி, தனலட்சுமி மற்றும் காலஞ்சென்ற மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஸ்ணபிள்ளை (கனடா), மஞ்சுளா, செல்வரத்தினம் (பாறின்), பாலசிங்கம், இராசரத்தினம் ஆகியோரின் மாமியாரும் தவேந்திரன் (கனடா), நந்தகுமார் (கனடா), லலித்தா (இந்தியா), ஜெயந்தி, சிவரஞ்சன் (லண்டன்), சுகந்தி, கேதீஸ்வரன், தர்சினி, ராஜ்குமார், சுரேஸ் மற்றும் காலஞ்சென்ற சுதாகர் ஆகியோரின் பேர்த்தியும் நிருசியா (கனடா), நிசாந்தன் (கனடா), கோபிராஜ், கல்பனா, பவித்திரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2002) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கள்ளியடைப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை. தகவல்: வவா (மகள்) (11506)

### கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 18A, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் அவர்கள் 04-12-2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் குணமணி அவர்களின் அன்புக் கணவரும் திருப்பதி, பரஞ்சோதி, சிவபாதலிங்கம், திலகவதி ஆகியோரின் சகோதரரும் கனகசுந்தரத்தின் மைத்துனரும் ரவிதாஸ் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான ஸ்ரீ றஞ்சினி உதயதாஸ் மற்றும் சிவதாஸ (பிரான்ஸ்), வனதாஸ், யசோ ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் விஜிதா (ஜேர்மனி), சசி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுந்தரதாஸ் ஆகியோரின் மாமனாரும் ஜேர்மனியில் வசிக்கும் றஜிதா, நஜிதா, கஜிதா மற்றும் பிரான்ஸில் வசிக்கும் அருந்தாஸ், அகில்தாஸ், அருளினி மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கஜமுகன், விவேகாஜினி, சுஜிதாஸ், விஜிதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

கடந்த வியாழக்கிழமை 05.12.2002 நடைபெறவிருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டு இன்று (07.12.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18A, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (11507)

தகவல்: குணமணி (மனைவி)

### முருகேசு செல்லையா ஆசாரி

(தாவடி)

அராலியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லையா ஆசாரி நேற்று (6.12.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் கமலாம்பிகை, இராசரத்தினம் (நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாக உற்பத்தியாளர்), ஞானம்பிகை, யோகராசா, பாக்கியலட்சுமி, பத்மசோதி, ஜெகசோதி, பவானி, தேவராசா ஆகியோரின் பாசமிகுதந்தையாரும் பத்மநாதன், இராசமணி, காலஞ்சென்றவர்களான கணேசு, இந்திரன், பத்மநாதன் மற்றும் சோமசுந்தரம், யோகராசா, மஞ்சுளா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.12.2002) சனிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காளிகோவிலடி,
தாவடி வடக்கு,
தாவடி.

தகவல்: பிள்ளைகள். (11502)




## இளவாலை ஆனைவிழுந்தான் தேவஸ்தானம்

### கஜமுக சங்கார விஞ்ஞாபனம்

காலம் : நாளை (8.12.2002) ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 5.00 மணி கஜமுக சங்காரம்
9.12.2002 திங்கட்கிழமை
பி.ப. 1.00 மணி பெருங்கதை உற்சவம்

கிரியைகள் : சிவகாம கிரிய தத்வ நிதி
சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்கள்
(ஆதீனகுரு)

கஜமுக சங்கார உபயகாரர்
அம்பாள் ரவல்ஸ் அன்ட் கொமினிகேஷன்
கும்பஸ் லேன், திருநெல்வேலி.
தொ.பே.இல. : 222 2742, 077 518319, 077 279205 (11505)

# உள்துறை, மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களை ஜனாதிபதி ஏற்பாரா? ஆலோசகர்கள் தூண்டுதல்

ஐ.தே.முன்னணி அரசின் இரு முக்கிய அமைச்சுக்களின் பொறுப்புக்களை கையேற்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சிக்கலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

- இச் செய்தியை வெளியிட்டிருக்கும் இணையத்தளம் ஒன்று செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

திறமையின்மையைக் காரணம் காட்டி உள்துறை அமைச்சையும் மக்கள் தொடர்பாடல் அமைச்சையும் ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும் என்று அவரது நெருங்கிய உதவியாளர்கள் ஆலோசனை கூறியிருக்கின்றனர். சில தினங்களுக்கு முன்னர் ஆனமடுவில் இடம்பெற்ற தாக்குதல் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்படாவிடின் ஜனாதிபதி, பொலிஸைக் கையேற்பார் என்று ஜனாதிபதியின் ஆலோசகரான அநுரா பண்டாரநாயக்க ஏற்கனவே எச்சரித்திருப்பது தெரிந்ததே.

பத்திரிகைச் சுதந்திரத்தில் தலையிடுகிறது என்ற அடிப்படையில் மக்கள் தொடர்பாடல் அமைச்சை ஜனாதிபதி கையேற்க வேண்டும் என்று ஏனைய ஆலோசகர்கள் கூறிவருகின்றனர்.

அவ்வாறு நடக்கும் பட்சத்தில் ஐ.தே.மு. அரசு செயற்படுவதில் கஷ்டங்களை எதிர்நோக்கும் எனவும் நாடாளுமன்றத்தில் அதன் பெரும்பான்மைப் பலம் ஆட்டம் காணும் எனவும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. (ஒ)

# தீர்வின் அடிப்படை குறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும்

## பொ.ஐ.மு.பேச்சாளர் வலியுறுத்து

கொழும்பு,டிசெ.7

அரசும் - புலிகளும் இணக்கம் கண்டுள்ள சமஷ்டித் தீர்வின் அடிப்படை குறித்து அரசு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்

- இப்படிக் கோரியுள்ளார் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம.

ஒஸ்லோவில் நடந்த பேச்சுக்களில் சமஷ்டி அமைப்பு மூலமான தீர்வு ஒன்றை எட்டுவது தொடர்பாக இணக்கநிலை ஏற்பட்டது குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கத்தை தமது முன்னணி வரவேற்பதாகவும் அவர் சொன்னார்.

"அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டது நல்ல விடயம். இணக்கம் காணப்பட்ட விடயங்களை மக்கள் முன் அரசு வைக்க வேண்டும்" - என்றார் அவர். (ஒ-3)

# கண்ணிவெடி அகற்றும் பணி மழையால் இடைநிறுத்தம்

நல்லூர்,டிசெ.7

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள வயல்வெளி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக உள்ள வயல் பிரதேசப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த கண்ணிவெடி மீட்புப் பணிகள் மழை வெள்ளம் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச 'ஹலோ ட்ரஸ்ட்' (Hallo Trust) நிறுவனத்தினால் மேற் கொள்ளப்பட்டுவந்த கண்ணிவெடி மீட்புப் பணிகள் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக - இவ்வயற் பகுதிகளில் தேங்கிநிற்கும் வெள்ள நீரினால் - இடை நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஒரு மாதகாலமாக இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த மீட்புப் பணியின் போது பல வெடி பொருளகள மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இப்பணி முன்கூட்டியே நிறைவு செய்யப்பட்டிருக்குமானால் இப்பகுதியில் பெரும்போக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியுமென விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் மழை பெய்துகொண்டிருப்பதனால் வெடிபொருள் மீட்புப் பணிகள் உடனடியாக மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியம் இல்லை என்று கூறப்படுகிறது. (ஐ-ரி)

## சந்தையில் தகராறு; ஒருவர் காயம்!

சந்தைக்கு பொருள்கள் வாங்கச் சென்றவர் அங்கு ஏற்பட்ட தகராறு ஒன்றின்போது இரும்புக் குழாயால் அடிபட்டு தலையில் படுகாயமடைந்தார்.

சுன்னாகம் சந்தையில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. இதில் லொறிச் சாரதியான சங்கானையைச் சேர்ந்த சபாரட்ணம் மகேந்திரம் (வயது 49) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இந்த நபர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான முயற்சிகள் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில் கடற்படையினர் இத்தகைய கட்டுமீறிய செயல்களை கட்டுப்படுத்தி புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வலுச்சேர்ப்பது தங்களது பாரிய பொறுப்பு என்பதனை வலியுறுத்துகின்றோம்.

இனியும் காலந்தாழ்த்தாது விரைந்து நடவடிக்கை எடுத்து கடற் படையினரை நெடுந்தீவில் இருந்து முற்றாக வெளியேற்றி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசமைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது. (ஒ-3)

## இந்தத் தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனச்சஞ்சலம் இல்லை.

இன்றைய நிலையில் அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்கு சம்மதித்து விட்டார்கள். இப்பொழுது எதிர்க்கட்சியினரின் தளத்தில் பந்து இருக்கிறது அதனை அவர்கள் எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பதில் தான் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

இந்தச் சமஷ்டித் தீர்வை நிச்சயமாக மக்கள் வரவேற்பார்கள்.(ஒ-4)

## அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெகுவாக வரவேற்றுப் பாராட்டினர்.

இது பலரும் எதிர்பார்க்காத சம்பவம். சமாதானம், நல்வாழ்வு ஆகியவற்றில் அக்கறை கொண்ட அனைவரையும் இரு சாராரினதும் இந்த இணக்கப்பாடு மகிழ்ச்சியில் ஆழ்த்தும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதில் விஷேசமாக நோர்வேயின் பங்களிப்பைக் குறிப்பிட்டு, அதற்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டார்.

அதேவேளை, இந்திய அரசு இந்த விடயத்தில் இன்னமும் வாய் திறக்காமல் மௌனம் சாதித்து வருகின்றது.

இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது தற்போது கூறுவதற்கு ஒன்றுமில்லை எனத் தெரிவித்தனர். நேற்று ரமழான் பண்டிகைக்காக இந்தியா முழுவதும் அரச விடுமுறை ஆதலால், அரச தரப்பில் மௌனம் கடைப்பிடிக்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெபால் ரெட்டி கூறுகையில் - இந்த ஒப்பந்தம் பற்றி முழு விபரமும் தெரியாத நிலையில் கருத்துக் கூறமுடியாது - என்றார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் எல்.கணேசன் இரு தரப்பினரதும் இணக்கத்தை வர வேற்பதாகக் கூறினார். எந்தவொரு பகுதியிலும் அமைதி திரும்புவது வரவேற்கத்தக்கதே என்றார் அவர்.

தி.மு.க.அவைத்தலைவர் எல். கணேசன் கூறுகையில் -

இரு தரப்பினரும் இணைந்து ஒரு முடிவை எடுக்கிறார்கள் என்றால் அது பாராட்டப்படவேண்டியது - என்றார்.

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி கூறுகையில் புலிகள் - அரசு இணக்கம் இது. மற்றைய கட்சிகள் இதில் கலந்து கொள்ளவில்லை இது ஜனநாயக ரீதியானது அல்ல எனவே ஆதரிக்கவோ வரவேற்கவோ முடியாது என்றார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் நல்லகண்ணு கூறுகையில் -

சமஷ்டி முறையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நல்லது இதுவே தமிழ் நாட்டுக்கும் நல்லது என்றார்.

மார்க்சிட் கம்யூனிஸ்ட் கட்சியின் டபிள்யூ.எல்.வரதராஜன் கருத்துத் தெரிவிக்கையில் - நாம் நீண்ட காலமாக வலியுறுத்திய தீர்வு பற்றியே இலங்கை அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் இணககம் காணப்பட்டுள்ளது. இது எங்களுக்கு மகிழ்ச்சியே என்றார்.

## விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனை அன்னையர் முன்னணித் தலைவி திருமதி செ.கனகாம்பிகை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை -

சர்வதேச மனித உரிமைகள் தினமான எதிர்வரும் 10ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் நடத்தவுள்ள மறியற்போராட்டம், யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

நேற்று மாலை யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் யாழ்.செயலகம் முன்பாகத் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் மறியற்போராட்டம் குறித்து ஆராயப்பட்டது. இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டியதன் அவசியம் குறித்தும் அங்கு வலியுறுத்தப்பட்டது. (ஐ-9)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தையும் உண்ணாவிரதத்தையும் தொடர்ந்து மேற்கொண்டுவரும் நூற்றுக்கணக்கான மக்களை எம்.பிக்கள் மூவரும் சந்தித்து அவர்களின் நிலை குறித்து கேட்டறிந்தனர்.

தங்களைக் கொடுமைப்படுத்தும் ஈ.பி.டி.பியினரை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று மக்கள் ஒரே குரலில் எம்.பிக்களிடம் கோரிக்கை விடுத்தனர். நெடுந்தீவு நிலைமை தொடர்பாக இதுவரை தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு விளக்கமளித்தனர்.

அதன்பின்னர் மூன்று எம்.பிக்களும் நெடுந்தீவு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர், கண்காணிப்புக் குழுப பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

ஜனநாயக ரீதியில் போராடி வரும் மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க பொலீஸார் முன்வர வேண்டும் என்று அவர்கள் பொலீஸ் அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுத்தனர். (ஐ-3-12)

## சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்குப் பிறகு ஈ.பி.டி.பியும் இதே கருத்தைத்தான் வலியுறுத்தி வந்துள்ளது. மத்தியில் கூட்டாச்சி மாநிலத்தில் சுயாட்சி, எக்காலத்திலும் பிரிக்கப்படமுடியாத வட - கிழக்கு ஓர் அலகு என்ற கோரிக்கையை முன்வைத்து அந்த அரசியல் இலக்கை நோக்கித் தான் ஈ.பி.டி.பியும் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த இணக்கப்பாட்டிற்கு புலிகள் வந்திருப்பது குறித்து நாங்கள் சந்தோஷம் அடைகின்றோம். ஆனால அது உண்மையாக இருக்க வேண்டும் - என்றார். (ஒ-4)

## இப்போது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை ஜனாபதிபதி ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

அரசு அவ்வாறாக உத்தியோகபூர்வமாக ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கும் பட்சத்தில் அதன் பின்னர் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி நாட்டுமக்களுக்குத் தெளிவுபடுத்துவார். இப்படி அவர் கூறினார்.

ஆரம்பம்
IBMS
Jaffna & Chavakachcheri
DIT & DBA
Ms Office + SLCDL
07-12-2002
701,K.K.S Road, Jaffna. Chankaththanai, Chavakachcheri.

உங்கள் அபிமானி
I.B.S கல்வி நிறுவனம்
★ தரம் 5 முதல் O/Lவரை
- நல்லூர் -
★ தரம் 1 முதல் O/L வரை
- சுண்டுக்குளி -
அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
(11470)

சிவமயம்
ஜோதிடம்
இந்திய பரம்பரை சாஸ்திரியார்
அருள் வாக்கு அம்பிகா அம்மா அவர்கள்
முதல் முறையாக யாழ். மாநகருக்கு வருகை தந்துள்ளார்கள்.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும். மற்றும் எந்தப் பிரச்சினைகள் ஆனாலும், ஜோதிட ரீதியாக சரிசெய்யப்படும்.
தொடர்புக்கு:
அருள் வாக்கு அம்பிகா அம்மா,
மடோனா லொட்ஜ்(லிங்கன் கூல்பார் அருகில்)
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
குறிப்பு:
ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை பார்க்கப்படும். (11442)

CIT
பொதுத் தகவல் தொழில் நுட்பம்
2004 க.பொ.த (உ.த) பிரிவு முதல் உயர்தர மாணவர்களுக்காக கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுத் தகவல் தொழில் நுட்ப பாடநெறியை யாழ். மாணவர்களுக்காக முதன் முதலாக அறிமுகப்படுத்திய எமது நிறுவனத்தில்
2005 பிரிவு மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன
ஆரம்பம் : 15 - 12 - 2002
காலை : 10.00 மணி
மாலை : 03.30 மணி
Computer College
கணனிக் கல்லூரி

IIS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் -2003
விண்ணப்பித்த, விண்ணப்பிக்க இருக்கும் மாணவர்களுக்கான அறிவித்தல்.
எமது புலமைப்பரிசில் திட்டத்தின்,
விண்ணப்ப முடிவுத்திகதி: 15.12.2002
தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்படும் திகதி: 20.12.2002
தெரிவுப் பரீட்சை நடைபெறும் திகதி: 29.12.2002
தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் திகதி: 02.01.2003
புலமைப்பரிசில் கற்கைநெறிகள்
ஆரம்பமாகும் காலப்பகுதிகள் : ஜனவரி 2003, மார்ச் 2003, மே 2003 யூலை 2003, செப்ரெம்பர் 2003
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதன் ஊடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.


உங்களுக்கு என்ன பிரச்சினை?
சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி
தென்னிந்தியாவில் இருந்து
முதல் முறையாக உங்கள் குறைதீர்க்கவந்துள்ளார்.
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப் பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
ராஜகுருசாமி
60/1 (112), TEMPLE ROAD(NEAR ICRC), JAFFNA.
T.P. 021-222-3804
(11490)

சாந்தி கணனிசார் சேவைகள்
எமது வழமையான சேவைகளான
கணனி டைப் செற்றிங், ஸ்ரென்சில் கட்டிங்
றோணியோ பிரதியாக்கம்
நவீன தொழில்நுட்பத்திலான பைண்டிங்
CD பிரதியாக்கம்
என்பவற்றுடன்...
Off-Set Printing சேவைகளை 08.12.2002இல் இருந்து வழங்க முன்வந்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
★ நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள், பாடசாலை உபகரணங்கள், அழகுசாதனப் பொருள்கள் என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(11395) "தரமான சேவையே எம் குறிக்கோள்"
150, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.